
கல்கி



KALKI 9-6-1968 40 காசு



தரத்தை மதிப்பீராயின், தரும் விலைக்குத் தக்க மதிப்பைத் தருவது ரெக்ஸ்!

எங்கள் ஸ்க்வாஷ்கள், சேர்த்தியிலும் சேர்த்தியானவை யாகப் பார்த்துப் பார்த்துப் பறித்த பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்டவை. பிறகு, தெள்ளிய தூய சீனிப் பாகும் வேறு பல விசேஷச் சரக்குகளும் சேர்க்கப்-பட்டவை. எனவே, சுவைத்தறியாப் புத்துணர்ச்சி தரும் பான மாக உங்களை அடைகிறது ரெக்ஸ்.




கார்ன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பம்பாய்-1.

Bensons 1966A-TM


கல்கி

கீலக வைகாசி 27 .: ஜூன் 9

பொருளடக்கம்



←◀◀◀ படவிளக்கம் 6-ம் பக்கம் பார்க்க


இந்த அதிகப்படி சுமை வேண்டாமே!



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 ❑ இதழ் 45

வெளிநாட்டு இணைப்பும் உள்நாட்டு அழைப்பும்

ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய நாடுகளுடன் இந்தியா நட்பில் இணைந்து, பரஸ்பர உதவி புரிந்து கொள்ள வேண்டும் என்ற கருத்து நமது பிரதமருக்குத் தோன்றியிருப்பது ஒரு நல்ல அபிவிருத்தியாகும். சுதந்திர வாழ்முறையையும் ஆட்சியையும் விரும்புவோர் அனைவரும் இக்கருத்தை வரவேற்க வேண்டும். சமீபத்தில் ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து நாடுகளுக்குச் சென்று இக்கருத்தை வலியுறுத்திய ஸ்ரீமதி இந்திரா காந்தி வெகு நல்ல காரியம் செய்துள்ளார். உலகின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள ஜனநாயக நாடுகள் பாதுகாப்பும், முன்னேற்றமும், சுபிட்சமும், சுதந்திரமும் காண்பதற்கு இத்தகைய நட்புறவும், பரஸ்பர உதவியுமே இயற்கையான வழியாகும். எனினும் இந்நாடுகள் ஒன்றுக்கொன்று சமுத்திரத்தால் பிரிக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட நாடுகள் கெட்டியாக நட்புக் கொள்ள வேண்டுமாயின் அவை கடற்படையில் சிறந்த வலிவு வாய்ந்தவையா யிருக்க வேண்டும். அவ்வாறில்லாததால் இந்நாடுகளின் நட்புறவுக்கு உதவி செய்யும் வகையில் அமெரிக்கா போன்ற மகத்தான கடற்படை கொண்ட ஒரு பெரிய தேசம் இவற்றுக்குத் துணை நிற்க வேண்டும். இந்தியா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய மூன்று நாடுகளின் நட்பிணைப்பில் நான்காவது நாடாக அமெரிக்காவும் இடம் பெற வேண்டும். இதுவே இணைப்பின் முதுகெலும்பாக இருக்கும். வியட்நாமுடன் அமெரிக்கா நடத்தும் பேச்சுவார்த்தைகளின் முடிவு எப்படியாயினும், பசிபிக் மகா சமுத்திரத்தில் அமெரிக்காவின் கடற்படைச் சக்தி குன்றாமல் தொடர்ந்து நிற்கும். செல்வத்திலும் செல்வாக்கிலும் மகத்தானதாகத் திகழும் அமெரிக்காவைத் தென்கிழக்கு உலகம் தனது கூட்டுறவுத் திட்டத்தில் நிச்சயமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

எது எப்படியாயினும், சுதந்திரம் என்ற அடிப்படைக் கருத்தமைந்த நாடுகள் யாவும் அந்த அடிப்படையை விடாமல் ஒன்றுசேர்ந்தே இருக்க வேண்டும். நம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்காகவும், பிறரைப் பலப்படுத்துவதற்காகவும் நாம் எந்த முயற்சியை மேற்கொள்ளும்போதும் இதை மனத்தில் மறவாமல் கொள்ள வேண்டும். நடுநிலைமை என்று சொல்லிக் கொண்டு ஒரே சமயத்தில் இரண்டு குதிரைகளின் மீது சவாரி செய்வது ஆபத்து. இரண்டு ஆசனங்களின்மீது ஒரே சமயத்தில் உட்கார முயன்றால் இரண்டுக்கும் இடையில் விழுந்து அடிபட வேண்டியதுதான்.

நாம் உலகில் போர் நிகழுவதை விரும்பவில்லை என்பது வாஸ்தவம். சமாதான சக வாழ்வில் நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்பதும் உண்மை. என்றாலும் இதுகாரணமாக நமது நிலை என்ன என்பதை நாம் மறப்பதற்கில்லை. தங்களது ஜீவனையே அழித்துக் கொண்டு சர்வாதிகார ஆட்சிக்கு உட்பட்டுவிட்ட நாடுகளிடம்கூட நாம் நட்புக்கொண்டு ஒத்துழைப்பதில் தவறில்லை. ஆனால் சுதந்திரத்திலும் ஜனநாயகத்திலும் நமக்குள்ள நம்பிக்கையில் சிறிதளவையும் இழக்காமலே — உலக ஆதிக்கத்துக்காகக் கம்யூனிஸ்ட்கள் கொண்டுள்ள பேராசையை உஷாருடன் கவனிப்பதில் தளர்ச்சியுறாமலே — நாம் சர்வாதிகார நாடுகளிடம் நட்புச் செலுத்த வேண்டும். உலக சமாதானம், சகவாழ்வு ஆகிய கொள்கைகளின்மீது இவ்வாறு எல்லா நாடுகளுடனும் நட்புப் பாராட்டும்போதே நம் நிலை என்ன என்பதை உணர்ந்து, அதற்குரிய காரியங்களைச் செய்ய வேண்டும். அதாவது, கம்யூனிஸ நாடுகளிடம் விரோதம் பாராட்டாமலே அமெரிக்காவிடமிருந்து தகுந்த பலம் பெற வேண்டும்.

இரு தரப்புக்களாகக் கருதப்படும் அமெரிக்கா ருஷ்யா இரண்டுமே ஒன்று

சேர்ந்து அணு ஆயுதப் பரவலைத் தடுக்கத் திட்டம் கொணர்ந்திருக்கின்றனர். இந்த ஒப்பந்தத்தில் நாம் கையெழுத்திட்டால் அற்புதமாக இருக்கும். இது உலக சமாதானத்துக்கு உதவும் சக்தி வாய்ந்த முதற்படியாக அமையும். அதோடு அணு ஆயுதம் படைத்த நாடுகள் தமது ஆயுதக் குவிப்பை மறந்து போவதற்கும் இது வழி செய்யும். என்றோ ஒரு நாள் நாமும் தற்காப்புக்காக அணு ஆயுதம் உற்பத்தி செய்யும்படி நேரலாம் என்ற சிந்தனைக் குழப்பம் நம்மில் சிலருக்கு இருப்பதால், ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட முடியாத துரதிர்ஷ்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாமும் அணு ஆயுதம் தயாரிக்க வேண்டும் என்ற கருத்தை மனத்திலிருந்து அடியோடு விலக்க வேண்டும்.

மேற்சொன்ன கொள்கைகளை நாம் பின்பற்றினால், பாகிஸ்தானும் அதிலிருந்து அறிவு பெற்று நம்முடன் சேரும். நம்மைப் போலவே பாகிஸ்தான் மக்களும் ஜனநாயகம், சுதந்திர வாழ்வு ஆகியவற்றை விரும்புபவர்தாம். இந்திய சுதந்திர இயக்கத்தில் அவர்களும் பங்குபற்றியவர்கள் என்பதை மறப்பதற்கில்லை. தேசப் பிரிவினைக்கு முந்தைய பல்லாண்டுகளில் நாம் எந்த முன்னேற்றக் கருத்துக்களைத் தழுவி வளர்ச்சி பெற்றோமோ அதே மார்க்கத்தில்தான் இன்றைய பாகிஸ்தானியரும் நம்மோடு சென்றனர். தேசப் பிரிவினை என்பதேகூட முற்றிலும் மத வேறுபாட்டினால் ஏற்பட்டது என்று சொல்வதற்கில்லை. தாங்கள் சுதந்திர ஜனநாயகமாக இருக்க வேண்டும் என்ற ஆசை அளவுக்கு மீறி விஸ்தரிக்கப்பட்டதும் பிரிவினைக்கு ஒரு காரணம். எனவே, சுதந்திர வாழ்முறையை விரும்பும் பாகிஸ்தானுடன் நம் நட்பை வளர்த்துக் கொள்வது சாத்தியமே.

பிரதமரது ஆஸ்திரேலிய விஜயம் இவ்வாறு சுதந்திர நாடுகள் ஒன்று சேருவதற்குப் பெரிய நம்பிக்கையூட்டியுள்ளது. இதுவே இறைவனின் சங்கற்பமோ என்று எண்ணி நிறைவு கொள்ளலாம்.

இவ்வாறு சுதந்திர நாடுகளை ஒருங்கிணைப்பதில் இந்தியா முன் நிற்க வேண்டுமாயின், பூர்வாங்கமாக உள்நாட்டில் செய்தாக வேண்டிய அத்தியாவசியப் பணி ஒன்று உள்ளது. அதைச் சார்ந்ததே வெளிவிவகாரத்தில் பாரதத்தின் பணி. அதாவது, ஸ்ரீமதி இந்திராகாந்தி அவர்கள் ஆற்றலும் அநுபவமும் வாய்ந்தவர்களை எல்லாம் கொண்ட கட்சிப் பற்றற்ற ஒரு மகாசபை அமைவதற்குத் தைரியமாக முன்வர வேண்டும். தமது கட்சி அரசாங்கத்தின் இடத்தை — பார்லிமெண்டரிக் கட்சி ஆட்சியின் இடத்தை — கட்சிப் பற்றற்ற இம்மகாசபை பெறுவதற்கு இந்திராகாந்தி உதவ வேண்டும். நிகழ்கால மந்திரி சபை தனது அதீதமான வரிவிதிப்பால் தேசத்தின் வளத்தையெல்லாம் வறட்சியுறச் செய்து நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது. நமக்குப் புதுவழியைக் காட்டித் தைரியமூட்டும் அரசாங்கமே இன்றைய தேவை. சர்க்கார் செலவைக் குறைப்பதில் இப்போதேனும் தொடக்கம் செய்யாவிடில் குழப்பநிலை தீராது; விவேகமான ஆட்சியறிவுக்குப் பதில் சொந்த முன்னேற்றத்துக்கான தந்திரங்களை இனியும் கையாளுவது தகாது. நெருக்கடியின் தீவிரத்தை உணர்ந்து, தைரியத்துடன் புது வழியைப் பின்பற்ற வேண்டிய தருணம் இது. எந்த முடிவும் எடுக்காமல் மிதந்துகொண்டே இருப்பது பலன் தராது.

கட்சிப் பற்றற்ற சர்க்கார் அமைப்பதில் சமாளிக்க முடியாத பெருத்த சட்டச் சிக்கல்கள் இருப்பதாகத் தோன்றும். ஆனால் நெருக்கடி ஏற்பட்டுள்ள தற்சமயத்தில் எந்தச் சிக்கலையும் சமாளித்துவிட முடியும். பொருளாதாரத்திலும், அரசியலிலும் நாம் கண்டுள்ள சீர்குலைவு அசாதாரணமானது. வலு வாய்ந்த அந்நிய நாட்டின் படையெடுப்பைவிட இந்த உள்நாட்டுச் சீர்குலைவு ஆபத்தில் சிறியதல்ல. இப்போது கட்சிப் பற்றற்ற ஆட்சியை ஆதரித்துப் பல கட்சிக்காரர்களும் ஏகோபித்து ஒரு முடிவுக்கு வந்தால் சட்டச் சிக்கலைக் கடந்துவிடலாம். தேசத்தின் குழப்ப நிலை தீர்ந்தபின் மீண்டும் வழக்கமான சட்டத்துக்கிணங்கிய ஆட்சியைத் தொடங்கலாம். அர்த்தமற்ற பழைய பிரசார மந்திரங்களை மறந்து தமது அந்தராத்மாவின் குரலை ஸ்ரீமதி இந்திராகாந்தி கேட்பாராயின் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும். அரசியலிலும் பொருளாதாரத்திலும் ஆரோக்கியம் உண்டாக்குவதற்கு ஒரு புரட்சிகரமான முயற்சி தேவைப்படுகிறது. தேசத்தின் அழைப்பு இதுவே. இவ்வழைப்பை அறிஞர்களும், பற்பல துறைகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களும், தொழில் துறைத் தலைவர்களும் செவி மடுத்துத் தேசத் தேவை பூர்த்தி பெற உதவ வேண்டும். ஆகாயத்திலிருந்து அதிர்ஷ்ட மழை பெய்யும் என்று காத்திருப்பதில் பயனில்லை.



காமகோடியின் கருணைமொழி

பகல் என்றால் அதற்கு மாற்றாக ராத்திரி இருக்கிறது. வெய்யில் என்றால் மழை இருக்கிறது. ஜடம் என்றால் சித்து இருக்கிறது. இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு மாற்றுப் பொருள் இருக்கிறது. இதிலிருந்தே அழுக்கு மயமான ஜீவாத்மாவுக்கு மாற்றாக ஒரு பரிசுத்தப் பொருள் இருக்க வேண்டும்; துக்கமயமான ஜீவாத்மாவுக்கு மாற்றாக ஓர் ஆனந்த வஸ்து இருக்க வேண்டும்; காம க்ரோதங்களால் ஓயாமல் சஞ்சலிக்கும் ஜீவாத்மாவுக்கு மாற்றாகச் சித்தத்தில் கொஞ்சம்கூட அசைவில்லாத ஒன்று இருக்க வேண்டும் என்று தெரிகிறதல்லவா? அந்தப் பொருளைத்தான் பரமாத்மா என்கிறோம். அதனிடம் நாம் பக்தி செய்வது அதுவாகவே ஆகவேண்டும் என்பதற்குத்தான்.

மீண்டும் ஒரு விபத்து!

இப்போதெல்லாம் தினசரிப் பத்திரிகையைப் பிரிப்பதற்கே பயமாக இருக்கிறது. விடியும் வேளையில் எந்த ரயில் விபத்தைப் பற்றிப் படித்துக் கலங்க வேண்டுமோ என்று கவலையாயிருக்கிறது. எங்காவது ஒரு கூட்ஸ் தடம் புரளுவது; ஓர் என்ஜின் விழுவது; பிரயாணி வண்டிகள் மோதுவது என்பது சகஜமாகி வருகிறது. இதற்கிடையில் ரேணிகுண்டாவில் நேர்ந்த பயங்கர விபத்துச் செய்தி வந்துள்ளது. இயந்திரக் கோளாறுகளின்றி, மனித கவனிப்புக் குறைவால் விபத்து நேரிடுவது அதிகமாகி வருகிறது. எதனால் இவ்வாறு ஏற்படுகிறது என்பது பற்றிப் பீதிகரமான சந்தேகங்களும் பரவி வருகின்றன. ரயில்வே மந்திரி காரியாலயமும், ரயில்வே இலாகாவும் இவ்விஷயத்தில் ஆழ்ந்த கருத்துச் செலுத்தித் தீர்வு காண வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை விளக்கத் தேவையில்லை. உயிர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை இது. நாளுக்கு நாள் இதில் அவநம்பிக்கை ஓங்கச் செய்வது ஆட்சிக்கே அவமானம்.

மகான் எழுப்பிய மகாவிஷ்ணு ஆலயம்

“தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து” என்னும் ஆன்றோர் வாக்கிற்கிணங்க, தொண்டை நாட்டில் தோன்றிய மகான்களின் வரிசையில் சிறப்பிடம் கொண்டவர் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரவர்கள். பரமேசுவரனின் அவதாரமாக மதிக்கப்படும் அவர் எல்லா சாஸ்திரங்களிலும் தேர்ந்த ஞானமுடையவர். நூற்றி நான்கு நூல்களை இயற்றியதன் மூலம் வைதிக மதத்தை நிலை நாட்டியவர். சைவர்களும் வைஷ்ணவர்களும் உச்சி மேல் வைத்துக் கொண்டாடும் சமய சாஸ்திர நூல்கள் பலவற்றை வடமொழியில் இயற்றியவர். வேலூர் நகரைச் சுமார் நானூறு வருஷங்களுக்குமுன் ஆண்ட சின்னபொம்மன் என்னும் சிற்றரசர் தீக்ஷிதரவர்களின் பெருமையை அறிந்து ஆடகப் பொன்னால் அவரை அபிஷேகம் செய்து மகிழ்ந்தார்.

அந்தத் திரவியத்தைக் கொண்டு ஸ்ரீ தீக்ஷிதர் தம் ஜன்ம பூமியான அடையபலத்தில் ஸ்ரீபார்வதி சமேத ஸ்ரீகால கண்டேச்வர ஸ்வாமி தேவாலயத்தையும், ஸ்ரீ மஹாதேவி சமேத ஸ்ரீ வரதராஜஸ்வாமி தேவாலயத்தையும் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார். மேலும், அங்கு ஐந்நூறு மாணவர் வேதாந்தம் கற்க ஏற்பாடு செய்தார் என்ற வரலாறு இந்தத் தேவாலயக் கல்வெட்டுக்கள் மூலம் புலப்படுகிறது.

ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் ஸ்தாபித்த இரண்டு தேவாலயங்களும் காலத்தின் ஆட்சிக்குட்பட்டுச் சிதிலமடைந்தன. அவற்றில் ஸ்ரீ பார்வதி அம்பாள் சமேத ஸ்ரீகாலகண்டேச்வர ஸ்வாமி ஆலயம் சுமார் 15,000 ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பெற்று, ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் முன்னிலையில் மஹாகும்பாபிஷேகம் 1960ம் வருடம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களின் மற்றொரு கண்ணாகக் கருதப்பெறும் ஸ்ரீ மஹாதேவி சமேத ஸ்ரீ வரதராஜஸ்வாமி தேவாலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்து ஸம்ப்ரோக்ஷணம் நடத்தும்படி ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் உத்தரவு பிறப்பித்ததன் மீது இத்திருப்பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது ஸ்ரீ வரதராஜஸ்வாமி தேவாலய நிர்மாண வேலைகள் பூர்த்தி பெற்று விளங்குகின்றன.

நாளது வைகாசி மாதம் 31ந் தேதி (13–6–1968) காலை 7-30 மணி முதல் 8 மணிக்குள், மிதுன லக்னத்தில் ஸ்ரீ மஹாதேவி சமேத ஸ்ரீ வரதராஜஸ்வாமி தேவாலய மஹா ஸம்ப்ரோக்ஷணம் நடைபெறவிருக்கிறது.

இந்த ஸம்ப்ரோக்ஷணத்தில் ஆஸ்திகர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஸ்ரீபெருந்தேவித் தாயார் — ஸ்ரீவரதராஜஸ்வாமியின் கிருபைக்குப் பாத்திரர்களாகி, சகல மங்களங்களையும் அடைவாராக!

இத்திருப்பணிக்குத் திரவிய சகாயம் செய்பவர்கள் பின்வரும் முகவரிகளில் ஒன்றுக்குத் தொகை அனுப்பலாம்:

1. ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள், காஞ்சி காமகோடி பீடம் (முகாம்), ஹைதராபாத்.
2. எம். நீலகண்ட அய்யர், 14-31 எஸ்டாம்ஸ் சாலை, சென்னை—18.
3. கே. நீலகண்ட அய்யர், 4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1.

அட்டைப்பட விளக்கம்

இதயம் பேசுகிறது!

மலரின் மென்மையை மங்கையர்களின் உள்ளங்களுக்கு உதாரணமாகக் கூறுவதும், அதன் மலர்ச்சியை அவர்களுடைய முகங்களுக்கு ஒப்பிடுவதும், பூத்துக் குலுங்கும் மலர் வகைகளை மங்கையர் கூட்டத்துக்கு உவமையாக்குவதும் கவி மரபு. இவ்விதம் கல்கி அட்டைப் படத்தில் அமர்ந்திருக்கும் எழில் மங்கை தன் மலர்க் கரங்களில் வண்ண மலர்களை வைத்துக் கொண்டு என்ன செய்கிறாள்? மலர்களின் இதயங்களிலிருந்து வீசும் மணத்துடன் தன் இதயத்தில் கிடக்கும் ரகசியங்களைப் பகிர்ந்து கொள்கிறாளோ? அவள் முகத்தில் மலரும் மகிழ்ச்சி அதைத்தான் வெளியிடுகிறது.

வண்ணப் படம்: ரவீந்திர பல்லா

ராஜாஜியின் கருத்துக்கள்

குஜராத் சுதந்திரக் கட்சி அங்கத்தினர்கள் பச்சாத்தாபம் கொண்டிருப்பதாகவும், அவர்கள் உட்பூசலுக்கான ஆயுதத்தைக் குழி தோண்டிப் புதைத்து விடுவார்கள் என்றும் ஸ்ரீ எச். எம். படேல் நம்பிக்கை ஊட்டியுள்ளார். கட்சியின் மத்தியத் தலைமைக்கு அவர்கள் அடங்கி நடப்பார்கள் என்றும், தேசிய ரீதியில் கட்சி வளர ஒற்றுமையுடன் உழைப்பார்கள் என்றும் என்னிடம் ஸ்ரீ எச். எம். படேல் தெரிவித்தார். மத்திய பீடத்தின் உத்தரவை மீறியவர் எல்லோர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனினும் சுதந்திரக் கட்சி அதிகாரத்தில் இல்லாத ஒரு கட்சி என்பதையும், பலத்த இடர்ப்பாடுகளிடையே அது செயல்புரிய வேண்டியுள்ளது என்பதையும் கருத்தில் கொண்டு, கட்சிக் கட்டளையை மறுக்காதோருக்குத் தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. கட்சித் தலைவர் எவரும் ஆட்சேபிக்காத வகையில் இது செய்யப்பட்டுள்ளது.

மத்திய பீடம் மிகுந்த ஆதிபத்தியம் செலுத்துவதாக முன்பு பொதுவாக எண்ணப்பட்டது. ஆனால் இப்போதோ (சுதந்திரக் கட்சியில் சேராமலே ஸ்ரீ மஸானியின் தேர்தலுக்கு உதவி புரிந்த) ஸ்ரீ பாபுபாய் வைத்யாவை ராஜ்ய சபைக்குக் கட்சி வேட்பாளராக மத்திய பீடம் நிறுத்தி வைத்ததைக் குஜராத் ராஜ்யக் கிளை மதித்து நடத்திருக்க வேண்டும் என்ற உணர்வு பிறந்துள்ளது.

எத்தகைய அநுபவத்துக்கும் ஒரு மதிப்பு உண்டு. குஜராத்தில் ஏற்பட்ட சங்கடத்தாலும் நல்ல படிப்பினை உண்டாகும் என்று நம்பலாம். அதிகாரத்தில் நன்கு வேரூன்றியுள்ள ஆளும் கட்சியுடன் போராட வேண்டிய ஒரு தேசியக் கட்சி, குறைந்த பட்சம் சில ஒழுக்கக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றி ஒற்றுமையாகச் செயலாற்றினாலொழிய தடையை எதிர்த்து முன்னேற முடியாது. மனித நடப்புக்களில் உரசல்கள் ஏற்படத்தான் செய்யும். இருப்பினும், ஒற்றுமையை உண்டாக்கிக் கொண்டாலே முன்செல்ல முடியும்.

ஃஃஃ

பாரிஸில் நடப்பதைப் பார்க்கும் போது அமெரிக்கா — ஹனோய் பேச்சுவார்த்தைக்குச் சுபமான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தோன்றவில்லை. வியட்நாமிலிருந்து கிடைக்கும் செய்திகளும் நம்பிக்கையூட்டக் காணோம்.

ஃஃஃ

நதி நீர்ப் பங்கீட்டுச் சச்சரவு முதலிய பிணக்குகள் இருந்து கொண்டுதான் இருக்கும். இது போன்ற சச்சரவுகளைக் கிளப்பி விட்டாலொழிய மந்திரிகள் தமது ராஜ்ய வாக்காளர்களை மகிழ்விக்க முடியாது. சச்சரவுகள் இருப்பினும், மத்தியஸ்தத் தீர்ப்பை ஒப்புக் கொண்டு தாவாவை முடித்துக் கொள்வதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் இணங்க வேண்டும். இத்தீர்ப்புக்களை அரசாங்கங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே ஒழிய, இவற்றை மக்கள் விவாதிப்பதற்கு விடக்கூடாது. கட்ச் தீர்ப்பைக் குறித்து எழுப்பப்பட்டுள்ள கிளர்ச்சி அவமானகரமானது.

ஃஃஃ

''மோட்டார் தொழிலே எப்படி அபிவிருத்தி செய்யாமல் இருப்பது என்பதை உலகில் எவராவது கற்க விரும்பினால், அவர் இந்தியாவுக்கு வரலாம்'' என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (மே 31) கூறுகிறது. இதற்குத் தொழில் நுணுக்க அறிவுக் குறைவு பெருமளவுக்குக் காரணமாயினும், வரிப் பளுவின் பங்கையும் மறப்பதற்கில்லை. இத்தொழிலில் வெளிநாட்டுப் போட்டி முற்றிலும் இல்லை. தரத்தை உயர்த்தவேண்டும் என்றோ, உற்பத்தியை விரைவுபடுத்த வேண்டும் என்றோ உற்சாகம் கொள்ள முடியாத நிலையில் இன்றைய ஏகபோக்கியத் தயாரிப்பாளர்கள் உள்ளனர். மோட்டார் வாங்குபவர்களைக் காக்க வைத்துத் தரத்தில் குறைந்த பண்டத்தை அவர்கள் வாங்கும்படிச் செய்வது தயாரிப்பாளர்களுக்கு லாபகரமாக உள்ளது.

ஃஃஃ

டாக்டர் சூரியகாந்தா அவர்களின் தலைமையில் பல அறிஞர்கள் கூடித் தயாரித்துள்ள 'சம்ஸ்கிருதோதயம்' என்ற பாட புத்தகத்தின் ஒரு பிரதியைத் தில்லி கல்வி இலாகாவினர் அன்புடன் அனுப்பி வைத்திருக்கின்றனர். மிகுந்த கவனிப்புடன் புத்தகம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை. அ

புத்தகத்தைப் பிரித்தவுடன் தைத்திரீய உபநிஷதத்தின் பிரசித்தி பெற்ற வாசகங்கள் முதற் பாடத்தில் தென்பட்டன. 'சத்தியம் வத' (உண்மை பேசு), 'தர்மம் சர' (அறத்தைக் கடைப்பிடி), 'மாத்ரு தேவோ பவ' (அன்னையைத் தெய்வமாகக் கருது) முதலிய வாசகங்கள். இவற்றோடுகூட 'ராஷ்ட்ர தேவோ பவ' (தேசத்தைத் தெய்வமாகக் கருது) என்ற புதிய உபதேசத்தைப் பார்த்த போது தூக்கிவாரிப் போட்டது. உபநிஷதங்களிலிருந்து மேற்கோள் காட்டுகையில் சுதேசியத்தை இடைச்செருகலாக நுழைப்பது அபசாரம் எனக் கருதுகிறேன். அகில உலக மனப்பான்மைக்கே உபநிஷதங்கள் பெயர் பெற்றவை. சுய தேசத்திடம் மட்டும் கொள்ளும் பற்றுக்கு அவற்றில் இடமில்லை.

> பச்சிளம் குழந்தைகளுக்குத் தான் படம் பார்ப்பதில் எத்தனை ஆவல்! புத்தகத்திலுள்ள பறவை இனங்களைக் குழந்தைக்குக் காட்டுவதில் அந்தச் சகோதரி ஈடுபட்டிருக்கிறாள். குழந்தை கண் கொட்டாமல் பார்க்கும் காட்சியைப் பொருளடக்கப் பகுதியில் இடம் பெற அழகிய புகைப்படமாக எடுத்துத் தந்தவர்:
>
> **திரு எம். நடராஜன்**




பல்வேறு மதத்தவரும் பிற மதங்களையும் புரிந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்ற பெரு நோக்கத்தோடு வாஷிங்டனில் போடாமாக் நதிக்கரையில் ஓர் ஆலயம் உருவாக விருக்கிறது. இந்தக் கோயிலை நிறுவ அமைக்கப்பட்டிருக்கும் கமிட்டியின் தலைவராக ஸ்ரீமதி பி. கே. பிர்லா பணியாற்றுகிறார். பலப்பல நாட்டவருடைய ஒத்துழைப்புடன் உருவாக விருக்கும் ஆலயம் சூரியனின் வடிவில் ஆறு முக்கிய மதங்களை உணர்த்தும் வகையில் ஆறு கதிர்களுடன் திகழும். மற்ற பல மதங்களுக்கும் இங்கு இடமுண்டு. ஆனால் தொழுகை நடைபெறும் ஆலயமல்ல இது. பல மதங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள ஓர் அறிவுக் கூடமாகத் திகழும்.

இதற்கெல்லாம் பூர்வாங்கமாக டார்ஜிலிங்கில் அக்டோபர் 23 முதல் 26 வரை இவ்வாண்டு ஆன்மீக மகாநாடு நடைபெறுகிறது. இந்தப் பெரிய திட்டத்தின் இயக்குனரான கிபின்லே பி. டின் என்பவரும் அவரது மனைவியாரும் அண்மையில் சென்னைக்கு விஜயம் செய்திருந்தனர். ராஜாஜி, டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆகியோரைச் சந்தித்து அளவளாவினர். கல்கி காரியாலயத்துக்கு டின் தம்பதியர் வந்திருந்த போது ஆசிரியர் ஸ்ரீ சதாசிவம் டின் அவர்களை வரவேற்று கல்கி, சுயராஜ்யா மலர்களை அன்பளிப்பாக வழங்குவதைப் படத்தில் காணலாம்.

□

கணித மேதை ராமானுஜத்தின் நினைவு நாளையொட்டி இரு நூல்கள் மே மாதம் 12ந் தேதி கோகலே ஹாலில் வெளியிடப்பட்டன. ராஜாஜி, 'ராமானுஜம் - கடிதங்களும் நினைவுகளும்' என்னும் நூலை வெளியிட்டு முதல் பிரதியை ஸ்ரீமதி ராமானுஜத்துக்கு வழங்கினார். கணித மேதை ராமானுஜத்துக்கு நினைவுச் சின்னம் விரைவில் எழுப்ப விரும்புவதாக திரு பி. கே. சினிவாசன் அறிவித்தார்.





[இக்கட்டுரை ஆசிரியர் ஸ்விட்ஜர்லாந்தில், ஜினீவாவில் யோக போதகராக இருக்கிறார். 'யோகமும் தேகாரோக்கியமும்' (Yoga & Health) என்ற பிரசித்தி பெற்ற நூலை எழுதிய எஸ்டியன், எலிஸபெத் ஹெய்ச் ஆகியோருடன் சக ஊழியராக இருந்தவர். தமது பதினெட்டாவது வயதிலிருந்தே யோக சாதனை புரிந்து வருபவர். ஸ்ரீ காமகோடி பெரியவர்களின் பரிபூரண கிருபைக்குத் தாம் பாத்திரமானதை உள்ளமுருக்கும் வகையில் இங்கு விவரிக்கிறார்.

வைகாசி அநுஷத்தன்று (ஜூன் 10) நிகழும் ஸ்ரீ பெரியவர்களின் எழுபத்தைந்தாவது ஜயந்தியை முன்னிட்டு அவர்களை வணங்கி இக் கட்டுரையை வாசகர்களுக்கு வழங்குகிறோம். —ஆசிரியர்.]



காமகோடி ஸ்வாமிகள்

ராபர்ட் லால்ஸர்

இந்தப் புனித நாளில் புனித வாய்ப்பை நழுவ விடாமல் புனிதராகிய ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளுக்கு என் இதய பூர்வமான வணக்கத்தைத் தெரிவிக்கிறேன். அந்தரங்கசுத்தமுள்ள ஆன்ம சாதகர்கள் அனைவரின் நலனுக்காகவும், அடியார்களின் நலனுக்காகவும் அவரை ஆண்டவன் நம்மிடை நீண்டகாலம் வைத்திருப்பாராக! ஆன்ம சாதனையில் அடியெடுத்து வைத்து அவரது அடியவனான பாக்கியம் எனக்கு உண்டு. அவர் நமக்கெல்லாம் மிகவும் தேவைப்படுகிறார் என்பதை உணர்ந்திருக்கிறேன். கடந்த சில ஆண்டுகளாக எனக்கு நானே அடிக்கடி சொல்லிக் கொள்கிறேன்: 'ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள் என்று ஒரு வஸ்து உயிர் வாழ்கிறதே! இதற்காகப் பரமனிடம் எவ்வளவு நன்றி கூற வேண்டும்!'

ஆம், அவர்தான் பரம உத்தமமான பாரத ஜோதி!

ஃ ஃ ஃ

1961-ம் ஆண்டு நவம்பர் இறுதியில் நான் புனிதரைச் சந்தித்தேன். அது என்னுடைய மூன்றாவது இந்திய யாத்திரை. ஆன்ம ஒளி அளிக்கக்கூடிய உண்மையான ஆசாரியனைத் தேடி அதற்குமுன் இருமுறை நான் இந்தியாவுக்கு வந்திருக்கிறேன்; பல மாதங்கள் நாடு முழுவதும் சுற்றித் தேடி அலைந்திருக்கிறேன். மகான்கள் என்று சொல்லப்படும் பலரைச் சந்தித்தும் இருக்கிறேன். (இவர்களில் பலர் மேல்நாடுகளில்கூடப் பிரசித்தி பெற்றவர்கள்.) ஆயினும், என் இதயம் நிறைவு காணவில்லை.

'தெய்வ மனிதன்' என்கிற வியக்தியை நான் எப்படி உருவாக்கிக் கொண்டிருந்தேனோ, அந்தக் கருத்தின் அளவுக்கு இந்தப் பெரியவர்கள் எவரும் வரவில்லை. இந்தியாவில் இப்படிப்பட்ட தெய்வமனிதனே கிடையாதோ என்று ஐயப்படவும் தொடங்கிவிட்டேன். இருப்பினும் இன்னும் ஒரு சோதனை செய்துவிட வேண்டும், இன்னும் ஒரு தேட்டம் — இறுதித் தேட்டம் — போட்டுவிட வேண்டும் என்று முடிவு செய்துகொண்டு மூன்றும் முறை பாரதத்துக்கு வந்தேன்.

இம்முறை நான் வழக்கம்போல் ஆசாரியனாக விளங்கக் கூடியவர் பற்றிக் கேள்வி கேட்டும், விசாரணை செய்தும், பலரிடம் அவ்விசாரணையைச் சரி பார்த்தும் பொழுதைக் கழிக்கவில்லை. மௌனமாக மனத்தை ஒருமுகப்படுத்தி ஆண்டவன் எனக்கு வழி காட்ட வேண்டும் என்று பிரார்த்தித்தபடியே இருந்தேன்.

ஏனோ இம்முறை சென்னையிலிருந்து என் ஆசாரியனைத் தேடத் தொடங்க வேண்டும் என்று விரும்பினேன். நான் சரியான திசையில் அடியெடுத்து வைக்க எனக்கு இறைவன் வழிகாட்ட வேண்டும் என்று ஒரு நாள் வெகு தீவிரமாக ஒரு மணி நேரம் பிரார்த்தனை செய்தேன். அதன்பின் அறையை விட்டுக் கிளம்பிக் கடற்கரையில் உலவி வரப் புறப்பட்டேன். நான் தங்கியிருந்த ஹோட்

டல் ஹாலைக் கடந்து வருகையில் சற்றும் எதிர்பாராதவிதமாகத் தென் இந்தியர் ஒருவர் என்னிடம், ''நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் குருநாதன் இங்கிருந்து வெகு தொலைவில் இல்லை. அவர் பெயர்.....'' புனித ஸ்ரீ காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகளின் பெயரை அப்போதுதான் நான் முதல் முறையாகக் கேட்டேன்.

திடீரென்று கிடைத்த இந்தத் திசைகாட்டி என்னைத் திகைக்க வைத்தது. அதோடு ஓர் அவநம்பிக்கையும் இழையோடியது. எனினும் அந்தத் திசையைப் பின்பற்ற முடிவு செய்தேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக எனக்கு உதவி புரிய வந்த அந்த நல்ல மனிதருக்கு ஸ்வாமிகளின் முகாமைச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை. தென் இந்தியாவில் எங்கோ ஒரு சிறு கிராமத்தில் இருக்கிறார் என்று மட்டும் கூறினார்.

நான் விசாரித்தவர் எவருக்குமே ஸ்வாமிகளின் இருப்பிடத்தைச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை. கைக்கு அகப்படாமல் நழுவி நழுவி ஓடுகிற அந்த ஸ்வாமிகளைத் தேடியபடி நான் திருச்சிராப்பள்ளிக்கு வந்து சேர்ந்தேன். 'அவரை நாம் பார்க்கப் போவதே இல்லையோ?' என்று அப்போது நம்பிக்கை இழக்கத் தொடங்கி விட்டேன். இப்படி ஒரு ஸ்வாமிகளே இருக்க மாட்டாரோ என்றுகூட எண்ணலானேன்.

ரயில் நிலையத்தின் புழுக்கமான ஓய்வறைகளில் ஒன்றில் படுத்திருக்கிறேன். நள்ளிரவு நேரம். கதவு தட்டும் ஓசை கேட்கிறது. திறக்கிறேன். ஓர் இளைஞர் வெளியே நிற்கிறார். டாக்ஸி டிரைவராம். என்னை சங்கராசாரிய ஸ்வாமிகளிடம் அழைத்துப் போவதாகக் கூறுகிறார். அவர் இருக்குமிடம் தமக்கு நிச்சயமாகத் தெரியும் என்கிறார். அந்த வேளையில் அப்படி ஓர் இளைஞரை நான் ஏன் நம்பினேன் என்பது விசித்திரம். எப்படியோ நம்பினேன். ''அதிகாலையிலேயே புறப்படுவோம்; தயாராக இரு'' என்றேன்.

என் நம்பிக்கை சரியான இடத்தில்தான் சார்ந்திருக்கிறது! ஒரு சில மணிகள் குறுகலான, புழுதி நிறைந்த பாதைகளில் டாக்ஸி ஓடியபின், காலை பத்து மணி சுமாருக்கு இளையாற்றங்குடி என்ற கிராமத்தின் சிறிய ஆலயத்துக்கு வந்து சேர்ந்தோம்.

அங்கு குழுமியிருந்த அந்தணர் பலரை விசாரித்ததில், என் தேட்டத்தின் இலட்சியத்தைக் கடைசியில் அடைந்துவிட்டேன் என்று தெரிகிறது.

''தொலைதூரத்திலிருந்து ஸ்வாமிகளைக் காண வந்திருக்கிறேன்'' என்றேன்.

''ஆமாம், ஆமாம், உங்களைத்தான் அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்'' என்று பதில் வந்தது.

நம்ப முடியாத பதில்!

ஸ்வாமிகளுடன் எனக்குப் பேட்டி கிடைப்பது அசாத்தியம்; அப்படிக் கிடைப்பதாக இருந்தாலும் அதற்காக நான் பல காலம் காத்துக் கிடக்க வேண்டும் என்று முன்பு எனக்குப் பலர் எச்சரிக்கை விடுத்திருந்தார்கள்.

ஆனால் இதோ, இளையாற்றங்குடியில் வந்திறங்கிய ஐந்தாவது நிமிஷத்துக்குள்ளேயே நான் ஸ்வாமிகளின் முன் நிற்கிறேன்!

உண்மையான மகத்துவத்தின் சந்நிதியில் நிற்கிறேன் என்று உடனடியாக உணர்ந்தேன்.

அந்த மகிமைக்குத்தான் எத்தனை எளிமை, எத்தனை சாந்தி, எத்தனை மவுனம்!

பெரும் பக்தி அலை ஒன்று என் இதயத்தே பொங்கி எழுந்தது. ஆகா, இறுதியில் இத்தனை ஆண்டுகளாக நான் தேடியதை அடைந்தேவிட்டேன் — ஆண்டவன் அருளில் அடைந்து விட்டேன்.

ஸ்ரீ ஸ்வாமிகள் என்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கவே முடியாது. என்னை அவர் இன்னார் என்று தெரிந்துகொள்ளும் சாத்தியக்கூறே மானுஷ்ய ரீதியில் இல்லை. ஆயினும் அவருக்கோ என்னைப் பற்றிச் சகலமும் தெரிந்திருப்பதாகக் காண்கிறது. இது ஏதோ அசாதாரண அற்புதம்!

மகான்கள் என்று சொல்லப்பட்ட மற்ற பலரை நான் பார்த்தபோது அவர்களெல்லாம், ''நீ எங்கேயிருந்து வருகிறாய்? என்ன செய்கிறாய்? எதற்காக இந்தியாவுக்கு வந்திருக்கிறாய்?'' என்றெல்லாம் கேள்விகளை அடுக்குவார்கள். சர்வக்ஞ சாதுக்களாகத் தோன்றாமல் தகவலுக்குத் துறுதுறுக்கும் பத்திரிகை நிருபர்கள் போல் காணப்படுகிறார்களே என்று நான் நினைப்பதுண்டு. இப்படிக் கேள்வி கேட்டுப் பதில் சொல்லிப் பழகிப்போன என்னிடம், வினா விடுக்க வேண்டிய அவசியம் இந்த ஸ்வாமிகளுக்கு மட்டும் இருக்கவில்லை. எனக்குள்ளே ஊடுருவிப் பார்க்கும் ஒரு மனிதர் இதோ நிற்கிறார். ஒரு கேள்விகூடக் கேளாமலே, திறந்து வைத்த புத்தகத்தைப் படிப்பது போல் என்னுடைய மனத்தைப் படிக்கிற ஒருவர் இதோ நிற்கிறார்!

என் ஆன்மாவினுள் ஓர் அதிசயமான சாந்தி நிரம்பியது. நான் எதுவும் வாய் திறந்து கேளாமலே, அந்த மகாபுருஷர்— அந்த மதுர மனிதர் — என் கேள்விகளுக்கெல்லாம் விடை சொல்லச் சொல்ல என் அகத்தே அமைதி படிந்தது. நான் புத்திபூர்வமாக அறிந்த ஐயப்பாடுகள் மட்டுமின்றி, என் வெளி மனத்துக்கே தெரியாமல் உள்ளொடுங்கியிருந்த ஐயங்களுக்குக் கூடத் தாமாக அவர் சந்தேக விளக்கம் தந்தார்! அன்பு நிறைந்த அவர்பால் என் இதயத்திலும் சத்தியமான, ஆழ்ந்த அன்பு வெள்ளமெனப் பிரவகித்தது. அவரது அற்புத வாக்குகளை நான் மௌனமாகக் கேட்கக் கேட்க அளவுகடந்த நன்றி உணர்ச்சி என் உள்ளத்தில் ஊற்றெடுத்தது. ஆகா, இந்தத் தருணம்தான் எப்படிப்பட்டது? இதை மறக்க முடியுமா?

நான் விடைபெறுமுன் அவர் ஆசி அளித்தார்.

''இன்றைக்கே இரவு எட்டு மணிக்கு மனத்தை ஒருமுகப்படுத்தி என்னை நினைத்துக் கொள்'' என்றார்.

அவர் குறிப்பிட்ட அந்த வேளைக்கு நான் திருச்சி திரும்பி யிருப்பேன்.

"இந்தியாவில் உனக்கு ஏற்படுகிற அநுபவங்களை யெல்லாம் எனக்கு எழுது" என்று கூறி விடை தந்தார்.

அப்படியே செய்வதாகச் சொல்லிப் புறப்பட்டேன்.

மாலை திருச்சிக்கு வந்து விட்டேன். ஸ்ரீ ஸ்வாமிகள் சொன்னாற் போல், குறித்த வேளையில் அவரைக் குறித்துத் தியானம் செய்தேன்.

'ஆசி கூறுவது', 'அநுக்கிரகம் செய்வது' என்றெல்லாம் சொல்கிறோமே அதன் உண்மையான பொருள் என்ன என்று அப்போதுதான் எனக்குப் புரிந்தது. ஸ்வாமிகளைத் தியானிக்கையில், திடீரென ஆன்ம சக்தி என்பது என்னுள் கங்கு கரையின்றிப் பிரவேசிப்பதை உணர்ந்தேன். என்வசம் இழந்தேன். 'ஆசி' என்பது, 'அநுக்கிரகம்' என்பது இவ்வளவு ஸ்தூலமான விஷயமா, இவ்வளவு நிச்சயமாக ஸ்பரிசித்துப் பார்க்கக் கூடிய விஷயமா! **உண்மையான** அநுக்கிரகத்தை அநுபவித்தது குறித்து நான் அடைந்துள்ள உற்சாகத்தை நினைத்து யாரும் ஆச்சரியப்பட வேண்டாம்! அது அப்படிப்பட்ட விஷயம்!

திருச்சியில் இந்த அநுபவம் வாய்த்த அந்த நாழிகை வரையில் ஆசி கூறுவது என்பதை ஏதோ ஒரு வெற்றுப் பொருளாக, அர்த்தமில்லாத விஷயமாக, சக்தியற்ற கையசைப்பாகத்தான் நினைத்திருந்தேன். மேல்நாட்டு மத குருமார்களிடம் நான் கண்ட ஆசியும் அநுக்கிரகமும் இதுதான். ஆனால் இப்போதுதான் அநுக்கிரகத்தின் சத்திய தரிசனம் கிடைத்தது. உண்மையான முனிவர் ஒருவரின் ஆசி என்பது மகத்தான ஆன்ம சக்தியைப் பாய்ச்சுகிற ஒரு சாதனம் என்று புரிந்து கொண்டேன். மின்சாரத்தைப் போல் கிரகிக்கக்கூடிய ஓர் உண்மையான சக்தி இது. மனிதர் மீதும் பொருட்களின் மீதும் நீரைத் தெளித்து அநுக்கிரகிப்பதாகச் சொல்கிற விஷயமல்ல இது.

அதன்பின் நான் ஜகத்குருவைக் காணவில்லை. ஆயினும், அவருடன் ஆன்மிகத் தொடர்பு ஒரு போதும் முறிந்து போகவில்லை. சில சமயங்களில் அவருக்குக் கடிதம் எழுதுகிறேன். என் ஐயம் ஒவ்வொன்றின் ஜீவாம்சத்தையே தொடுகிற விதத்தில் அவர் ஒவ்வொரு முறையும் பதில் எழுதுகிறார். மகாகுருவின் நம்பவொண்ணாத உட்பார்வையை எண்ணுகையில் எனக்கு ஒருவிதமான அச்சமே உண்டாகிறது.

இடத்தால் தொலைவில் இருப்பது ஆன்மத் தொடர்புக்கு எவ்விதத்திலும் இடையூறல்ல என்று நன்றாகத் தெரிகிறது. நான் செய்ய வேண்டியதெல்லாம் மனத்தை ஒருமுகப் படுத்தித் தியானிப்பதுதான்.

மீண்டும் எண்ணிப் பார்க்கிறேன். ஸ்ரீ சங்கராசாரியரை நான் சந்தித்த அத்தினம் தான் எத்தகைய பாக்கிய நாள்! அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே ஆன்ம ஒளி தரும் மகாகுரு என்று தெரிந்துவிட்டதே! எத்தனை ஏமாற்றங்களுக்குப் பிறகு அவரைக் கண்டேன்! அவரின் முன் என் ஐயங்கள் யாவும் அழிந்தனவே! பாரதத்தால் இன்றும் ஆன்ம நிதியை அளிக்க முடியும் என்று பாத்தியதை பாராட்ட அவர் ஒருவர் போதும்.

அன்று அவரைக் கண்டதிலிருந்து இன்று வரை இத்தனை ஆண்டுகளாக அன்பு குறையாமல், மரியாதை மாறாமல் அவரை என் இதயத்தில் வகித்து வருகிறேன். ஆன்ம ஞானிகள் என்று சொல்லிக் கொண்டு ஏகப்பட்ட பேர் இந்தியாவில் இருப்பதாக என்னிடம் புகார் சொல்பவர்களிடமெல்லாம் நான் சொல்வது இதுதான்: "ஆம், நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் ஒன்றை மறக்காதீர்கள். இந்தியாவில் இன்னமும் ஒரு சங்கராசாரியர் இருக்கிறார். மற்ற குறைகளை எல்லாம் அவர் ஈடுசெய்து இட்டு நிரப்பி விடுகிறார். முடிந்தால் அந்தப் புனிதரிடம் போங்கள். உங்கள் ஐயங்கள் யாவும் அகலும்."

நான் எவ்வளவோ பெரியோரைச் சந்தித்திருக்கிறேன். அவர்களில் தலைசிறந்தவரான ஸ்ரீ ஸ்வாமிகளைக் கண்டது என் பாக்கியம். என் உயிர் இருக்கும் வரை அவர் என் இதயத்தில் நீங்காமல் வாழ்வார்.

ஆசாரியாள் லட்சார்ச்சனை

ஆதிசங்கர பகவத் பாதர்களின் திரு அவதார தினம் மே 2ந் தேதி நிகழ்ந்ததல்லவா? அதையொட்டி, அம்மகானுடன் பலவிதங்களில் நெருங்கிய தொடர்பு கொண்ட காஞ்சிபுரத்தில் ஸ்ரீ காமாட்சி அன்னையின் ஆலயத்தில் குடி கொண்டுள்ள ஸ்ரீ சங்கர பகவத்பாத மூர்த்தத்துக்கு 28-4-1968 முதல் லட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் ஆக்ஞையின் மீது இப்புனித காரியம் நடக்கிறது. அர்ச்சனைக் கட்டணங்களைக் கொண்டு ஸ்ரீ ஆசாரியர்களுக்கு வெள்ளியில் திருவாசி செய்யும் பொற்பணியும் செய்யப்படவிருக்கிறது. ஆஸ்திகர்கள் இதில் பங்குபற்ற வேண்டுமென்று நாம் கூறவேண்டுவதே இல்லை. லட்சார்ச்சனையில் கலந்துகொள்ள விரும்புவோர் தங்கள் பெயர், கோத்திரம், நட்சத்திரம் தெரிவித்து அடியில் கண்ட முகவரிக்கு ரூ. 6 அனுப்பி வைக்க வேண்டும்: பொக்கிஷதார், ஸ்ரீ சங்கர பக்த ஜனசபை, 116—ஏ, ராஜவீதி, காஞ்சீபுரம்.


இதோ புத்தம் புதியது, பெரிய

'ஸன்'

வாக்குவம் பிளாஸ்க் டிபன் காரியர்!







உங்களது உணவை சுடச் சுட ருசித்து சாப்பிட உதவக்கூடிய ஒரு "டிபன் காரியர்" இதோ இருக்கிறது அது ஒரு ஸன் வாக்குவம் பிளாஸ்க். உங்களுக்குத் தேவையான, வீட்டிலே சமைத்த உணவுப் பண்டங்களைச் சுடச் சுட எடுத்துச் செல்ல வசதியாக 4 இலேசான அடுக்குகள் உள்ளன. இன்றே ஒரு ஸன் டிபன் காரியரை வாங்குங்கள். மிக சேர்த்தியானது. நீங்களே சுலபமாக எடுத்துச் செல்லலாம்.

எங்கும்...எவ்வேளையிலும்

SUN

வாக்குவம் பிளாஸ்க்

உங்களுக்கு நன்கு சேவை செய்கிறது

விக்டரி பிளாஸ்க் கம்பெனி பிரைவேட் லிட்.

பம்பாய் ❀ கல்கத்தா ❀ டெல்லி ❀ சென்னை ❀ ஹைதராபாத்

மாடல் : CA. 801

இந்தியாவின் முதல் வாக்குவம் பிளாஸ்க்குகளைத் தயாரித்தோர்—
இன்றும் முதன்மை வகிப்போர்!

VAPI : VF : 8/68

ஓசைப் படாமல் நடக்கும் தமிழ்த் தொண்டு!

வி. ச. வாசுதேவன்

ஒரு கட்டடம் உறுதியாக இருக்க எப்படி அஸ்திவாரம் முக்கியமோ, அப்படி ஒரு மொழியின் வளத்துக்கும் மேம்பாட்டுக்கும் ஆழமான இலக்கண அடிப்படை தேவை. தமிழ் இலக்கண இலக்கியங்களைத் தக்க ஆசிரியரிடம் முறையாகப் பயின்று பழைய இலக்கண வரம்புக்கு அரணாக இருந்து கொண்டு கன்னித் தமிழின் தூய்மைக்குச் சற்றும் களங்கம் ஏற்படாவண்ணம் உழைத்து வருகிறார், ஆண்டுகள் எழுபதைக் கடந்த மகாவித்துவான் உயர்திரு மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள்.

இவருக்குச் 'சிந்தாமணிச் செல்வர்', 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு. 'சிந்தாமணிச் செல்வர்' என்ற பட்டத்தை இவருக்கு வழங்கியவர் தமிழ்ப் பெரியார் திரு வி. கலியாணசுந்தர முதலியார் ஆவார். 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்ற விருதைக் கடந்த 29–10–67ல் தமிழக முதலமைச்சர் உயர்திரு ஸி. என். அண்ணாதுரை அவர்கள் இவருக்கு வழங்கினார். நிகரற்ற இவரது இலக்கணப் புலமையைக் கண்டு இவரது மாணாக்கர்களும், ஏனையோரும் 'இலக்கணத் தாத்தா' என்றே இவரை அன்போடு வழங்கி வருகின்றனர்.

திரு வி. க. அவர்கள் தாம் நடத்தி வந்த 'நவசக்தி' என்னும் நற்றமிழ் வெளியீட்டில் 1938ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8-ஆம் நாள் இதழில் வெளியிட்ட மதிப்புரையில் மே. வீ. வே. அவர்கள் பணியினை இவ்விதம் பாராட்டியுள்ளார்:

''சில அரிச்சந்திர புராணப் பதிப்புக்களை நாம் பார்த்தல் நேர்ந்தது. அவைகளுள் இரண்டொன்றில் 'அரிச்சந்திரன்' அம்மை புண்ணுற்றுக் கிடத்தலும், இரண்டொன்றில் அவன் சவலையுற்றுக் கிடத்தலும் காட்சியளித்தன. இந்நிலையில் வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளையவர்கள் அரிச்சந்திர புராணச் சுருக்கத்தைப் பதிப்பித்தது அரிச்சந்திரனுக்கு மகிழ்ச்சியூட்டும்!

''திரு வேணுகோபாலப்பிள்ளை, விளம்பரமின்றி — ஆரவாரமின்றி — அமைதியில் நின்று தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்வோருள் ஒருவர். திரு பிள்ளை, நூல்களைப் பிழையின்றிப் பதிப்பிப்பதில் பேர் பெற்றவர்.

''திரு வேணுகோபாலர், அரிச்சந்திர புராண ஆழியில் மூழ்கி, நன்மணிகளைக் குடைந்தெடுத்து, அவைகளைத் திறம்படக் கோவை செய்துள்ளார். நூலை முற்றிலும் பதிப்பிப்பதிலும் அதைச் சுருங்கிய முறையில் கதைப் போக்கின் தொடர்ச்சி கேடுறாவண்ணம் பதிப்பிப்பது அரிது என்பது அந்தத் துறையில் ஈடுபட்டுள்ளோருக்குத் தெரியும்.

''புராணக் கதைச் சுருக்கம் பதிப்பாசிரியரால் உரைநடையில் வரையப்பட்டிருக்கிறது. உரைநடை பழைய இலக்கணவரம்புக்கு அரண் செய்து நிற்றல் சிறப்பாகக் குறிக்கத்தக்கது. தீந்தமிழ்ச் சொற்களாலும் சொற்றொடர்களாலும் அமைந்துள்ள உரைநடையைக் கொண்ட கதைச் சுருக்கம், ஒரு பூங்காவெனப் பொலிகிறது. அதனிடை தென்றல் காற்றும் வீசுகிறது. திரு வேணுகோபாலர் தமிழில் தமிழூர்தல் வெள்ளிடைமலை. தமிழறிஞர் வேணுகோபாலரின் பிழையற்ற உரைநடை, தற்போது கறைபட்டுள்ள தமிழுலகைத் தூய்மை செய்யும் பெற்றி வாய்ந்ததென்று சுருங்கக் கூறலாம்.

''புராணமுற்றும் வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்களின் பார்வை பெற்று வெளிவரின் தமிழுலகம் நலம் பெறும்; 'அரிச்சந்திர'னும் நலம் பெறுவன்.



திரு மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

நமது வாழ்த்து வித்துவான் வேணுகோபாலர்க்கு உரியதாக!''

தமிழ்ப் பெரியார் திரு வி. க. ஒருவரை இப்படி அற்புதமாகப் பாராட்டியிருக்கும் போது அதற்கு மேலும் ஏதேனும் கூற வேண்டுவது தேவையற்ற ஒன்றுதானே?

தமிழ் நூல்களைப் பிழையின்றித் திருத்தமான முறையில் பதிப்பிப்பதே தம் வாழ்க்கையின் குறிக்கோள் என்பதாகத் திரு மே. வீ. வே. கூறுகிறார். அது பின்வருமாறு :

''ஒரு சமுதாயத்தை ஆளும் பொறுப்பு தமக்கு அளிக்கப்பட்டால் தாம் என்ன செய்வார் என்று வினவப்பட்டபோது கன்பியூஸியஸ் என்னும் சீன ஞானியார் பின்வருமாறு விடை பகர்ந்தனர்: 'நான் முதலில் மொழியைத் திருத்துவேன். மொழி திருத்தமடையாவிட்டால், மக்கள் கருதியதைக் கருதியபடி உணர்த்தல் இயலாது. அங்ஙனமாயின் ஒழுக்கங்களும் கலையும் இழிவுறும்; நீதி பிறழும்; நீதி பிறழின் மக்கள் அல்லலுற்று அலமந்து நிற்பார்கள். எனவே, பேசப்படுவதில் தான்தோன்றித்தனம் தலையிடுதல் அடாது. எல்லாவற்றையும்விட இஃது இன்றியமையாதது.'

''தமிழ் நூல்கள் — சிறியவையாயினும் பெரியவையாயினும் — பிழையின்றித் திருத்தமான முறையில் கண்கவர் வனப்புடன் வெளிவருதல் வேண்டும் என்பதே என் வாழ்க்கையின் குறிக்கோள்.''

திரு மே. வீ. வே. அவர்கள் தமிழ்த்துறையில் இறங்கிப் பணி புரிய ஆரம்பித்ததே ஒரு சுவையான சம்பவமாகும். இளைஞராக இருக்குங்காலே அவருக்கு 'உயிர் ஒப்பந்தக் கழகம்' ஒன்றில் எழுத்தர் வேலை. மாதம் முப்பது ரூபாய் சம்பளம். தம்மிடம் தமிழ் பயின்ற மாணவர் உயிர் ஒப்பந்தக் கழகத்தில் எழுத்தராகப் பணியாற்றுவது ஆசிரியருக்குப் பிடிக்கவில்லை. தமிழ் போதித்து வருங் காலத்திலேயே இந்த மாணவரிடம் இருந்த அபரிமிதமான தமிழார்வத்தை, ஞானத்தை, உழைப்பை ஆசிரியப் பெருந்தகையார் உணர்ந்திருந்தார்.

'தமிழில் உனக்கு நிரம்ப ஞானம் இருக்கிறது. தமிழ்ப் பணிகள் மூலம் உனக்குச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது. அதற்கான கூறுகளை உன்னிடம் நான் காண்கிறேன். முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் வேலை காலியிருக்கிறது. அதற்காக உன்னைச் சிபாரிசு செய்கிறேன். வேலையை ஏற்றுக் கொள். சம்பளம் மாதம் இருபத்தைந்து ரூபாய்தான் உயிர் ஒப்பந்தக் கழக எழுத்தர் வேலையைவிட ஐந்து ரூபாய் குறைகிறதே என்று பார்க்க வேண்டா. நான் சொல்லுகிறபடி தமிழாசிரியப் பணியை ஏற்றுக் கொண்டால் பிற்காலத்தில் பல நன்மைகள் வந்து சேரும்' என்று மாணவரிடம் கேட்டுக் கொண்டார் ஆசிரியர்.

ஆசிரியரின் அன்புக் கட்டளையை அறக் கட்டளையாகவே மதித்துத் தமிழாசிரியப் பணியை ஏற்றுக் கொண்டார் மே. வீ. வே. அன்று முதல் இன்றுவரையில் அரிய தமிழ்ப் பணி புரிந்து வருகிறார் இவர். இவருக்கு ஆசிரியராய் இருக்கும் பெருமை படைத்தவர் பெரும் புலவர் உயர்திரு கா. ர. கோவிந்தராச முதலியார் ஆவர்.

அமரர் 'கல்கி'யிடம் தமக்குப் பெருமதிப்புண்டென்று கூறிய திரு மே. வீ. வே. 'கல்கி' அவர்களை அவரது அந்திம காலத்தில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சந்தித்ததைக் கூறினார்:

''அறையை அடைந்த என்னைக் 'கல்கி', 'வாருங்கள்!' என்று அழைத்தார். நான் உள்ளே சென்றதும் கல்கி அருகிலிருந்த தம் மனைவியாரைப் பார்த்து, 'இவரைப் பார்த்தாயா? தமிழில் பெரும் புலவர். ஓசைப்படாமல் தமிழுக்குப் பெரிய சேவை செய்து வருகிறார்' என்று அறிமுகப்படுத்தினார்.''

'பயனெண்ணாமல் உழைக்கச் சொன்னான்,
பக்தி செய்து பிழைக்கச் சொன்னான்'

என்று பாரதியார் பாடியபடி இப்பெரியார் உழைத்து வருகிறார். இவர் செவ்விய முறையில் பதிப்பித்துள்ள — பதிப்பித்து வருகிற — நூல்களும், பள்ளிப் பாடப் புத்தகங்களும் கணக்கிலடங்கா. 'என் பெயர் அவற்றில் வெளிவரா விட்டாலும், பிழையில்லாமல் நூல்கள் வெளியானால் அதிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன் !' என்கிறார் இவர்.

இவர் திருத்தம் செய்து பதிப்பித்த நூல்கள் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, இறையனார் அகப்பொருள், தொல்காப்பிய சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, தஞ்சை வாணன் கோவை விளக்கக் குறிப்புரை, அட்டப் பிரபந்தம் விளக்கக் குறிப்புரை, சித்தர் ஞானக் கோவை (அருஞ் சொற்பொருளகராதி முதலிய பிற்சேர்க்கைகளுடன்), யாப்பருங் கலக் காரிகை ஆகியவைகள்.

'யான் பார்வையிட்டுப் பதிப்பித்த சிறு நூல்களையும், பெரு நூல்களையும் தமிழில் தனிப் பெரும் புலமை வாய்ந்த நாவலரும் பாவலரும் அறிஞரும் பாராட்டியுள்ளனர். அவர்தம் பாராட்டுக்குரியவராகும் தகுதியை எனக்குத் தந்த தமிழ்த் தாய்க்கு யான் வணக்கம் செய்கிறேன்' என்கிறார் இவர்.



மனத்தூய்மை எனும் மந்திரம்

ஆழ்வார்ப்பேட்டை முனையிலுள்ள கிருஷ்ணா பால் டிப்போ அருகில் 'விர்....ர்....' என்ற ஓசையுடன் ஒரு ஸ்கூட்டர் வந்து நிற்கிறது. தம்பதி பால் டிப்போ வாசலுக்கு வருகின்றனர். மனைவியின் இடுப்பில் ஒரு வயதுக் குழந்தை. செக்கச் செவேல் என்று விளங்கும் குழந்தையின் உடல் முழுதும் குங்குமச் சிவப்பாகத் திட்டுத் திட்டாக பூச்சிக் கடிபோல் காணப்படுகிறது. ''நேற்று முதல் நல்ல ஜுரம். 103 டிகிரிக்கு மேல் போய் விட்டது. டாக்டர் 'அலர்ஜி' என்று சொல்லுகிறார்'' என்றார் குழந்தையின் தகப்பனார். அருகிலிருந்த ஒரு வெள்ளைத் துணியிலிருந்து விளக்குத் திரி போல் ஒரு முழ நீளம் கிழித்துக் குழந்தையின் கழுத்தைச் சுற்றிச் சங்கிலி போட்டது போல் கட்டி விடுகிறார் நடேசநாயக்கர். பிறகு வேப்பிலை அடிக்கிறார். குழந்தையின் பெற்றோர்கள் கொண்டு வந்த மிளகுப் பொட்டணத்தைப் பிரித்து அதனையும் மந்திரித்து. ''ஒரு மிளகைத் தண்ணீரில் இழைத்துக் குழந்தையின் நாக்கில் தடவி விடுங்க. இன்னிக்கு இரண்டு வேளை தடவுங்க. எண்ணெய் தடவிக் குளிப்பாட்ட வேண்டாம்!'' என்று அறிவிக்கிறார் நாயக்கர். ''காய்ச்சல் மறுபடியும் வந்தால், டாக்டர் கொடுக்கிற மாத்திரையைக் குழந்தைக்குக் கொடுக்கலாமா ?'' என்று குழந்தையின் தகப்பனார் கவலையோடு கேட்கிறார். ''மாத்திரை கொடுக்கலாம். பரவாயில்லே'' என்று மாந்திரீகர் கூறியதும் நன்றியும் திருப்தியும் குடிகொண்ட முகத்துடன் உண்டியலில் காசைப் போட்டு விட்டுக் குழந்தையுடன் திரும்புகின்றனர் தம்பதியர்.

அதற்குள் பத்துப் பதினைந்து பேர்கள் 'க்யூ' வரிசையில் நிற்கின்றனர். அவர்களுள் குழந்தையுடன் வந்திருக்கும் தாய்மார்களே பெரும்பாலோர். ''இவ்வளவு பேருக்கும் நீங்கள் வேப்பிலே அடித்து மந்திரிக்க வேண்டுமா இப்போது?'' என்றேன்.

''இதென்னங்க....? ஞாயிற்றுக்கிழமை, வியாழக் கிழமையிலே பார்க்கணும்! ஞாயிற்றுக்கிழமை குறைஞ்சது நூறு பேர்களாவது வருவாங்க !'' என்றார் நடேச நாயக்கர்.

''பால் வியாபாரத்தைக் கவனிக்கப் பொழுது இருக்குமா ?''

''வியாபாரத்துக்கு இது தடையா இல்லிங்க. கடை காலையிலே ஆறு மணிக்கு முந்தியே திறந்துடுவேன். நடுவிலே யாராவது பால் வாங்க வந்தா, பையன் கவனிச்சுக்குவான் வியாபாரத்தை.''

முப்பது ஆண்டுகளாகப் பால் வியாபாரம் செய்து வரும் நடேச நாயக்கருக்கு ஐம்பத்தெட்டு வயது ஆகிறது. ''ஒரு பெண், ஒரு மகன். இருவருக்கும் கல்யாணம் ஆயிட்டுது. பால் வியாபாரத்திலே கிடைக்கிற லாபத்தில் குடும்பம் நல்லபடியா நடக்குது'' என்றார்.

''இந்த உண்டியல் பணம்....?''

''அதிலிருந்து ஒரு காசுகூட நான் எடுத்துக்கிறதில்லே. வருஷத்துக்குச் சுமார் தொள்ளாயிரம் ரூபாய் தரும காரியங்களுக்குச் செலவாகிறது. எல்லாம் உண்டியல் பணந்தான்.'' தரும கைங்கர்யங்களின் நீண்ட பட்டியலைத் தருகிறார் நாயக்கர்.

''மந்திரம் பலிக்க இந்தத் தெய்வ கைங்கரியம் ஒரு காரணமோ?''

''அதோடு மனசும் சுத்தமா இருக்கணும். மந்திரம் கண்டிப்பா பலிக்கும்'' என்கிறார் திரு நாயக்கர். ''மந்திரிச்சுக்க வருகிறவங்க உண்டியல்லே காசு போட்டுத்தான் ஆகணும்னு கண்டிப்பு இல்லே. பிரியப்பட்டு எது வேணுமானாலும் போடலாம். இருபது வருஷமா மந்திரிச்சுக்கிட்டு வரேன். குணமாயிட்டுதுன்னு வந்து சொல்றப்ப சந்தோஷமா இருக்கு!'' என்கிறார். — ''பாணன்''



வாங்கியதன் தரத்திற்கு எவ்வாறு உறுதிபெறுவீர்கள்?




இதுவே அடையாளம்!

நிறத்தையும் கோலத்தையும் மட்டும் கொண்டு ஒரு துணியை மதிப்பிட்டுவிட முடியாது. பன்முறையான சலவைகளுக்கு ஈடு கொடுக்குமா? சில மாதங்கள் ஆன பின்பும் புதுமைக்களை மாறாமல் இருக்குமா? இக் கேள்விகளுக் கெல்லாம் 'ஆம்' என்ற விடை உண்டு, துணிகள் மீது லால்பாய் டிரேடுமார்க் இருந்தால். லால்பாய் க்ருப்பிலுள்ள நாங்கள் தரமான துணிகளைப் பல்லாண்டுகளாக உற்பத்தி செய்துவருகிறோம். நவீனமான உத்திகளை அநுபவத்தோடு இணைத்து இயங்கி வரும் எங்கள் ஏழு ஆலைகள், இன்றைய நாகரீகத்தின் எடுத்துக்காட்டான நேர்த்திமிக்க துணிகளை உங்களிடம் கொண்டு வருகின்றன. வாங்கும் பொருளின் தரத்திற்கு உறுதி பெறுங்கள். எப்போது துணி வாங்கினாலும் அதன் மீது லால்பாய் டிரேடுமார்க் இருக்கிறதா பாருங்கள்.

லால்பாய் க்ரூப்

- தி அரவிந்த் மில்ஸ் லிமிடெட்.
- தி ராய்ப்பூர் மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்.
- தி அசோகா மில்ஸ் லிமிடெட்.
- தி ஸர்ஸ்பூர் மில்ஸ் லிமிடெட்.
- தி அருணா மில்ஸ் லிமிடெட்.
- தி அகமதாபாத் நியூ காட்டன் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.
- தி நூதன் மில்ஸ் லிமிடெட்.

இலங்கைக் காட்சி.8



ஒரு நாட்டின் செல்வம் காடு என்றால் அந்தக் காட்டின் செல்வமாக, விளங்குவது யானைகளே! இலங்கை என்றதும் தேயிலைக்குப் பின் யானைகள் நினைவுதான் வரும்.

இலங்கையில் நடைபெறும் எந்த பௌத்த சமய நிகழ்ச்சிக்கும் யானைதான் முன்னணியில் நிற்கிறது. ஈசால பெரஹராவின்போது புத்தபிரானின் புனிதப் பல் மாபெரும் யானைமீது தான் ஊர்வலமாக வருகிறது. சுமார் ஐம்பது யானைகள் அழகாக அணி வகுத்து இந்த ஊர்வலத்தில் செல்லும் காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.


மகாவலி கங்கைக்கரை ஓரம் யானைகள் நீராடுவதையும் விளையாடுவதையும் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு யாத்திரிகர்கள் தினசரி கண்டு மகிழ்கிறார்கள்.

அனுராதபுரக் காடுகளை அடுத்த சாலையின் குறுக்கே காட்டு யானைகள் இரவு நேரங்களில் அணி அணியாகத் தாண்டிச் செல்வதைக் காண அச்சமும் வியப்புமாக இருக்கும்.

கே. வி. எஸ். மோகன்

மகாபாரதம்

ராஜாஜி



அந்த அரசன் தன் ஆட்சியின் வரவையும் செலவையும் ஒன்றும் மறைக்காமல் முனிவரிடம் கணக்கை ஒப்புவித்தான். ''பார்த்து எடுத்துக்கொள்ளுங்கள்'' என்றான். ராஜ்யத்தின் வரவு செலவுக் கணக்கைப் பார்த்ததில் மிச்சம் ஒன்றும் இல்லை. அரசாங்கங்களில் வரவுக்குச் சரியாகவே செலவு எப்போதும் ஏற்பட்டுவிடுகிறது. முன்னாட்களிலும் இப்போதைப் போலவேதான்.

இதைக் கண்டு, ''இவ்விடம் நான் தானம் பெற்றால் பிரஜைகளுக்குத் துன்பமாகும். வேறே எங்கேயாவது பார்க்கிறேன்'' என்று அகஸ்தியர் புறப்பட்டார். அந்த அரசன், ''நானும் கூட வருகிறேன்'' என்று முனிவருடன் கூடச் சேர்ந்து கொள்ள, இருவரும் மற்றொரு ராஜாவிடம் போய்க் கேட்டார்கள். அவ்விடத்திலும் அதே நிலைமையாக இருந்தது.

நியாயமான செலவுக்கு எவ்வளவு வேண்டுமோ அந்த அளவுக்குத்தான் அரசன் பிரஜைகளிடமிருந்து வரி வசூல் செய்ய வேண்டும் என்கிற தத்துவத்தை வியாசர் இதன் மூலம் எடுத்துக் காட்டுகிறார். நியாயமான வரிகள் பெற்றுக் கடமைகளைப் பூரணமாகச் செய்து தரும சாஸ்திரப்படி நடந்து வரும் எந்த அரசனிடத்திலாவது, தானம் பெற்றால் அவனுடைய பிரஜைகளுக்கு அந்த அளவில் நஷ்டமும் துன்பமும் உண்டாகும் என்று அகஸ்தியர் உணர்ந்தார். அதன் மேல் எல்லாருமாகச் சேர்ந்து இல்வலன் என்கிற ஒரு கொடிய அசுரனிடம் போய் அவனைக் கேட்பது உசிதம் என்று தீர்மானித்தார்கள்.

இல்வலன் என்ற அசுரனும், அவன் தம்பி வாதாபியும் பிராமணர்கள் மேல் தீராத துவேஷம் கொண்டவர்கள். பிராமணர்களை விருந்துக்கு இல்வலன் அழைப்பான். மாயையால் தம்பி வாதாபியை ஆட்டின் உருவம் எடுக்கச் செய்து, ஆட்டை வெட்டிப் பக்குவம் செய்து, வந்த பிராமணர்களை உண்ணச் சொல்லுவான். அந்தக் காலத்தில் பிராமணர்கள் மாமிசம் உண்பார்கள்.

விருந்து முடிந்தவுடன் இல்வலன், ''வாதாபி! வா'' என்று கூவுவான். தான் கொன்றவர்களை யமலோகத்திலிருந்து திரும்பி வரவழைக்கும் வரத்தை இல்வலன் பெற்றிருந்தான். வெட்டப்பட்டு இறந்த வாதாபி மறுபடியும் உயிர் கொண்டு பிராமணர்களுடைய வயிற்றைப் பிளந்து கொண்டு அசுரச் சிரிப்பு சிரித்துக் கொண்டு, வெளியே வருவான். அவ்வாறு பல பிராமணர்கள் வாதாபியின் செயலால் வயிறு கிழிக்கப்பட்டு மாண்டார்கள். தருமத்தையே ஏமாற்றி இவ்வாறு பிராமணர்களைக் கொன்று, தங்கள் எண்ணத்தை நிறைவேற்றி வருவதாக பாபிஷ்டர்களாகிய அந்த அசுரர்களுடைய கருத்து.

அகஸ்தியர் வந்ததாகத் தெரிந்ததும் நல்ல பிராமணர் சிக்கினார் என்று இல்வலன் மிக்க மகிழ்ச்சியடைந்து, அவரை வரவேற்று வழக்கப்படி விருந்து வைத்தான். வாதாபியை ஆடாகச் சமைத்துப் பரிமாறி, ''இந்த முனிவர் இறந்தார்'' என்று மனத்தில் எண்ணிக் கொண்டு அகஸ்தியரை உண்ணச் செய்தான்.

விருந்து முடிந்த பின் இல்வலன், ''வாதாபி! சீக்கிரம் வெளியே வா! தாமதித்தாயானால் முனிவர் உன்னை மீறுவார்'' என்று சொன்னான்.

முனிவர், ''வாதாபியே, உலகம் சாந்தி அடைக! நீ ஜீரணம் செய்யப்பட்டாய்'' என்று சொல்லித் தம் வயிற்றைத் தடவிக் கொடுத்தார். இல்வலன், ''வாதாபி! வா! வாதாபி வா!'' என்று பன்முறை பயந்து கத்தினான்.

பயனில்லை. ''வாதாபி ஜீரணமாகி விட்டான். ஏன் வீணாக அழைக்கிறாய்?'' என்றார் முனிவர்.

அசுரன் கைகூப்பி அகஸ்தியரை வணங்கி, அவர் கோரிய தனங்களைக் கொடுத்து அனுப்பினன். லோபா முத்திரையை அகஸ்தியர் திருப்தி செய்தார்.

''உனக்குப் பத்து நல்ல மக்கள் வேண்டுமா? அல்லது பத்துப் பேரை வெல்லக் கூடிய ஒரு மகன் வேண்டுமா?'' என்று அகஸ்தியர் மனைவியைக் கேட்டதாகவும், ''பகவானே, புகழுக்குரிய அறிவைப் படைத்தவனும், தருமத்தில் நிலை கொண்டவனுமான ஒரு மகனையே விரும்புகிறேன்'' என்று லோபாமுத்திரை சொல்ல, அவ்வாறே பெற்றதாகவும் கதை.


ஒரு சமயம் விந்திய மலையானது மேரு மலையின் மேல் பொறாமை கொண்டு, தானும் மேருவைப்போல் வளர்ந்து, சூரிய சந்திராதிகளைத் தடுத்துவிடப் பார்த்ததாம். இந்தச் சங்கடத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாமல் தேவர்கள் அகஸ்தியரை வேண்டினார்கள். அவர் விந்திய மலையண்டை சென்று, ''பருவதோத்தமனே! எனக்கு வழி விடக் கடவாய்! ஒரு காரியத்துக்காக நான் தெற்கே செல்ல வேண்டியதாக இருக்கிறது. நான் திரும்பிய பின் நீ இஷ்டப்படி வளரலாம். நான் வரும்வரையில் பொறுத்திருப்பாயாக!'' என்றார்.

அகஸ்தியரிடம் விந்திய பருவதம் வைத்திருந்த கௌரவத்தினால் ''அப்படியே!'' என்று ஒப்புக் கொண்டு நமஸ்கரித்ததாகவும், அகஸ்தியர் தெற்கே போனவர் திரும்பி வரவில்லை என்றும் இந்த ஒப்பந்தப்படி விந்திய மலையும் வளராமல் இதுவரையில் படுத்துக் கிடக்கிறது என்றும், அதிலிருந்து அகஸ்தியர் தென்னாட்டிலேயே இருந்து விட்டார் என்றும் கூறுகிறது பாரதக் கதை.

32. ரிஷ்ய சிருங்கர்

விஷயானுபவங்களைப் பற்றி ஒன்றுமே தெரியாதபடி மக்களை வளர்த்தால் பிரமச்சரியம் சுலபமாக ஏற்படும் என்பது சிலரது எண்ணம். இது பயனற்றது. இந்த முறையில் காக்கப்பட்ட கோட்டை வெகு எளிதாக எதிரியின் வசமாகும். இதை விளக்குவதற்காகப் பாரதத்தில் ஒரு கதை உண்டு. இந்தக் கதை சுருக்கமாக இராமாயணத்திலும் இருக்கிறது. பாரதத்தில் பௌராணிகர் அதை ரொம்பச் சித்திரித்து நீண்ட கதையாகச் சொல்லுகிறார்.

பிரம்மாவுக்குச் சமமான தேஜஸ் படைத்த விபாண்டகர் தம்முடைய புத்திரன் ரிஷ்ய சிருங்கருடன் வனத்தில் வசித்து வந்தார். ரிஷ்ய சிருங்கர் தம் பிதாவைத்



தவிர வேறு மனிதர்களைப் பார்ப்பதே கிடையாது. பெண்களைக் கண்ணால் கண்டதே கிடையாது. இவ்வாறு சுத்தப் பிரம்மச்சாரியாக வளர்ந்தார் ரிஷிய சிருங்கர்.

அங்க தேசமானது ஒரு காலத்தில் பெரிய பஞ்சத்தால் பீடிக்கப்பட்டது. மழையின்மையால் பயிர்கள் அழிந்து ஜனங்கள் மாண்டார்கள். ஊமைப் பிராணிகளும் மிகவும் துன்பப்பட்டன. தேசத்தைத் துன்புறுத்தும் கொடிய பஞ்சத்தை எப்படிப் போக்குவது, பிரஜைகளைக் காப்பாற்ற என்ன செய்வது என்று ராஜா ரோமபாதன் பிராமணர்களைக் கேட்க, அவர்கள் "ராஜேந்திரனே! பெண்களை அறியாதவரும், சம்பூர்ண பிரம்மச்சாரியுமான ரிஷிய சிருங்கர் என்கிற ரிஷி குமாரர் ஒருவர் இருக்கிறார். அவரை நம் ராஜதானிக்கு வரவழைக்க வேண்டும். மிக்க தவமுள்ள அவர் நம் நாட்டில் கால் வைத்ததும் மழை பொழியும்" என்றார்கள்.

விபாண்டக ரிஷியின் ஆசிரமத்திலிருந்து ரிஷிய சிருங்கரை எப்படித் தருவிப்பது என்று அரசன் மந்திரிகளுடன் ஆலோசனை செய்தான். அவர்கள் சொல்லிய உபாயத்தின்படி ராஜதானியில் உள்ள வேசிகளில் சாமர்த்தியசாலிகளான சிலரை அழைத்து, "நீங்கள் வனம் சென்று ரிஷி குமாரனை எப்படியாவது உபாயம் செய்து என்னுடைய தேசத்துக்குக் கொண்டு வந்துவிட வேண்டும்" என்று நியமித்தான்.

அந்த ஸ்திரீகள் முதலில் தயங்கினார்கள். அரசன் சொல்லை மீறுவதற்குப் பயந்தார்கள். ஆனால், ரிஷியின் சாபத்துக்கும் பயந்தார்கள். முடிவில் தெய்வமே கதி என்று அரசனிடம் பொருள்களைப் பெற்றுக் கொண்டு ரிஷியின் ஆசிரமத்துக்குச் சென்றார்கள்.

இவ்வாறு புறப்பட்ட வேசிகளின் கூட்டத்துக்குத் தலைவியானவள் ஒரு பெரிய ஓடத்தைத் தோட்டம் போல் அமைத்தாள். அதில் போலி மரங்களும் புதர்களும் கொடிகளும் வைத்து அழகிய தோட்டத்தின் மத்தியில் ஆசிரமம் இருப்பது போல் செய்தாள். அந்த ஓடத்தை விபாண்டக ஆசிரமத்தண்டை நதியில் கட்டி விட்டு வேசிகள், ரிஷியின் ஆசிரமத்தண்டை நெஞ்சம் பதைக்கச் சென்றார்கள்.

முனிவர் வெளியில் போயிருந்தார். இதுதான் சமயம் என்று அவர்களில் ஓர் அழகிய யுவதி ஆசிரமத்திலிருந்த ரிஷி குமாரரருகில் சென்றாள்.

"முனிவரே! க்ஷேமமா? கிழங்குகளும் கனிகளும் குறைவின்றிக் கிடைக்கின்றனவா? வனத்தில் ரிஷிகளுடைய தவம் சரியாக நடைபெறுகிறதா? உம்முடைய பிதாவின் தேஜஸ் குறைவின்றி வளர்கிறதா? வேத அத்தியயனம் சரியாக நடைபெறுகிறதா?"— என்று ரிஷிகளும், சீடர்களும் விசாரிக்கும் முறையில் கேட்டாள் அவள்.

இதைப் போன்ற அழகிய மானிட உருவத்தையும் குரலையும் அதற்கு முன் ரிஷி குமாரர் பார்த்ததில்லை. அந்த வடிவத்தைக் கண்டதும் ரிஷிய சிருங்கருடைய உள்ளத்தில் மறக்க முடியாத இயற்கை வேகம் வேலை செய்ய ஆரம்பித்தது. வேசியாகிய யுவதியைத் தன்னைப் போன்ற ஒரு ரிஷி குமாரன் என்று எண்ணினார். உள்ளத்தில் அடக்க முடியாத ஒரு புது மகிழ்ச்சி பொங்குவதை அனுபவித்தார்.

"நீர் ஜோதியைப் போலப் பிரகாசிக்கிறீர். நீர் யார்? உம்மை நமஸ்கரிக்கிறேன். உம்முடைய ஆசிரமம் எங்கே இருக்கிறது? நீர் எந்த விரதத்தை அனுசரித்து வருகிறீர்?" என்று ஆண், பெண் வித்தியாசம் அறியாத ரிஷி குமாரர் அவளைக் கேட்டார். அவளுக்கு அர்க்கியமும் பாத்தியமும் அதிதிகளுக்குச் செய்யும் உபசாரமும் செய்தார்.

"இந்த இடத்துக்கு மூன்று யோசனை தூரத்தில் என்னுடைய ஆசிரமம் இருக்கிறது. உங்களுக்கு நான் பழங்கள் கொண்டு வந்திருக்கிறேன். உங்களால் நான் நமஸ்காரம் பெறும் தகுதி படைக்கவில்லை. உங்களை நான் எங்கள் சம்பிரதாயப்படி நமஸ்கரிக்க வேண்டும்" என்றாள்.

நகரத்திலிருந்து கொண்டு வந்த மோதகங்களையும் பட்சணங்களையும் ரிஷி குமாரனுடைய வாயில் போட்டு அவரை உண்ணச் செய்து, வாசனை பொருந்திய மாலைகளைச் சூட்டிப் பானங்களைக் குடிக்கச் செய்து, "எங்களுடைய சம்பிரதாயப்படி நமஸ்கரிக்கும் முறை இப்படி" என்று சொல்லி அவரைக் கட்டித் தழுவி விளையாடினாள்.

கொஞ்சநேரம் கழிந்தபின் விபாண்டகர் வரும் சமயமாயிற்று என்று பயந்து வேசியானவள், "நான் அக்னிஹோத்திரம் செய்ய வேண்டிய காலம் வந்து விட்டது" என்று காரணம் சொல்லி மெதுவாக ஆசிரமத்தைவிட்டு விலகிப் போய்விட்டாள்.

ஃ ஃ ஃ

விபாண்டகர் வந்து ஆசிரமத்தில் சிதறிக் கிடக்கும் பண்டங்களைப் பார்த்

துக் திடுக்கிட்டார். ஆசிரமம் சுத்தம் செய்யப்படவில்லை. செடிகளும் கொடிகளும் ஒடிந்து கிடந்தன. ரிஷிகுமாரருடைய முகம் வழக்கம்போலில்லை. டின்மத வேகத்தினால் மதியும் கலையும் இழந்தவராக இருந்தார்.

''பிரிய குமாரனே! ஏன் சமித்துக்கள் கொண்டுவந்து வைக்கவில்லை? நல்ல செடிகளையெல்லாம் யார் ஒடித்துப் போட்டிருக்கிறார்கள்? ஹோமம் செய்வதற்கு வேண்டிய பால் கறந்தாயிற்றா? இவ்விடம் யாராவது உனக்குப் பணிவிடை செய்ய மனிதர்கள் வந்தார்களா? இந்த விசித்திரமான பூமாலை யார் கொடுத்தார்கள்? ஏன் கவலையுற்றிருக்கிறாய்?'' என்று விபாண்டகர் கேட்டார்.

''அற்புத வடிவமான பிரம்மச்சாரி ஒருவர் வந்திருந்தார். அவருடைய தேஜஸையும் அழகையும் குரல் இனிமையையும் என்னால் சொல்லி விளக்க முடியாது. அவருடைய வாக்கும் கண்ணும் என்னுடைய அந்தராத்மாவில் விளக்க முடியாதவண்ணம் மகிழ்ச்சியும் சிநேகமும் உண்டாக்கின. அவர் என்னைக் கட்டித் தழுவிய காலத்தில் எனக்கு உண்டான சந்தோஷம் இந்தப் பழங்கள் உண்ட போதும் உண்டாகவில்லை'' என்று ஏதும் அறியாத அப்பாவியான ரிஷியசிருங்கர், பிரம்மச்சாரி என்று தான் நினைத்த வேசியின் உடையையும் உருவத்தின் அழகையும் செய்கைகளையும் தகப்பனாரிடம் சொன்னார்.

''என் தேகம் எரிவது போலிருக்கிறது. அந்தப் பிரம்மச்சாரியைத் தொடர்ந்து போகவேண்டும் போல் எனக்கு இருக்கிறது. அவரை எப்படியாவது இங்கே தருவிப்பீராக. அவருடைய விரதத்தையும் தேஜஸையும் என்னவென்று சொல்லுவேன்! அவரைக் காணாமல் என் உள்ளம் துடிக்கிறது'' என்று ரிஷியசிருங்கர் கூறினார்.

விபாண்டருக்கு விஷயம் தெரிந்துவிட்டது. ''மகனே! இது யாரோ ராக்ஷசன் செய்த மாயை. அரக்கர் எப்போதும் தவத்துக்கு இடையூறு செய்வார்கள். பலவித உபாயங்களையும் மோசங்களையும் செய்வசர்கள். அவர்களைப் பக்கத்தில் வர இடம் கொடுக்கக் கூடாது'' என்று சொல்லி, மோசம் செய்தவர்களைத் தேடிப் பிடிக்க மூன்று நாள் காட்டில் திரிந்து, யாரும் சிக்காமல் திரும்பினார்.

பிறகு விபாண்டகர் கிழங்கும் பழங்களும் கொண்டுவர மறுபடியும் ஒரு நாள் வெளியே போயிருந்த காலத்தில், வேசியானவள், ரிஷிய சிருங்கர் இருந்த இடத்துக்கு மெதுவாக வந்தாள். தூரத்தில் அவள் வருவதைக் கண்டவுடனேயே ரிஷியசிருங்கர் திடீர் என்று கரை உடைத்த ஏரியினின்றும் தண்ணீர் ஓடுவதைப் போல யுவதியண்டை ஓடினார்.

''ஒளி வீசும் பிரமச்சாரியே! என் பிதா வருமுன் உம்முடைய ஆசிரமத்துக்கு நாம் இருவரும் போவோம்'' என்று இவள் அழைக்காமலே ரிஷியசிருங்கர் அவளுடன் வேகமாகச் சென்றார்.

ஆசிரமமாகத் தோற்றம் கொடுக்கப்பட்டு நதியின் ஓரத்தில் கட்டப்பட்டிருந்த ஓடத்தில் ஏறினார்கள். ரிஷிகுமாரர் ஏறினதும் வேசிகள் ஓடத்தை அவிழ்த்து விட்டு ஓட்டிச் சென்றார்கள். வழியில் பல விநோதங்களைக் காட்டி ரிஷி குமாரரை வஞ்சித்துக் கொண்டே போய் அவரை அரசனிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

ரோமபாதன் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினான். ரிஷி குமாரரைத் தன் அந்தப்புரத்தில் சுகமாக அமைத்து விட்டு, அவருக்கு எல்லாப் பணிவிடையும் செய்ய உத்தரவிட்டான். அப்போது மழை பொழிய ஆரம்பித்து விட்டது. ஆறுகளும் ஏரிகளும் நிறைந்து, பிரஜைகளும் களிப்புற்றார்கள். ரோமபாதன் தன் மகள் சாந்தாவை ரிஷிகுமாரருக்குக் கொடுத்து விவாகம் செய்து முடித்தான்.

எல்லாம் நினைத்தவாறு முடிந்தாலும் அரசனுக்குப் பயம். விபாண்டகர் தம் மகனைக் காணாமல் தேடிக்கொண்டு வருவார். சாபம் கொடுத்து விடுவார் என்கிற பயம். இதற்காக மந்திரிகளுடன் ஆலோசனை செய்து வனத்திலிருந்து நகரத்துக்கு வரும் வழியில் ஏராளமான காலை மாடுகளையும், பசுக்களையும், இடையர்களையும் அமைத்து, ''முனிசிரேஷ்டர் விபாண்டகர் வருவார். அவரை நன்றாக உபசரியுங்கள். 'இந்தப் பசுக்களும் காலைகளும், வயல்களும் உம்முடைய புத்திரனுடையவை. நாங்கள் உமக்கு அடிமைகள். உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?' என்று அவர் கோபம் தணியுமாறு பேசுங்கள்'' என்று எச்சரிக்கை செய்து ஏற்படுத்தி வந்தான்.

எங்கு தேடியும் மகனைக் காணாமல் உக்கிரமான கோபத்தை அடைந்த விபாண்டகர், இது அங்கத ராஜன் வேலையாகத்தான் இருக்கும் என்று சந்தேகம் கொண்டு அரசனை எரிப்பதற்குப் போவதுபோல் ஆறுகளையும் கிராமங்களையும் தாண்டி அரசனுடைய நகரத்தை நோக்கிச் சென்றார். **(தொடரும்)**


காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும், புதுமையுடனும் இருங்கள்



'அன்றலர்ந்த மலர்களின் புதுமையுடனும், சுகந்தத்துடனும்கூடிய காஷ்மீர் பொக்கே டால்க் உங்களைச் சூழ்ந்து பரவி இருக்கட்டும்... உங்களைச் சுற்றி அதன் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தையும், வசீகரிக்கும் நறுமணத்தையும் உணர்ந்து அனுபவியுங்கள். பலமணிகளுக்குப் பிறகும், காஷ்மீர் பொக்கே டால்க்கின் குன்றாத நறுமணமும், புதுமையும், மலர்க்கொத்துகள் போன்று உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள்.




காஷ்மீர் பொக்கே ஒரு உன்னதமான அழகுசாதன டால்க் மட்டுமல்ல. குழந்தைக்கும் ஏற்ற அற்புத டால்க். அது இருவருமே உபயோகிக்கக்கூடிய சௌகரியமான ஒரு பவுடர்!



காஷ்மீர் பொக்கே

ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ள டால்கம் பவுடர்

கால்கேட்டின் தரமான தயாரிப்பு



நடந்தது கொலை! குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டிய கடமை உள்ளோருக்கிடையே நிற வேற்றுமைப் புகைச்சல்! இந்த நிலையில்.........

பிரேதப் பரிசோதனை நடக்கையில்...
போலீஸ் அதிகாரியாக - ராட் ஸ்டைகர்

நடு இரவில்

ஸெப்டம்பர் மாதத்தில் ஒரு நாளிரவு. மணி இரண்டு இருக்கும். மிஸிஸிபி மாநிலத்தில் உள்ள ஸ்பார்ட்டா நகரில் ஸாம் உட் என்ற போலீஸ் அதிகாரி ஹோட்டல் ஒன்றில் உணவருந்திவிட்டு வரும் வழியில் ஒரு குறுகலான சந்தில் ஒரு மனித உருவம் விழுந்து கிடப்பதைக் காண்கிறார். சந்தேகப்பட்டு அவர் அந்த உருவத்தை நெருங்கி அதன் இதயத்தில் கைவைத்துப் பார்த்ததும் திடுக்கிடுகிறார்.

ஆம்! மிஸிஸிபி மாநிலத்திலேயே மிகப் பெரிய தொழிலதிபரான பிலிப் கால்பர்ட் என்பவரின் சடலம்தான் அந்த மனித உருவம். கால்பெர்ட் கொலை செய்யப்பட்டு விட்டார் என்பதை நொடிப் பொழுதில் உணர்ந்த ஸாம், தலைமைப் போலீஸ் அதிகாரியான பில் கில்லஸ்பைக்கு அவசரச் செய்தி அனுப்புகிறார்.

பில் உடனே கொலை நடந்த இடத்துக்கு விரைந்து கால்பர்ட்டின் சடலத்தைப் பரிசோதித்துப் பார்க்கும்போது கொலை நடந்து ஒரு மணி நேரம் ஆகியிருக்க வேண்டும் என யூகிக்கிறார். அது மட்டுமின்றி கால்பெர்ட்டின் பணப்பை காணாமற் போய் விட்டது என்பதையும் தெரிந்து கொண்டு சந்தேகப்படக் கூடிய நபர்கள் யாராவது இருந்தால் அவர்களை உடனே பிடித்துத் தம்மிடம் அழைத்து வரும்படி ஸாமுக்கு உத்தரவிடுகிறார்.

மறுநாள் காலை நான்கு மணி அளவில் ஸாம், விர்ஜில் டிப்ஸ் என்ற நீக்ரோவை பில்லின் முன்பு நிறுத்துகிறார். நீக்ரோக்களைக் கண்டால் அறவே பிடிக்காத பில், டிப்ஸை நோக்கி வெஞ்சினத்துடன் தாறுமாறாகக் கணைகளை அள்ளி வீசுகிறார். அப்போது விர்ஜில் டிப்ஸ் ஒரு துப்பறியும் அதிகாரி என்றும், பிலடெல்பியா நகரப் போலீஸ் பிரிவைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வந்ததும் திடுக்கிடுகிறார்.

கொலை வழக்குகளில் சிறிதேனும் பழக்கமில்லாத பில் வேறு வழியின்றித் தமக்குப் பிடிக்காத நீக்ரோ துப்பறியும் நிபுணரான விர்ஜில் டிப்ஸுடன் இணைந்து கொலையாளியைக் கண்டுபிடிக்க நேருகிறது. அதற்குள் வெள்ளைப் போலீஸ் அதிகாரி பில்லிற்கும் நீக்ரோவான டிப்ஸுக்கும் எத்தனையோ விவாதங்கள், போராட்டங்கள், கருத்து வேற்றுமைகள் தோன்றுகின்றன.

கொலையாளியைக் கண்டுபிடித்த பெருமை பில்லிற்குக் கிடைத்த போதிலும் தாம் அறவே வெறுத்த நீக்ரோ இனத்தைச் சேர்ந்த டிப்ஸ் மட்டும் துணையாக இராவிடில் நடு இரவில் நடந்த கொலையைப் பற்றித் தம்மால் கண்டுபிடித்திருக்கவே முடியாது என்று உணர்கிறார். பில் முதன் முதலாக ஒரு நீக்ரோவிடம் தமது சந்தோஷத்தையும் நன்றியையும் வெளிப்படுத்திக் கை குலுக்குகிறார்!

ஃ ஃ ஃ

ஷெர்லாக் ஹோம்ஸ், பெர்ரி மேஸன், நீரோ உல்ப் போன்ற கற்பனைப் பாத்திரங்கள் இலக்கிய உலகில்



"கடமை முடிந்தது
சென்று வருகிறேன்!"
ஸிட்னிபாயிட்டர் — ராட் ஸ்டைகர்

உயிர்பெற்று விளங்குவதைப் போல ஒரு நீக்ரோ துப்பறியும் நிபுணரைச் சிருஷ்டிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 1933ம் ஆண்டில் ஜான் பால் என்ற அமெரிக்க எழுத்தாளர் விர்ஜில் டிப்ஸ் என்ற நீக்ரோ நிபுணரைப் பிரதானமாகக் கொண்டு சில துப்பறியும் நாவல்களை எழுதத் தீர்மானித்தார். ஆனால் அக்காலத்தில் நீக்ரோக்களை மையமாக வைத்து எழுதினால் பிரசுரகர்த்தர்கள் யாரும் தமது படைப்புக்களை அச்சேற்ற முன்வர மாட்டார்கள் என்ற காரணத்தால் பல ஆண்டுகள் எழுதாமல் இருந்தார்.

1960ம் ஆண்டில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக கென்னடி தேர்ந்தெடுக்கப்பட்டார். கென்னடி நீக்ரோக்களின்பால் மிகுந்த பரிவுடையவர். இரண்டாம்தர குடிமக்களாகப் பலரால் கருதப்பட்ட கோடிக்கணக்கான நீக்ரோக்களை வெள்ளை அமெரிக்கர்களுடன் சரிசமமாக ஆக்குவதற்குப் பல புதிய சட்டங்களைக் கொணர்ந்தார்.

இத்தகைய சூழ்நிலையில் தமது நாவல்கள் பிரசுரிக்கப்படுவதற்குத் தடை ஏதும் இராது என்று எண்ணிய ஜான் பால் ஆறே மாதங்களில் ''இன் தி ஹீட் ஆப் தி நைட்'' என்று தமது முதல் நாவலை எழுதி முடித்தார். பிரபல ஹார்ப்பர் நிறுவனம் அதனை 1965ம் ஆண்டில் வெளியிட்டது. ''மிகச் சிறந்த மர்ம நாவல்'' என்று தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கு அவ்வாண்டு ''எட்கர் பரிசு''ம் வழங்கப்பட்டது. நீக்ரோ துப்பறியும் அதிகாரியையும், வெள்ளைப் போலீஸ் அதிகாரியையும் நாயகர்களாகக் கொண்ட அந்த நாவலுக்கு மகத்தான வரவேற்புக் கிடைத்த காரணத்தால் அது பதினெட்டு அயல்நாட்டு மொழிகளில்! மொழிபெயர்க்கப்பட்டது.

இந்த நாவலுக்குக் கிடைத்த அபூர்வ வரவேற்பைக் கண்ட ஹாலிவுட் படாதிபதி வால்டர் மிரிச் இதனைப் படமாக்க விரும்பி 1965ம் ஆண்டில் கதையைத் திரைப்படமாக்கும் உரிமையைச் சுமார் ஐந்து லட்ச ரூபாய் கொடுத்துப் பெற்றார்.

அச்சமயம் நார்மன் ஜுவிஸன் என்ற புதிய திரைப்பட நெறியாளர் ஒருவர் ''ரஷ்யர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்!'' என்ற பெயரில் ஒரு புதுமையான திரைப்படத்தை நெறிப்படுத்தி வெளியிட்டார். புதுமையான கதையமைப்புக் காரணமாகவும் ஜுவிஸனின் திறமையான டைரக்ஷன் காரணமாகவும் அத்திரைப்படம் மகத்தான வெற்றி பெற்றது. 1965ம் ஆண்டின் மிகச் சிறந்த பத்துத் திரைப்படங்களுள் ஒன்றாக அது பிரபல 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இதைக் கண்ட தயாரிப்பாளர் மிரிச் 'நைட்'டை டைரக்ட் செய்ய நார்மன் ஜுவிஸனையே அழைத்தார். அதற்கிணங்கிய ஜுவிஸன், வெள்ளைப் போலீஸ் அதிகாரியாக அமெரிக்காவின் புகழ் பெற்ற குணச்சித்திர நடிகரான ராட் ஸ்டைகரையும், நீக்ரோ துப்பறியும் நிபுணர் விர்ஜில் டிப்ஸாக 'கறுப்பு பிராண்டோ' என அழைக்கப்படும் பிரபல நீக்ரோ நடிகர் ஸிட்னி பாயிட்டரையும் ஒப்பந்தம் செய்து படத்தின் பல காட்சிகளை இல்லியனாய்ஸ் மாநிலத்தில் படமாக்கினார்.

ஜுவிஸனின் நெறியாக்கத்தில் தயாரான இத்திரைப் படம் சென்ற ஆண்டின் மிகச் சிறந்த திரைப்படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான 'ஆஸ்கார்' பரிசை இவ்வாண்டு ஏப்ரல் 10ம் நாளன்று பெற்றது.

அதுமட்டுமின்றி, சிறந்த நடிகருக்கான ஆஸ்கார் பரிசு இப்படத்தில் நடித்த ராட் ஸ்டைகருக்குக் கிடைத்துள்ளது. சிறந்த திரைக்கதை அமைப்புக்காகவும் ஓர் ஆஸ்கார் பரிசைத் தட்டிக் கொண்டு போயிருக்கிறது இந்தத் திரைப்படம்! — அ. இராமதுரை

படித்துப் பாருங்கள்!

திருக்குறள் கதைகள்

திருக்குறள் கதைகளுக்கு ஏற்கனவே ஒரு விமரிசனம் 4—2—68 கல்கி இதழில் எழுதப்பட்டிருக்கிறது. அந்தக் கதைகளை எழுதியவர் திரு மணியன். இந்தக் கதைகளை எழுதியவர் திரு சாவி என்பது தவிர அந்த விமர்சனமே இதற்கும் பொருந்தும்.

அதில் இல்லாத ஒரு முன்னேற்றத்தையும் இதில் காண்கிறோம்.

ஏழு குறள்களுக்குப் பொழிப்புரை தரப்பட்டுள்ளது. விளக்க உரையும் உள்ளது. சில குறள்களுக்கு வேறு இலக்கியப் படைப்புக்களிலிருந்து மேற்கோள்களும் காண்பித்து ஒப்பு நோக்கி ஆராய்ந்துள்ளார்.

வள்ளுவர் பெருமான் நீதிக் கதைகள் எழுதாமல் நீதியை மட்டும் கூறியது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று? இல்லாது போனால் திருக்குறள் கதைகள் படைக்கும் வாய்ப்பு கிட்டாமலே அல்லவா போயிருக்கும்? வாழ்க, வள்ளுவன் நாமம்!

திருக்குறள் கதைகள்: சாவி; மங்கள நூலகம், சென்னை—34 விலை: ரூ. 2.00.

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷியின் சிறப்பு

ஒவ்வொரு சுலோகத்திலும் கா—மா—க்ஷி என்ற மூன்றெழுத்துக்களையும் முதலெழுத்தாகக் கொண்ட மூன்று பதங்களால் தேவி காமாக்ஷியின் பெருமையை அழகுபடக் கூறுகிறது, 'ஸ்ரீ காமாக்ஷி பத நிர்வசனம்'. அ—விலிருந்து க்ஷ வரையுள்ள அட்சரங்களை சுலோக அடிகளின் முன்னெழுத்தாக வைத்துக் கூறுகிறது, 'காமாக்ஷி அக்ஷரமாலை'. இத்துதிகளுடன் 'ஷண்மதங்களும் ஸ்ரீ சக்கரமும்', 'காஞ்சி காமாட்சி', 'ஸ்ரீ மாத்ருகாபீடங்கள்' ஆகிய கட்டுரைகளும் நூலில் காணப்படுகின்றன. இவற்றில் பல அரிய விஷயங்களை அறிகிறோம். முக்கியமாக தேவி பக்தர்களுக்கு மிகவும் புனிதமான ஐம்பத்தொரு பீடங்களின் விசேஷமும் கூறப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

ஆசிரியர் — பதிப்பாளர்: வி. வி. ஸ்வாமி சாஸ்திரிகள், சிந்தாமணி ராமக்ருகம், 8, கிருஷ்ணாபுரம், கோடம்பாக்கம், சென்னை—24; விலை: ரூ. 1.00.

வஸந்தசேனா

எங்கே பார்த்தாலும் சேனைகள் மிருந்து வரும் இந்நாளில் பட உலகிலும் ஒரு சேனை இருக்கிறதா என்று கேட்கத் தோன்றும். ஆம். அது சரிதான். 'வசந்த சேனை' என்ற பெயரில் ஒரு சேனை அமைத்துக் கொண்டு ஒரு கொடுங்கோல் மன்னனை வீழ்த்தும் கதைதான் 'வஸந்த சேனா''. உஜ்ஜயினி மாநகரத்தின் உயர்குடி மகனான சாருதத்தன் பெரிய தனவந்தனாயிருந்ததோடு இசைக் கலைஞனாகவும், வீர தீரம் வாய்ந்தவனாகவும் இருந்தான். அவனிடம் ஆடலழகி வசந்த சேனா தன் உள்ளத்தைப் பறி கொடுத்ததில் வியப்பில்லைதானே? சாருதத்தனே ஆர்யகன் என்ற பெயருடன் வீரனாக மாறுவேடம் பூண்டு நாட்டைக் கொடுங்கோன்மையிலிருந்து மீட்டுக் கொள்கிறான்.


கொடுங்கோல் மன்னனாக நடிக்கும் எஸ். வி. ரங்காராவ் நடிப்பில் உண்மையிலேயே மன்னன்தான். பைத்தியக்கார நடிப்பில் சக்கைப் போடு போட்டு விட்டார்.

பத்மினியின் விறுவிறுப்பான ஆடல் அழகுடன், உடல் அழகையும் விளக்கமாகக் காட்டியிருக்கிறார்கள் — வெட்கக்கேடு!

சாருதத்தனாக வரும் நாகேசுவர ராவுக்கு வேஷப் பொருத்தம் நிறைய இருக்கிறது. ஆனால் வசந்த சேனாவுக்கு (பத்மினிக்கு) ஈடு கொடுத்து நடிக்கத் தேவையான வேகமும் உணர்ச்சியும் அவரிடம் இல்லை. அஞ்சலி தேவி நன்றாக நடித்திருக்கிறார்.

தெலுங்குப் படம் தமிழில் 'டப்' செய்யப்பட்டிருக்கிறது என்பது யாரும் சொல்லாமலே பல தடுமாற்றங்களிலிருந்து பட்டென்று புரிந்து விடுகிறது.

சூத்ரக மகாகவியின் படைப்பான ''மிருச்சகடிகம்''தான் வசந்தசேனா என்று தயாரிப்பாளர் சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். மேற்படி நாடக காவியத்தைப் படித்தவர்கள் மனம் நோகும் வண்ணம் மூல காவியம் வெகுவாகச் சிதைக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கது. படத்தில் சிறப்பான அம்சம் ஒளிப்பதிவுதான்!



தெய்விக உறவு

தெய்விகத்துடன் உறவுமில்லை; நம் உள்ளத்துடனும் உறவாடவில்லை.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு தேவிகாவைச் சந்திக்கப் போகிறோம் என்று ஆவலோடு கலை உறவை நாடிப் போகிறவர்களுக்குக் காத்திருப்பது ஏமாற்றமே. அன்றைய தேவிகாவைக் காண முடியவில்லை. தாய் தந்தையை இழந்துவிட்ட இரண்டு பிஞ்சு மனங்களின் துயரங்களைச் சித்திரித்திருக்கும் பழங்காலத் திரை ஓவியம் புது மெருகுடன் வந்திருக்கிறது. நல்ல கதையாக இருந்தால் நாமும் அலுக்காமல் பார்க்கலாமே. ஆனால் தெய்விக உறவு ஒரு கூட்டாஞ்சோறு. எதை எதையெல்லாமோ கலந்து வைத்துத் தின்னச் சொல்லி அவஸ்தைப்படுத்தி யிருக்கிறார்கள்



பெற்ற குழந்தையைப் பிரிந்த துயரத்தினால் மனம் பேதலித்து இறந்து போகும் அக்காவாகவும் மணமாகாத தங்கையாகவும் தேவிகாவே இரட்டை வேடத்தில் வருகிறார். தேவையில்லாத பாத்திரப் படைப்பு. முன்பின் பார்த்திராத, பழக்கமில்லாததொரு குழந்தையிடம் மணமாகாத ஒரு பெண்ணுக்குத் தாய்ப் பாசம் ஏற்படுவதாகக் காட்டி இருக்கும் சூழ்நிலையோ! நம்பமுடியாத ஒன்று

வயது வந்த பெண் இஷ்டப்படி சுற்றுகிறாள், இரவு வேளைகளை எங்கெங்கோ கழிக்கிறாள். அப்போதெல்லாம் கவனிக்காத கண்டிக்காத ஒரு தந்தை திடீரென்று ஒரு நாள் தம் கௌரவத்தைக் குலைத்துவிட்டதாகக் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் புலம்புகிறார். சகஸ்ரநாமத்துக்குக்கூடவா இப்படி நடிப்பு மறந்து போக வேண்டும்! மனோகர் ஜெயசங்கரோடு சண்டை போடப் படத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் வருகிறார். அவர் வாழும் வாழ்க்கை கதைக்குக் கையும் தரவில்லை, காலும் தரவில்லை. 'நான் புதுமுகமா' என்று நடனமாட ராதிகாவுக்குச் சான்ஸ் — அந்த ஆபாசத்தைப் பார்த்து வேதனைப்பட நமக்கு ஒரு சந்தர்ப்பம். நாகேஷ் வி. கே. ராமசாமி ஹாஸ்யங்கள் பழசானாலும்கூட நல்வேதனையைக் கொஞ்சம் குறைக்க உதவுகின்றன.

சிறைச்சாலைகளில் கைதிகளுக்குத் திரைப்படம் காட்டுவதற்கான ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம். நல்ல ஏற்பாடுதான். குற்றவாளிகளுக்கு இம்மாதிரியான படங்களைக் காட்டுவதைவிடப் பெரிய தண்டனை வேறு என்ன இருக்கப் போகிறது?

அனுபவம் புதுமை



பணம் பண்ணுவது எப்படி?

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து அறுபத்து நான்காம் ஆண்டில் பத்திரிகைத் துறையில் பயிற்சி பெறுவதற்காக நான் பிரிட்டனுக்குச் சென்றிருந்தேன். அவ்விதம் சென்றது தாம்ஸன் ஃபௌண்டேஷன் ஆதரவில். பயிற்சி அளிக்கப்பட்ட இடம் வேல்ஸில் உள்ள கார்டிஃப் நகரில். லண்டனிலிருந்து கார்டிஃப்புக்கு ரயிலில் சென்று கொண்டிருக்கையில் உடன்வந்த ஓர் ஆங்கிலேயரை ''தாம்ஸன் ஃபௌண்டேஷனைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்'' என்று கேட்டேன்.


''வருமானவரி செலுத்துவதைத் தவிர்க்க லார்ட் தாம்ஸனால் உருவாக்கப்பட்ட ஸ்தாபனம்'' என்று ஒரே வாக்கியத்தில் கூறி முடித்துவிட்டு அவர் சிரித்தார்.

எனக்கோ சிரிப்பதா கூடாதா என்று புரியாத அவஸ்தை ! அவர் வேடிக்கையாகச் சொன்னாரோ அல்லது குத்தலாகத்தான் சொன்னாரோ எனக்குத் தெரியாது. ஆனால் தாம்ஸனைப் பற்றி நான் கேள்விப்பட்ட இந்த முதல் விவரம் எனக்கு உற்சாகமளிக்கவில்லை. போகப் போக இந்த நிலை அடியோடு மாறி எனது பெருமதிப்புக்கு உள்ளானார் இந்த அதிசய மனிதர்.


பத்திரிகைத் துறையில் பணம் பண்ணுவது என்பது பாரத நாட்டில் மட்டுமல்ல, எந்த நாட்டிலுமே மிகவும் சிரமமான காரியம். ஏதோ சில பத்திரிகைகள் வெற்றிகரமாக நடக்கலாம். ஆனால் பெரும்பாலான பத்திரிகைகள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுதான் காலத்தை ஓட்டுகின்றன. டெலிவிஷன் வந்த பிறகு மடிந்துவிட்ட பத்திரிகைகளோ மேனாடுகளில் ஏராளம்.

இந்த நிலையில் பத்திரிகைகளை நடத்தலாம், லாபகரமாகவும் நடத்தலாம் என்று நிரூபித்துக் காட்டி வருபவர் தாம்ஸன். இவரது சாதனைகள் பலரைப் பிரமிக்க வைத்திருக்கின்றன; சிலரைப் பொறாமைப்படச் செய்திருக்கின்றன ! 'பொருளாதாரத் துறையில் ஒரு மாயாவி' என்ற பட்டப் பெயரையும் பெற்றுத் தந்திருக்கின்றன.

தாம்ஸன் பிறந்தது கனடா நாட்டின் டொரான்டோ நகரில். இவரது தகப்பனார் ஒரு முடிதிருத்தும் நிலையம் வைத்திருந்தார்



- எல்லாம் தாம்ஸன் ஸ்தாபனம் தயாரிக்கும் சஞ்சிகைகளே.
- கார்டிஃப் நகரில் தாம்ஸன் பத்திரிகைக் காரியாலயம்.
- வலது பக்கம் :
  இந்த டெலிவிஷன் நிலையமும் ஒரு தாம்ஸன் நிறுவனமே. வெற்றிப் புன்னகையை உதிர்க்கும் தாம்ஸன் பிரபு. கடைகளில் தொங்குவன எல்லாம் தாம்ஸன் தினசரிகளே.



கி. ராஜேந்திரன்




அங்கு. ஒரு பைசா காசு இல்லாமல் வாழ்க்கையைத் தொடங்கிய இவர் எப்படி இருபது தினசரிகள், ஐம்பத்தெட்டு சஞ்சிகைகள், உலகின் பல பாகங்களிலும் பத்து நகரங்களில் டெலிவிஷன், ரேடியோ நிலையங்கள், பதினொரு புத்தகம் பிரசுரம் செய்யும் ஸ்தாபனங்கள், பதினாறு அச்சகங்கள், அயல் நாடுகளில் உள்ள இருபது பத்திரிகை, அச்சக நிறுவனங்கள் இவை அடங்கிய ஒரு பொருளாதார சாம்ராஜ்யத்தையே உருவாக்க முடிந்தது? (கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த எண்ணிக்கைகள் மேலும் அதிகரித்திருக்கலாம்.)

இதற்குப் பதில் அளிக்கும் வகையில், "பாங்குகள் எதற்கு இருக்கின்றன?" என்று கேட்கிறார் தாம்ஸன். "நான் பணக்காரன் ஆனது பாங்குகளின் பணத்தை வைத்துக் கொண்டுதான்! சொந்தப் பணத்தை முதல் போட்டு லாபம் சம்பாதிப்பதைவிட மற்றவர்கள் செல்வத்தை வைத்துப் பணம் பண்ணுவதில் ஓர் அலாதி இன்பம் இருக்கிறது!"

"இப்படி ஏராளமான பத்திரிகைகளை ஒரே ஸ்தாபனம் (தாம்ஸன் ஸ்தாபனம்) நிர்வகிப்பதால் பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்படாதா?"

"பத்திரிகை ஆசிரியர்களுடைய பணியில் நான் குறுக்கிடாத வரையில் பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்படாது. சரி



> ''எப்பொழுது படத் தயாரிப்பாளர்கள் 'ரசிகர்கள் வெறும் கோமாளிக் கூத்தை ரசிக்கும் முட்டாள்கள்' என்று நினைப்பதை நிறுத்துகிறார்களோ அப்பொழுது தான் திரைப்பட நகைச்சுவையின் தரம் உயரும்''
>
> —ஸ்டார் அண்ட் ஸ்டைல் கடிதம்
> —'கென்னி'

யான ஆசிரியரைத் தேர்ந்தெடுத்து நியமிப்பது மட்டுமே என் வேலை!'' என்பது தாம்ஸனுடைய பதில். ''நான் கவலைப்படுவது தலையங்கம் பற்றியல்ல; வருட முடிவில் தயாராகும் கணக்கு விவரங்கள் அடங்கிய 'பாலன்ஸ் ஷீட்' பற்றித்தான். எழுதுவதற்கு எனக்குப் பிடிக்கும். ஆனால் பணம் பண்ண எழுத்துத் துறையைவிட வேறு சுலபமான வழிகள் இருக்கின்றன.''

இவருக்கு அதிர்ஷ்டம் அடிக்கத் தொடங்கியது 1929ம் ஆண்டில். கனடாவில் வடக்கு ஒன்டாரியோவில் இருந்தார். ரேடியோக்கள் விற்பனை செய்து வந்தார். அப்போது நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு தேக்கம் ஏற்பட்டது. பங்கு மார்க்கெட்டுகள் எல்லாம் சரிந்துவிட்டன. இவரது ரேடியோக்களை வாங்குவார் யாருமே கிடையாது. எப்படி இவற்றை விற்பது என்று தவித்த தாம்ஸன் தாமே ஒரு ரேடியோ ஒலிபரப்பும் நிலையத்தைத் தொடங்கினால் என்ன என்று யோசித்தார். 800 டாலர்களைக் கடனாகப் பலரிடமிருந்து பெற்று, ஒரு சிறிய ரேடியோ நிலையத்தைத் தொடங்கி, அதன் மூலம் தம்மிடமிருந்த ரேடியோக்களை விற்க விளம்பரம் செய்தார். ரேடியோக்கள் விற்பனையானது மட்டுமல்ல; சுற்றுப்புறங்களில் இருந்த கடைக்காரர்கள் எல்லாம் தங்களிடம் உள்ள பண்டங்களை விளம்பரம் செய்ய தாம்ஸனின் ஒலிபரப்பு நிலையத்துக்கு வந்தார்கள். விளம்பரத்துக்குப் பணம் கொடுத்தார்கள். அந்த விநாடி முதல் தாம்ஸன் பணம் பண்ண ஆரம்பித்துவிட்டார்! இந்த ஆரம்ப காலத்தில் யாருக்குப் பணம் தர வேண்டுமானாலும் சனிக்கிழமையன்றுதான் செக் எழுதித் தருவார் அவர். அப்போது தான் அந்த செக் பாங்குக்கு வர இரண்டு நாட்கள் ஆகும். செக்கில் எழுதிய தொகை தமது கணக்கில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள அவருக்கு இரண்டு நாட்கள் அவகாசம் கிடைக்கும்!

வேறு பல ரேடியோ நிலையங்களையும் பத்திரிகைகளையும் வாங்க ஆரம்பித்தார் தாம்ஸன். எந்தப் பத்திரிகையையும் நன்றாக நடக்கும் போது அவர் வாங்குவதில்லை. வாழ்வா சாவா என்ற போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் பத்திரிகையாகத் தேடுவார். அப்போதுதானே பேரம் பேசி மிகக் குறைந்த விலைக்கு அதை வாங்க முடியும்? அந்தப் பணத்தையும் மாதாந்திர அல்லது வருடாந்திரத் தவணைகளில் கொடுப்பதாகச் சொல்லுவார்! இப்படி வாங்கிய பத்திரிகைகளைத் திறமையான நிர்வாகத்தினாலும் சிறந்த ஆசிரியரைத் தேர்ந்தெடுத்து நியமித்து அவருக்கு முழு சுதந்திரம் அளிப்பதன் மூலமும் வெற்றிகரமாக நடத்துவார்.

அவரது நிர்வாகத் திறமையில் முதல் பாடம் சிக்கனம்.

இன்றைக்கும்கூட தாம்ஸன் விமானத்திலிருந்து இறங்கினால் தமது பெட்டியைத் தாமே எடுத்துக் கொண்டு நடப்பார். போர்ட்டருக்குக் காசு கொடுக்க அவருக்கு மனம் வராது! கார் வரவேண்டாம் என்று சொல்லிவிட்டு விமான நிலைய பஸ்ஸிலேயே நகரின் மையத்துக்கு வந்து சேர்ந்து விடுவார்.

தாம் செலவழிக்கும் ஒவ்வொரு பென்னியும் தமக்கு ஏதேனும் ஒரு பலனைத் தேடித் தர வேண்டும் என்ற கொள்கையை உடையவர் அவர்.

ஒரு சமயம் ஒரு பத்திரிகாசிரியரையும் காரியாலய மானேஜரையும் ரிவைராவுக்குப் பறந்து வருமாறு தந்தி அனுப்பினார் தாம்ஸன். பிரான்ஸ் தேசத்தில் ரிவைரா என்பது கடற்கரையில் ஓர் உல்லாச நகரம். விடுமுறையை ஆனந்தமாகக் கழிக்க உலகின் பல பாகங்களிலிருந்தும் வருவார்கள் இங்கே. பத்திரிகாசிரியரும் மானேஜரும் நீச்சல் உடைகள் சகிதம் ஆனந்தமாகப் பொழுது போக்கும் நோக்கத்துடன் சென்றார்கள். ரிவைராவில் மூன்று நாட்கள் அவர்கள் தங்கியிருந்த ஹோட்டல் அறையை விட்டு ஓர் அடிகூட எடுத்து வைக்கவில்லை. மூன்று நாட்களும் பத்திரிகையைத் திறம்பட, லாபகரமாக நடத்துவது எப்படி என்று தாம்ஸன் அவர்களுக்குப் புத்திமதி சொல்லிக் கொண்டிருந்தார்.

''இரவில் படுக்கப் போகும்போது நீங்கள் யார் எழுதிய புத்தகங்களை விரும்பிப் படிப்பீர்கள்?'' என்று ஒரு நிருபர் தாம்ஸனை ஒரு முறை கேட்டார்: ''படுக்கப் போகும்போது படிப்பது கனமான விஷயமாக இருக்கக் கூடாது; மனசுக்கு இதமளிக்கும் ரம்மியமான விஷயமாக இருக்க வேண்டும். அதனால் நான் நாலைந்து 'பாலன்ஸ் ஷீட்'டுக்களைப் படித்துப் பார்த்து விட்டுத் தூங்குவது வழக்கம்'' என்று கூசாமல் சொன்னார் தாம்ஸன்.

கனடாவில் பிறந்தாலும் பிரிட்டனுக்கு வந்து பெரும் செல்வந்தராக ஆன தாம்ஸனை பிரிட்டன் தனது பிரஜையாக்கிக் கொண்டது மட்டுமல்ல; 'பிரபு' பட்டமும் வழங்கிக் கௌரவித்தது.

விடுமுறையைக் கழிக்க அமெரிக்காவில் உள்ள ஃப்ளோரிடாவுக்குச் செல்வது தாம்ஸனுக்கு வழக்கமாயிற்று. அங்கு விடுமுறையை வீணாக்காமல் உபயோகமான காரியத்தைச் செய்யலாம் என்ற நோக்கத்தில் அங்கும் ஒரு பத்திரிகையை வாங்கி நடத்தி லாபம் சம்பாதிக்கவும் தொடங்கி விட்டார்!

''பணம் பண்ணுவதைப் பாவம் என்று ஏன் கருத வேண்டும்? ஒருவனது வெற்றிக்கு அளவுகோல் அவனிடம் இருக்கும் செல்வம். வாழ்க்கையில் ஒருவன் வெற்றி பெறுவதைத் தவறு என்றோ, பாபம் என்றோ



மர்பி
மர்பி
இன்று
டிரான்ஸிஸ்டர்களுள்
மிகவும் நம்பிக்கையான
பெயர்
முஸாஃபிர்
மாடல் டிபி 0820
ரூ 328·00
மியூஸிஷியன்
மாடல் டிபி 0509
ரூ 125·00
மாடல் டிபி 0616
ரூ 415·00
மிக்-2
மாடல் டிபி 0579 II
ரூ 220·00
மினி மாஸ்டர்-3
மாடல் டிபி 0585
ரூ 275·00
விலைகள் எக்சைஸ் தீர்வை மட்டுமே உள்ளிட்டது—விற்பனைவரி மற்றும் இதர ஸ்தல வரிகள் தனி.
(பாட்டரி விலையும் தனியே.)



வெளுக்கும் துணிகளெல்லாம் வெண்மை மயம், துப்புரவான தூய்மை மயம்: வெல்வது ஸர்ப் சலவையின் எல்லைமீறிய வல்லமை! கரைகடந்த நுரைவளம்! கேட்பானேன். சேலை, சிற்றுடை முதல் சிறுவரின் ஆடைவரை ... எதற்கும் நிகரிலாத வெண்மை, சிகரமான தூய்மை! கைப்பட வீட்டிலே துணி வெளுக்க ஒரே வழி, கைகண்ட ஸர்ப்!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

SU. 38-140 TM

சொல்வதா ?'' என்பது தாம்ஸனின் சித்தாந்தம்.

ஒரு பெரிய பொருளாதார சாம்ராஜ்யத்தையே நிர்வகிக்கும் இவர் தமது பத்திரிகைகளுள் ஒன்றுக்குத் திடீர் விஜயம் செய்வார். சாதாரணத் தொழிலாளி ஒருவனிடம் போய், ''ஹலோ மைக்!'' என்று அழைத்துக் கைகுலுக்குவார். ''ஆகா ! நம் பெயரைக்கூட நினைவு வைத்திருக்கிறாரே !'' என்று அவன் ஆச்சரியப்படுவான். ஆனால் முன்கூட்டியே இவர் இதற்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டு வந்தது அவனுக்குத் தெரியாது ! இனிய சுபாவமுள்ள அவர், ஏற்றத் தாழ்வின்றி எல்லாரிடமும் சுமுகமாகப் பழகுவார்; யார் எதைச் சொன்னாலும் அனுதாபத்துடன் காது கொடுத்துக் கேட்பார்.

ஒரு முறை தொழிலாளர் கூட்டத்தில் பேசுமாறு இவரை அழைத்தார்கள். இவர், ''எனக்கு ஒரு பவுன் நீங்கள் சம்பாதித்துத் தாருங்கள்; நான் உங்களுக்கு ஒரு பவுன் தருகிறேன்'' என்று கூறித் தமது 'சொற்பொழிவை' முடித்துக் கொண்டார்.

ஒரு பத்திரிகை நடத்துவதைவிடப் பல பத்திரிகைகள் நடத்துவதால் ஒப்புநோக்குகையில் செலவு குறைவென்றும் லாபம் அதிகமென்றும் கண்டார் தாம்ஸன். தமது ஐம்பதாவது வயதில் பத்திரிகைத் துறையில் அடியெடுத்துவைத்த அவர் பதினைந்தே ஆண்டுகளில் பல லட்சங்களுக்கு அதிபதியானார்.

தமது அறுபதாவது வயதுக்குப் பிறகும் ஓய்வு பெறுவதை விடுத்துப் புது உற்சாகத்துடன் டெலிவிஷன் துறையில் புகுந்தார். ''பத்திரிகைகள் நடத்துவது பணம் பண்ண உதவுகிறதென்றால் டெலிவிஷன் நிலையத்தை இயக்குவது நோட்டு அச்சடிக்கவே 'லைசென்ஸ்' கிடைத்து விட்டது போலாகும்'' என்றார் தாம்ஸன்.

இன்றோ நாளையோ என்றிருக்கும் பத்திரிகைக்குப் புத்துயிர் அளிப்பதில் லார்ட் தாம்ஸன் தம்நிகரற்றவர். 'ஸண்டேடைம்ஸ்' பத்திரிகையின் விற்பனை எண்ணிக்கையை அதிகரிக்க அவர் யாரும் கனவிலும் எதிர்பார்க்க முடியாத ஒரு காரியத்தைச் செய்தார். பல வர்ணங்களில் ஒரு வார சஞ்சிகையை (நம் நாட்டில் உள்ள இல்லஸ்டிரேடட் வீக்லி போன்றது) அச்சடித்து அதை ஸண்டே டைம்ஸ் பத்திரிகையுடன் இலவசமாகக் கொடுக்கத் தீர்மானித்தார்! ''நீங்கள் தொலைந்தீர்கள்'' என்று நெருங்கிய நண்பர்கள்கூட நல்லெண்ணத்துடன் பயமுறுத்தினார்கள் அவரை.

மற்றப் பத்திரிகைக்காரர்களோ இந்த ஏற்பாட்டைக் கண்டு அஞ்சி நடுங்கினார்கள். முளையிலேயே இந்த முயற்சியை முறித்து விடக் கருதி 'ஸண்டே டைம்ஸ்' தொழிலாளர்களைத் தூண்டி விட்டார்கள். பல வண்ணச் சஞ்சிகை வேறு ஓர் அச்சகத்தில் தயாராகிக் கொண்டிருந்தது. ஸண்டே டைம்ஸ் அச்சகத்தில் இதற்கு இயந்திர வசதி இருக்கவில்லை. ஆனால் அந்தப் பத்திரிகை ஊழியர்கள், 'வார சஞ்சிகை இந்த அச்சகத்திலேயே தயாரானால் எங்களுக்கு அதிகப்படியாகக் கூலி கிடைக்குமே' என்றார்கள். தாம்ஸன் வண்ண சஞ்சிகை இந்த அச்சகத்தில் அச்சானால் என்ன ஊதியம் தரவேண்டியிருக்குமோ அதை, அந்தச் சஞ்சிகை இங்கு அச்சாகாத போதே தர நேர்ந்தது!

பிற பத்திரிகையாளர்கள் இத்துடன் விட்டார்களா ? பத்திரிகைகளை வீடு வீடாகச் சென்று போடும் ஆட்களைக் கிளப்பிவிட்டார்கள்: 'இந்த இலவச வார சஞ்சிகை எங்களுக்கு அதிகப்படி சுமை; அதை விநியோகிக்க எங்களால் முடியாது' என்றனர் இந்த ஊழியர்கள். தாம்ஸன் இதற்கும் ஈடு கொடுத்து உடன்படிக்கைக்கு வந்தார்.

இத்தனை இடையூறுகளுக்குப் பின்னும் 'ஸண்டே டைம்ஸ்' வண்ணச் சஞ்சிகை விளம்பரங்கள் காரணமாக லாபகரமாகவும் நடந்தது; 'ஸண்டே டைம்ஸ்' பத்திரிகையின் விற்பனையையும் அதிகரிக்கச் செய்தது !

வேறு சில பத்திரிகைகளும் பின்னால் இதே போல் வண்ணச் சஞ்சிகைகளை இலவசமாக வாசகர்களுக்குக் கொடுக்கத் தொடங்கின !

தமக்கும் தமது பத்திரிகைகளுக்கும் நிரம்ப பிராபல்யத்தைத் தேடித் தரக்கூடிய ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று யோசித்தார் தாம்ஸன். திடீரென்று ஒருநாள் அவருக்கு யோசனை உதித்தது. 'குருஷேவைப் பார்த்துவிட்டு வந்தால் என்ன?'

யோசனை தோன்றியதுதான் தாமதம்; செயலில் இறங்கத் தொடங்கினார். 'பிரிட்டிஷ் தொழிலதிபர்கள், லார்ட் தாம்ஸன் தலைமையில் மாஸ்கோவுக்கு விஜயம் செய்ய விரும்புகிறார்கள்' என்று குருஷேவுக்குச் செய்தி எட்டியது. 'முதலாளித்துவ நாட்டிலிருந்து சோஷலிச நாட்டுக்குத் தொழிலதிபர்கள் வந்து தொழிலகங்களைப் பார்க்க விரும்புகிறார்கள் என்றால் குருஷேவ் அது தமக்கும் பிரசார நோக்கில் நல்லதுதானே?' என்று தீர்மானித்தார். அது மட்டுமா ? பிரிட்டிஷ் முதலாளிகளை அழைத்து வர ருஷ்யாவில் தயாரான புத்தம் புதிய நவீன விமானம் ஒன்றை லண்டனுக்கு அனுப்பி வைத்தார். அவ்வளவுதான்; உலகம் முழுவதும் இந்தச் செய்தி பரவிப் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது!

சீனர்களுக்கும் ருஷ்யர்களுக்கும் இடையே கொள்கைகளில் பிளவு ஏற்பட்டு விரோத பாவம் வளர்ந்து வருவதாக அரசியல் நிபுணர்கள் கருதி வந்த சமயம் அது.

சந்திப்பின்போது தாம்ஸன் குருஷேவிடம் சீனர்களை நம்பக் கூடாது என்று சொல்லி, கரத்தைக் கழுத்துக்கு நேராக வைத்து, வெட்டுவது போன்று அபிநயம் பிடித்தார்.

அப்போது குருஷேவ் ருஷ்யப் பழமொழி ஒன்றை உதிர்த்தார். ''நெருங்கிய நண்பர்கள் சண்டை போட்டுக் கொண்டால் தமாஷ் செய்கிறார்கள் என்று அர்த்தம்!'' என்று சொன்னார். இந்த உரையாடல் உலகெங்கும் அரசியல் நிபுணர்களிடையே புதிய விழிப்பை உண்டுபண்ணியது. சீன–ருஷ்யத் தொடர்புகள் குறித்துப் புதிய சிந்தனை உருவாயிற்று.

மாஸ்கோவிலிருந்து திரும்பிய பிறகு தாம்ஸன் முதன் முதலாகத் தாமே தமது பத்திரிகை ஒன்றில் கட்டுரைகள் எழுதினார். ''குருஷேவுடன் சம்பாஷணை'' என்பது அதன் தலைப்பு.

பணம் செலவழிப்பதில் அவர் கருசரல்லர். செலவழிக்கும் பணத்தைப் பலன் தரும் வகையில் புத்திசாதுர்யத்துடன் செலவழிக்க வேண்டும் என்பதே நோக்கம். 'ஸண்டே டைம்ஸ்' வண்ணச் சஞ்சிகையைத் தொடங்கிய போது ஆரம்பத்தில் லட்சக்கணக்கான பவுன்களை இழக்கத் தயாராக இருந்தார், பின்னால் லாபம் கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கை அவருக்கு இருந்ததால்.

திறமைக் குறைவான மனிதர்கள் தம் ஸ்தாபனத்தில் இருப்பதை அவர் சகிக்கவே மாட்டார். ''நான் தர்மத்துக்கு இந்தக் காரியாலயங்களை நடத்தவில்லை'' என்று ஒரே போடாகப் போடுவார்!

பணம் ஒன்றுதான் பிரதானமா? பத்திரிகைக்கு உயர்ந்த கொள்கைகள், லட்சியங்கள் வேண்டாமா? ''தேவைதான்'' என்பார் தாம்ஸன். ''ஆனால் பத்திரிகையே நடக்காதபோது லட்சியங்களை வைத்துக் கொண்டு என்ன செய்ய? முதலில் பத்திரிகை பொருளாதார ரீதியில் ஸ்திரமான அஸ்திவாரத்தில் அமைய வேண்டும். அப்போதுதான் உயர்ந்த கொள்கைகளால் பயன்பெற முடியும். பத்திரிகை சுதந்திரமும் அப்போதுதான் காப்பாற்றப்படும்'' என்று வாதாடுவார்.

புதிதாக முன்னேறி வரும் நாடுகளில் கல்வி அறிவு பெருகுவதற்காகப் பெருமளவுக்கு உதவியிருக்கிறார் தாம்ஸன். ரேடியோ, டெலிவிஷன், பத்திரிகைகள் மூலம் மக்களை விஷய ஞானமுள்ளவர்களாக்கப் பல நாடுகளில் உதவியிருக்கிறார். இந்தியாவிலும் 600,000 பவுன் மூலதனத்தில் மலிவு விலையில் புத்தகங்கள் தயாரிக்க ஒரு நவீன அச்சகத்தை ஃபாரிதாபாத்தில் நிறுவியிருக்கிறார்.

1962ம் ஆண்டில் பத்திரிகையாளர்களுக்கு விசேஷப் பயிற்சி அளிக்க ஐந்து மிலியன் பவுன்களை ஒதுக்கித் தாம்ஸன் ஃபௌண்டேஷனைத் தோற்றுவித்தார்.

இவரது வெற்றியின் ரகசியம் என்ன? ''உழைப்பு, கடுமையான உழைப்பு! ஓய்வு, உல்லாசம் இவற்றை உழைப்புக்காகத் தியாகம் செய்திருக்கிறேன் நான்!'' என்று கூறுகிறார் தாம்ஸன்.

வேலையில் மன்னன்!

அமெரிக்க ஜனாதிபதி பதவியில் புகழுடன் விளங்கியவர்களில் ஒருவர், காலஞ்சென்ற ரூஸ்வெல்ட். இவருக்கு வாத ரோகம் ஏற்பட்டுக் கால்கள் ஊனமாகி விட்டன. அதனுடனேதான், ஜனாதிபதிக்குரிய அலுவல்களைத் திறம்பட நிறைவேற்றி வந்தார். ரூஸ்வெல்டிற்குக் கால்கள் ஊனம் என்பது பற்றிப் பொதுமக்களுக்குக்கூட அதிகம் தெரியாது என்று கூறலாம். ரூஸ்வெல்ட் அவர்களும் இதைப் பற்றிக் கவலைப் பட்டதில்லை. மாறாகத் தமது ஊன நிலையைக் குறித்து ஒரு முறை தமது நண்பர்களுடன் பேசும்போது பெருமையாகவே பேசினார்.

''அலுவல் நேரத்தில் மற்றவர்களைப் போல் அடிக்கடி நான் எழுந்து செல்ல வேண்டிய தொல்லை கிடையாது. குறுக்கும் நெடுக்குமாக உலவும் தொல்லையும் கிடையாது. அறையின் ஜன்னல் அருகே போய் நின்று வெளிக் காட்சியைப் பார்த்தால்தான் புத்துணர்வு பெற முடியும் என்று தொல்லைப்பட வேண்டிய தொந்தரவும் எனக்குக் கிடையாது. இதனால் நேரம் மிச்சமாகிறது. மற்றவர்களைவிட அதிகமாக அலுவல்களைக் கவனித்து விடுகிறேன். பைல்களை அவ்வப்போது பார்த்து முடித்து விடுவது சுலபமாக இருக்கிறது. கால்கள் நடக்க முடிந்தால் இதெல்லாம் எனக்கு எங்கே சாத்தியமாயிருக்கப்போகிறது?'' என்று நகைச்சுவையுடன் கூறினார்.



காலஞ்சென்ற ரூஸ்வெல்ட்

ஆதாரம்:
'டெய்லி மெயில்'


தகவல்: வி. வி.



அவனுக்கு ஒவ்வொரு நாளும் இன்க்ரிமின்* கொடுங்கள்

தீவிரமான பசியைத் தூண்டவும், படிப்படியாக எடையை அதிகரிக்கவும்

இன்க்ரிமின்* செரி பழத்தின் மணம் நிறைந்தது. 1-லைசின் என்ற இன்றியமையாத பொருள் அடங்கியது. இந்தப் பொருள் உடல் நலத்திற்கு உகந்த பசியைத் தூண்டி, உணவின் முழுப்பயனையும் சிறந்த முறையில் பெற உடலுக்கு உதவுகிறது இன்க்ரிமின்* சாப்பிட்டு வந்தால் உங்கள் குழந்தை வயிறாரச் சாப்பிடுவான். அவனுடைய எடையும் படிப்படியாக அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் அவனுக்கு இன்க்ரிமின்* கொடுங்கள்— அவன் மனமாரச் சாப்பிடுவதையும் வளர்ச்சியடைவதையும் கண்டு மகிழுங்கள்!



இன்க்ரிமின்* வளரும் குழந்தைகளுக்கெனவே உண்டாக்கப்பட்ட ஒரு லெடர்லி தயாரிப்பு.

இன்க்ரிமின்*... வளர்ச்சிக்கு மிகவும் சிறந்தது


நாள் ஒன்றுக்கு:
இன்க்ரிமின்* ட்ராப்ஸ்: 10-20 துளிகள்.
இன்க்ரிமின்* ஸிரப்: ஒரு தேக்கரண்டி.

* ரிஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்

Lederle லெடர்லி டிவிஷன். ஸயனமிட் இந்தியா லிமிடெட் CYANAMID




உடலின் வலிமைக்குச் சோதனை இனி மேல்தான் ஆரம்பம். கூராக்கோல் நம்மைத் தைப் பிணைத்துள்ள கயிற்றை அறுத்து விடும் வரையிலும் உங்களைச் சமநிலைப் படுத்திக் கொள்ளுங்கள்....
காற்றைக் கிழித்துக் கொண்டு வந்த அம்பொன்று கயிற்றைத் துண்டித்தது.....
22
ஓநாய்க் கோட்டை
கதை: வாண்டு மாமா
சித்திரம்: ரமணி..
உங்களில் யாராவது ஒருவரின் பிடி தளர்ந்தாலும் கூராக்கோல் கட்டை நழுக்கு மரத்திலிருந்து நழுவும். நழுவினால்...? நீங்களே ஒருவரின் உயிர் மற்றவரின் கையில் உள்ளது. இதுவே நம்பின் தரத்தை நிர்ணயிக்கும் வழி! ஹும்... ஹ்ம்... ஹா! இன்று இரவு போய் – மறுநாள் சூரியோதயத்தின் போதும் இந்த நிலையிலேயே நீங்கள் ஊசலாடிக் கொண்டு உயிர் பிழைத்திருந்தால் உங்களுக்கு விடுதலை பரிசளிப்போம்......
திக்கற்ற குழந்தைகளைப் போல நாம் மரணத்தை வரவேற்க வேண்டியது தானா?
நேரம் கரைந்து கொண்டிருந்தது. பகல் வாடி மாலைக்கு வழிவிட்டது..
இன்னும் அவர்கள் களைப்படையவில்லை. இப்படியே சமாளித்து விடுவார்களோ?
இது வரை இப் பொறியிலிருந்து மீண்டவர் யாருமில்லை. ஒதுக்கிய நேரத்தில் பாதிதானே ஆகியுள்ளது. அவர்களின் தசை நார்களிலே இறுதி காணும் தருணம் வரும்...
வந்தது, சித்திரவதைக்குள்ளாகும் மனிதனின் வேதனைக் குரலாக ஒலித்தது கந்தனின் குரல்....
என்னால் இனித் தாங்க முடியாது. ஆனால் என் பிடி தளருமானால் இறப்பது நீயல்லவா? என் உயிர் நண்பனின் மரணத்துக்கு நானேயா காரணமாக வேண்டும்?
கந்தா, நண்பனே! உன் பிடியை மட்டுமல்ல, உள்ளத்தையும் கூடத் தளர விடாதே! இந்தச் சோதனையில் நாம் வெற்றி பெறுவோம்...
என் விரல்களில் ரத்த ஓட்டம் நின்று மரத்து விட்டன. சீக்கிரமே என் பிடி என் கட்டுப் பாட்டையும் மீறித் தானாகவே – தளர்ந்து விடுமோ? ஐயோ...!




இரவும் மலர்ந்தது. ஓநாய் மனிதர் வியந்தார்கள். இதுவரை யாருமே இத்தனை நேரம் தாக்குப் பிடித்த தில்லை...
யாரோ வருகிறார்கள். இருளில் இனம் தெரியவில்லை..
ஓநாய்த் தலைவர் உங்களையெல்லாம் உடனே வரும்படி ஆணையிட்டு என்னை அனுப்பினார்..
தலைவரின் உத்தரவுக் குக் கீழ்ப்படிகிறோம். இரவு நீ இங்கேயே இரு. அவ் விருவரும் காலை வரை பிழைத்திருந்தால் விடுதலை அளித்து விட்டு நீ வா.
விடுதலையா...? ஹ... ஹ்... ஹா! பாவம், உங்களுக்கு நான் யார் என்றே தெரியாது. ஏன், அந்தரத்திலே ஊசலாடுகிறீர்களே அவர்களுக்குமே கூட நான் இங்கு வருவேன் என்று தெரியாது... ஹ... ஹ்... ஹா...!
ஆனந்தா நீ அசகாய சூரன்! இந்தச் சோதனையிலும் நீ பிழைத்து வந்தாலும் வரலாம். ஆனால் மெல்ல காலமிருப்பவன் வஜ்ரகீர்த்தி. உனக்கு விடுதலை வழங்கவா நான் இங்கு உருமாறி இத்தனை கஷ்டப்பட்டு வந்தேன்? வந்தது மாத அவர்களையும் அனுப்பினேன்...?
சுந்தர புரியிலே நான் அமைத்த பொறியிலிருந்து உன் தோழனுடன் தப்பிய — உன்னை எங்கெல்லாம் தேடி அலைந்தேன்? பட்ட சிரமத்துக் குப் பலன் இல்லாமல் போக வில்லை..
மரணம் நெருங்கு வதை உணர்கிறேன்.. ஐயோ! இந்த வேதனையை இனிப் — பொறுக்க முடியாது..
காலை வரை நீங்கள் தாக்குப் பிடித்தால் தானே விடுதலை? உங்கள் வலிமை இன்றோ இந்தப் பாறைக்குப் பதில் சொல்லட்டும்..
ரத்தம் கட்டிப் போன ஆனந்தனின் விரல்களில் பாறைத் துண்டுகள் மோதியும் கூட எப்படியோ அவன் தன் பிடியைத் தளர விட — வில்லை. வஜ்ர கீர்த்தி இன்னொரு கல்லை எறிந்து வீச முயலும் போது.....
யா...யாரது..? முக்காடிட்ட உருவம்..?
உனக்கு முடிவைத் தரும் — உருவம். மரணம். .. சாவு.. உன் சாவுதான் உன் பின்னால் நிற்கிறது...

தொடரும்...


தலைவலியா?



அவேதன்



சாப்பிட்டு உடனடியாக நிவாரணம் பெறுங்கள்



SQUIBB

SARABHAI CHEMICALS

இ. ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்பரேட்டட அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும். காம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமைபெற்றவர்கள்.

அற்புத 'எபேப்' அடங்கிய அவேதன தலைவலி, ஜலதோஷம், ஃப்ளு மற்றும் இதர சாதாரண வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும் துரிதமான, தீமையற்ற, நிச்சயமான நிவாரணத்தை அளிக்கிறது.

Shilpi SC 51A/67 Tam

10. கருணையின் கண்கள்



'காப்பியம்' அதிபர் மீனாட்சிசுந்தரம் வசந்தனை வரச் சொன்ன நேரம் ஒன்பது மணி. அவன் விழித்துக் கொண்ட நேரமோ விடியற்காலை நான்கு மணி. என்ன முயன்றும் அப்புறம் அவனால் கண் கொட்ட முடியவில்லை. எழுந்து நிதானமாகக் குளியலை முடித்துக் கொண்டு, காலைச் சிற்றுண்டி யருந்திப் பத்திரிகை படித்துப் பொழுதைக் கொன்று கடிகாரத்தைப் பார்த்தால் ஏழு அடிக்க ஏழு நிமிஷங்கள் இருந்தன. இருப்புக் கொள்ளாமல், புதிய மருந்துக்கான முகவரிக் காகிதத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

மணி ஒன்பது அடிக்கும் வரையில் மவுண்ட் ரோட்டைத் தன் நடையால் அளந்தான். அப்பொழுதுதான் அவனுக்கு அன்று ஞாயிற்றுக்கிழமை என்பது நினைவுக்கு வந்தது. 'ஒரு வேளை 'காப்பியம்' காரியாலயத்துக்கு இன்று விடுமுறையோ? மறந்துபோய் மீனாட்சிசுந்தரம் தன்னை வரச்சொல்லி விட்டாரோ?' இப்படி நினைத்தவன் துரித நடையிட்டு அந்தக் காரியாலயத்துக்கு ஓடினான். அச்சகப் பகுதி அடைக்கப்பட் டிருந்தது. ஆசிரியர்க் குழுப் பகுதியும் ஒரு பெரிய பூட்டைச் சுமந்து நின்றது.

''இன்று காரியாலய விடுமுறையா, அப்பா?'' என்று பரபரப்பாக வசந்தன் வினவினான் காவற்காரனை நோக்கி.

''ஆமாங்க. ஆனா 'பாஸ்' மட்டும் வந்திருக்கார். நீங்க வந்தா உடனே உள்ளே அனுப்பி வைக்கும்படி சொன்னாருங்க!'' என்றான் காவற்காரன்.

வசந்தன் அடக்கவொடுக்கத்தோடு உள்ளே சென்றான்.

புன்சிரிப்பால் வரவேற்புக் கூறிக் கைகளால் அமரும்படி ஜாடை காட்டிய மீனாட்சி சுந்தரம் அவன் எதிர்த்தாற்போலிருந்த நாற்காலியில் உட்காருவதற்குள்ளாகவே 'செக்'கை நீட்டினார். ஆயிரம் ரூபாய்க்குரிய அந்தக் காகிதத்தைக் கண்டதும் அவன் கண்கள் நன்றியால் நிறைந்தன.

''பெற்றுக் கொண்ட விவரத்துக்கு நான் உங்களுக்கு ஏதேனும் எழுதித் தரட்டுமா, ஸார்?''

''தேவையில்லை, வசந்தன்! நான் உன்னை நம்புகிறேன்.''

''நன்றி சார்! நான் இதற்கு என்ன கைம்மாறு செய்ய முடியும்? காலத்தால் செய்த இந்த உதவி ஞாலத்தின் மாணப் பெரிது.''

''நான் என்ன அப்படிப் பெரிதாகச் செய்து விட்டேன், நீ இத்தனை புகழ? பெற்ற தாயின் மீது நீ கொண்டிருக்கும் பாசமும், அக்கறையும் என்னை மிகவும் கவர்ந்து விட்டன. இரவு முழுதும் சிந்தித்து விட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்தேன்!'' என்றார் மீனாட்சிசுந்தரம்.

''ஸார்! நீங்கள் இன்று எனக்காகவே காரியாலயத்துக்கு வந்திருக்கிறீர்கள் என்பதை உணரும் போது, எனக்கு எப்படிப் பேசுவது என்றே புரியவில்லை. வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட உணர்ச்சியில் நான் திணறிக் கொண்டிருக்கிறேன், ஸார்!''

''நம் சந்திப்பு தெய்வச் செயலாக ஏற்பட்டது. உனக்கு ஏன் என்னை





வந்து கேட்கும்படி தோன்றியது? அதுவே விந்தை தானே? உன் நன்றிகளை ஒரேயடியாக எனக்குப் பரிமாறித் திகைப்பூட்டாதே! பின்னால் தரவும் கொஞ்சம் மீதியிருக்கட்டும்!'' என்று நகையோடு கூறியவர், ''முதலில் ஆக வேண்டியதைப் பார், வசந்தன்!'' என்றார்.


''சரி, சார்! இப்பொழுதே போய்க் 'கேபிள்' கொடுக்கிறேன், விமானப் பார்ஸலில் குறிப்பிட்ட மருந்தை அனுப்புமாறு!'' என்றான் வசந்தன்.

''நானும் உன் தாயைப் பார்க்க ஒரு முறை வரலாமா?''

''தாராளமாக வாருங்கள், சார்! என்றைக்கு வருகிறீர்கள் என்று சொன்னால் நானே வந்து அழைத்துப் போகிறேன். அம்மாகூட உங்களைப் பார்த்தால் சந்தோஷப்படுவாள்!''

அன்று இரவு வசந்தனுக்கு வெகு நேரம் உறக்கமே வரவில்லை. வெளியே நட்சத்திர நிழலுக்கடியில் மீனாட்சிசுந்தரத்தின் கருணையுள்ளத்தை எண்ணி வியந்தவாறே வெகு நேரம் நின்றிருந்தான். உலகில் எத்தனையோ அதிசயங்கள் நிகழவில்லையா? அதுபோல் அவனுக்கு வாய்த்த உதவியும் சற்றும் எதிர்பாராத ஒன்றுதான். சந்தர்ப்ப நெருக்கடியில் நெகிழும் மனிதர்களின் கருணை உள்ளத்துக்கு உவமை கூறவே முடியாது. வாழ்வின் ஒரு மகத்தான திருப்பமாக அல்லவா அமைந்துவிட்டன, அவரது அறிமுகமும் உதவியும்!

படுக்கையில் படுத்துத் தூங்க முயன்றுகொண்டிருந்தவனை 'போன்!' என்ற குரல் தட்டி எழுப்பி விட்டது.



குருதியெல்லாம் குமுறி மண்டைக்குள் ஏற வசந்தன் போர்வையை உதறிவிட்டு ஓடிக் கதவைத் திறந்தான். கால்கள் பின்னித் தயங்க, வியர்வை அரும்பப் பெருக டெலிபோனுக்கு ஓடிக் குழலை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டான். கையும் மெய்யும் பதறின. இந்த நேரத்தில் போன் வரக் காரணமில்லையே! ஒரு வேளை..... ஒருவேளை....ஆத்திரத்தில் அறிவு மழுங்க, ''ஹலோ, ஹலோ!'' என்று கூவினான். அவனது புலம்பலில் குரல் நடுங்கியது.

''நீங்கள் வசந்தன்தானே ?''

''யெஸ்.''

''உங்கள் 'மதர்' மயக்கமடைந்து விட்டார்கள். உடனே வர முடியுமா? உரியவர்கள் அருகில் இருப்பது நலம் என நினைக்கிறேன்.''

''அம்மா, மயக்கமா? மயக்கம்.....எப்படி, எப் போது, ஏன்....?''

''ஒன்றும் சீரி யஸ் இல்லை. சாயங்காலமே உங்களுக்குப் போன்பண்ணும் படி நம்பரைத் தந்திருந்தார்.''

அறைக்கு ஓடி வந்தான் வசந் தன். ஒரே பர பரப்புச் சூழப் பணத்தை எடுத் துக் கொண்டு கோட்டைஸ்டே ஷனுக்கு விரைந் தான். நள்ளிரவு வரை ஓடிக் கொண்டிருக்கும் மின் வண்டியின் சௌகரியங்களை எண்ணியவாறே

தாம்பரம் வண்டியைப் பற்றினன். இடையிலிருந்த அத்தனை நிலையங்களிலும் வண்டி நின்ற விநாடிகள் முள்ளாக உறுத்தின. எண்ணுததை யெல்லாம் எண்ணி மனம் புண்ணுகிக் கிடந்தது. இன்னும் ஒரு வாரம் பொறுத்தால் அம்மாவுக்கு எத்தனையோ குணம் கிட்டலாம். விமானப் பார்சல் வந்து சேர்ந்து விட்டதானல், எத்தனையோ முன்னேற்றம் காணலாம். அதற்குள் இப்படியா? பணம் கிடைத்தும் அம்மாவைக் காப்பாற்றும் வாய்ப்பு போய் விடும் போல் உள்ளதே! இன்னும் கொஞ்ச காலத்துக்காவது அவளை உயிரும், உடலுமாக எதிரே இருத்திக் காணலாம் என்று கண்ட கனவு சிதைந்து விடுமோ? இந்த நம்பிக்கைச் சிதைவில் வசந்தனின் இதயம் நடுங்கியது. வண்டியை விட்டு இறங்கி மங்கிய ஒளியூடே, சுற்றிக் கிடந்த இருளூடே கண், மண் தெரியாமல் வயல் பாதை வழியாக விழுந்தடித்து ஓடியது கனவு போல் இருந்தது. வார்டை அடைந்து செல்லம்மாவின் படுக்கைக்குச் செல்லுமுன்பே வசந்தன் அழுகை குமுறி 'ஓ'வென்று அலறிவிடுவான் போல் இருந்தது. செருப்பொலி கேட்டு எதிர் வந்த நர்ஸ் அவனை மௌனமாக வரவேற்றுச் செல்லம்மாவின் படுக்கைக்கு அழைத்துச் சென்ருள். மயங்கிய நிலையில் கிடந்த செல்லம்மாவைக் கண்டதும் வசந்தனுக்கு உடம்பு பதறியது. மெலிந்த அவளது கையின் மணிக்கட்டைப் பற்றி நாடியைப் பரிசோதித்தவாறே 'ஸ்டெத்'தை எடுத்தான். அன்னையின் இதயத்துடிப்பு அவனது இதய பலவீனத்துக்கு ஓர் ஆறுதல் அளித்தது. நிம்மதிக்கு அடையாளமாக நீண்ட பெருமூச்சு விட்டான் அவன்.

''எனக்குப் போன் பண்ணத் தோன்றியதே. அதற்கு நன்றி'' என்றவாறே வசந்தன் நெற்றி வியர்வையைக் கைக்குட்டையால் அழுந்தத் துடைத்துக் கொண்டான்.

''சாயந்திரமே உங்கள் 'மதர்' உங்களுக்கு 'போன்' பண்ணும்படி கூறினர்கள். உங்கள் ஹாஸ்டலுக்கு இரண்டு தடவைகள் பேசிப் பார்த்தேன். இருமுறையும் 'என்கேஜ்ட்'. இப்போதுதான் எனக்கு 'லைன்' கிடைத்தது.''

அரட்டைச் சங்கரன் சில சமயம் லீலாவோடு இரவு பதினேரு மணி வரையில் கூட 'யெஸ், யெஸ்' என்று பேசிக் கொண்டிருப்பான். 'பேசிக் கொண்டிருப்பான்' என்பதை விடக் 'கேட்டுக் கொண்டிருப்பான்' என்பதே பொருந்தும்! அப்படி இருந்த வேளையில்தான் நர்ஸ் முதலில் போன் பண்ணியிருக்க வேண்டும். இப்படி, நினைத்தவன் ஒரு முறை சுற்றும் முற்றும் பார்த்தான். செல்லம்மாவின் படுக்கையருகே இரும்பு 'ஸ்டாண்ட்'— ஒன்று புதிதாக இருந்தது.

''இன்று ஏதேனும் புது 'ட்ரீட்மெண்ட்' ஆரம்பித்திருக்கிறீர்களா?''

''ஆம். ஐ. வி. பி. ஏ. எஸ். கொடுத்தோம்.''

''ஓ! அதுதான் காரணம். ஏதோ என்னவோ என்று பயந்து விட்டேன்!'' இதைச் சொல்லும்போதே அவன் மனம் கொஞ்சம் இலேசாகியிருந்தது.

செல்லம்மாவின் உடம்பில் இலேசாக அசைவுகள் தென்பட்டன. கண்கள் இன்னும் திறக்கவில்லை. வசந்தன் 'லாக்கரை'த் திறந்து அதனுள்ளிருந்து காப்பிப் பொடியை எடுத்து ஒரு தம்ளரில் போட்டுக் கொஞ்சம் நீரை ஊற்றினன். அதைப் பார்த்த நர்ஸ், செல்லம்மா ஓரொரு சமயம் உபயோகிக்கும் 'ஸ்டவ்'வைக் கொளுத்தினள். கொஞ்ச நேரத்திலேயே தயாராகிவிட்ட வெறும் டிகாக்ஷனைக் கண்ணுடி டம்ளரில் ஊற்றி, அதில் ஜீனியைக் கலக்கினன். அதைத் தயாராகப் பருகவென ஸ்டூலின் மேல் வைத்துவிட்டு வசந்தன் தாயருகே நெருங்கினன். அன்னையின் கரங்களை ஆதரவாகப் பற்றியவாறே முகத்தை நோக்கினன். செல்லம்மாவின் இமைகள் மெல்லப் பிரிந்தன. சுற்றுமுற்றும் குழப்பத்தோடு நோக்கியவாறே முதலில் விழித்துவிட்டுப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஞாபகம் வரப் பெற்றவளாய் வசந்தனைப் பார்த்துச் சிரித்தாள். வசந்தனும் நர்சுமாகச் சேர்ந்து கைத் தாங்கல் கொடுத்துச் செல்லம்மாவைச் சாய்ந்த நிலையில் உட்கார வைத்தனர். வசந்தன் நீட்டிய சூடான பானத்தை மறுக்காமல் வாங்கிப் பருகினள் செல்லம்மா. முகத்தில் கொஞ்சம் களைப்புக் குறைந்து கண்களில் ஒளி கூடியது.

''பாவம்! உனக்குக் கஷ்டம். விழுந்தடித்துக் கொண்டு பார்க்க ஓடி வந்திருக்கிருய்.''

''எனக்கென்னம்மா கஷ்டம்? நீ அலட்டிக் கொள்ளாதே.''

''இப்படி என் மயக்கம் தெளிந்துவிடும் என்று நிச்சயமாகத் தெரிந்திருந்தால், உனக்கு போன் பண்ணச் சொல்லியிருக்க மாட்டேன் வசந்த்.''

''அம்மா, இதென்ன பேச்சு? நான் தவம் கிடக்கிறேன் அம்மா. எப்படித்



பொறுங்கள்!

உங்கள் துணிமணிச் செலவு கட்டுக்கடங்காமல் போகிறதா?

அப்படியானால் நீங்கள் டுவின் டஸ்கர் துணிகளைப்பற்றி சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே! இந்த ரக துணிகள் உங்களுக்குப் பிடிக்கும்...உறுதியானவை, நீடித்து உழைப்பவை, அதி நேர்த்தியாய் தயாரிக்கப்பட்டவை, விலையிலும் நயமானவை. இவை எல்லாம் மதுரை மில்ஸாரின் பெரிய அளவு உற்பத்தி சௌகரியங்களால் சாத்தியமாகின்றன. ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்—டுவின் டஸ்கர். நயமான விலையில் தரமுள்ள துணிகள்.

ஹார்வி

டுவின் டஸ்கர்

துணிமணிகள்

நயமான விலையில் தரமுள்ளவை

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
மதுரை

மானேஜிங் ஏஜண்டுகள்:
ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரையைச் சேர்ந்த ஹார்விஸ்


விவசாயத்திற்கு
கைகொடுக்கும்
பேருதவி
விவசாயிகளிடமிருந்து கீழ் கண்ட கடன் வசதிக்கான மனுக்களை வரவேற்கின்றோம்.
உரங்கள், விதைகள், பூச்சி மருந்துகள் வாங்க குறுகிய கால வகைக் கடன்கள்.
பம்பு செட்டுகள், டிராக்டர்கள் போன்ற விவசாய கருவிகளை வாங்கிக் கொள்வதற்கும், நீர்ப் பாசனம், கிணறுகளுக்கு மின் வசதி செய்து கொள்வதற்கும், பண்ணை மனைகள் கட்டவும் நடுத்தர கால வகைக்கடன்கள்.
பண்ணைகள், தோட்டங்கள், கோழிப் பண்ணைகள் பால் பண்ணைகள் முதலியவற்றின் அபிவிருத்திக்கான நீண்டகாலக் கடன்கள்.
விவசாய உள்ளீட்டு சாதனங்களை, கருவிகளைத் தயாரிப்போருக்கும் விநியோகிப்போருக்கும் அவர்களுடைய விற்பனை, விநியோக அலுவல்களுக்கான நிதி உதவிகளையும் வழங்குகின்றோம்.
எங்கள் கிளை எதனோடும், அல்லது பம்பாயில் எமது மத்திய அலுவலகத்திலுள்ள அக்ரிகல்சரல் ஃபைனான்ஸ் டிபார்ட்மெண்ட்டுடனும் தொடர்பு கொள்ளலாம்.
தி பாங்க் ஆப் இந்தியா லிட்.
T. D. கன்ஸாரா, செயர்மென்

துடித்து ஓடி வந்த நான், எத்தனை ஆறுதலாக இருக்கிறேன், தெரியுமா?''

''உம்! என்ன ஆறுதல்? எனக்காக நீ இப்படிக் கஷ்டப்படறதும், துடிப்பதும் உனக்கு நல்லதில்லேடா. இப்போதெல்லாம் எப்படி இளைச்சுட்டே நீ! என் கவலையே உன்னை உருக்கிவிட்டது. நான் ஒரேயடியாகப் போய்விட்டால் கூட 'ஹோ'ன்னு கதறியழுதுட்டு நீ நிம்மதியாயிடுவே...''

''அம்மா....அம்மா...! இப்படியெல்லாம் பேசாதே, அம்மா. உனக்காக உன் சுகத்துக்காக நான் இருக்கிறேன். உன்னை விட இந்த உலகில் எனக்கு எதுவுமே பெரிதில்லையம்மா. நீ இப்படியெல்லாம் பேசறதுதான் எனக்குப் பெரிய வேதனையாயிருக்கு. உனக்காகக் கஷ்டப்படாட்டா, உனக்காக ஓடி வராட்டா நான் பிறந்துதான் என்னம்மா பயன்?''

கொஞ்சம் அதிகம் பேசிவிட்டால் வசந்தன் விம்மி வெடித்துவிடுவான் போலிருந்தது. செல்லம்மா தன்னை மறைத்துக் கொண்டு கனிந்த குரலில், ''அதேபோல்தானடா நானும். நீ படும் கஷ்டம் எனக்குப் பொறுக்கவில்லையடா'' என்றாள்.

''பழையபடி நான் எங்கள் ஆஸ்பத்திரிக்கே வந்து விட்டேன். அம்மா! வேலையும் குறைவு. இனிமேல் தினமும் உன்னைப் பார்க்க வந்துவிடுவேன்.''

''தினமும் என்றால் நான் இங்கே இன்னும் எத்தனை நாட்கள் இருக்க வேண்டும்? உனக்குச் சமைத்துப் போட வேண்டிய நான் இங்கே படுக்கையில் கிடக்கிறேன்!''


''நான் சாப்பிடுவதுதான் ரொம்ப முக்கியமோ? அப்படி என்ன சாப்பிடாமல் இருக்கிறேன்? சென்னையில் மாணவனாக இருக்கும் யாருமே நன்றாகச் சாப்பிடுவதில் வல்லவர்களாகத்தான் இருப்பார்கள். பெரிய ஹோட்டல்களில் விதவிதமான வகைகளோடு தின்று கொண்டுதான் இருக்கிறோம், 'டின்னர்' என்ற பெயரில். இதற்கெல்லாமா அம்மா இப்படி வருந்துவாய்?''

''என்னமோ என் காலம் இப்படி முடியும் என்று நினைத்ததே இல்லை. எப்படி ஓடியாடுவேன்? எவ்வளவு வேலைகள் செய்வேன்? இப்போது கை கால்களைக் கட்டிப் போட்டாற்போல் இந்தப் படுக்கையில் கிடத்தி விட்டாய். மனம் மட்டும் ஓயவில்லையடா அப்பா. விடியும்போதே எழவேண்டும் என்ற உணர்வு. சாணி தெளித்துக் கோலம் போட நேரமாகி விட்டதோ என்ற பயம். பத்து மணி அடித்தாலே உன் அப்பா சாப்பிட வரவில்லையே என்று தோன்றுகிறது. மழை பெய்தால் விறகு நனைந்து விடுமே என்ற பயம். ரொம்ப நாட்களாகி விட்டதே. அரிசி தீர்ந்திருக்குமே! நெல் மூட்டைகளை அறவைக்கு அனுப்ப வேண்டுமே என்ற கவலை. இப்படி இன்னும் நிஜமாக நான் அங்கேயே இருப்பது போலவே உணர்கிறேன். இந்த மனப் போராட்டம் மட்டும் நிற்கவில்லை. இதற்கு ஒரு வழி நீ செய்ய முடியுமா? அங்கேயே போனால்தான் எனக்கு இதெல்லாம் ஓய்ந்து நிம்மதி பிறக்கும்.''

''அங்கே போவதா? இனி நீ குனிந்து ஒரு துரும்பு கூட எடுத்துப் போட வேண்டும் என்று ஆசைப்படாதே. அடுப்புப் புகையே உனக்கு இனி சத்துரு. இத்தனை காலமும் எத்தனை தூரம் கஷ்டப்பட்டு, இத்தனை பணிகளிலும் ஈடுபட்டு உன்னைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறாய் பார். அதனால் அதை விட்டு வந்தாலும் அதே பிரமையும், அதே கவலைகளும் ஏற்படுகின்றன. இந்தப் பிரமை உனக்கு மாற வேண்டும். இந்தப் பழைய விஷயங்களை, துன்பங்களையெல்லாம் நீ மறந்துவிட வேண்டும். நிர்ச்சலமான, நிம்மதியான மனத்தோடு இறைவனை நினைத்துக் கொண்டிரு. குடும்பத்தை விட்டு இங்கு வந்திருப்பதன் மூலகாரணமே குடும்பத்தின் நிழல் கூட உன்மீது படக்கூடாது என்பதற்காகத்தான். இரண்டாவது நீ மனம் விட்டுச் சுவாசிக்கச் சுத்தமான, தூய்மையான காற்று. மூன்றாவது தான் உனக்குத் தரப்படும் மருந்து.''

''மணி ரொம்ப ஆயிருக்குமேடா, வசந்த்? நீ எங்கே தூங்குவே?''

''உனக்குத் தூக்கம் வரதானால் சொல். நான் வரவேற்பு அறைக்குப் போய் விடுகிறேன்.''



பையில் மடக்கி வைத்துக் கொள்ளக்கூடிய புதுமையான மோட்டார் சைக்கிள், ஜனநாயக மேற்கு ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. 'மினிமோ' என்பது இதன் பெயர். மணிக்கு 25 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடக்கூடிய இம்மோட்டார் சைக்கிளின் எடை 50 ராத்தல் தான். 0.7 குதிரை சக்தியுள்ள இஞ்சின் பொருத்தப்பட்டிருக்கும் இம் மோட்டார் சைக்கிளை 80 சென்டி மீட்டர் நீளமும், 40 சென்டி மீட்டர் உயரமும் 28 சென்டி மீட்டர் அகலமும் கொண்ட ''பிளாஸ்டிக்'' பையில் எளிதில் அடக்கி விடலாம்.

— யூ.பி.எஸ்

''எனக்கு இப்போது தூக்கம் வரவில்லை. ஆனால் நீ ஏன் கண் விழிக்கிறாய்? போய் அந்தச் சோபாவில் படுத்துத் தூங்கேன்.''

''இருக்கட்டும், போகிறேன்.''

''ஏன், இன்னும் ஏதாவது பேசப் போகிறாயா?''

''ஆமாம். முக்கியமான விஷயம்.''

''என்னடா அது முக்கிய விஷயம்?''

''நான் ஒரு மருந்து வரவழைக்கப் போகிறேன் என்று முன்பே சொன்னேனல்லவா? அது வந்து உன் உடல் குணமாகும்வரையில்....'' என்று கூறத் தொடங்கினான் வசந்தன்.

''அதற்கு ஆயிரம் ரூபாய் வேண்டுமென்றாயே, என்ன செய்தாய்?''

''எப்படியோ சமாளித்து விட்டேன்.''

''மெய்யாகவா?''

''ஆமாம். நல்ல காலமும் நீ செய்த புண்ணியமும் உதவின.''

''இந்தக் காலத்தில் யாரடா உன்னை நம்பித் தந்தார்கள்?''

''காப்பியம் என்று பத்திகை வெளியிடுகிறாரே, அதன் அதிபரும் ஆசிரியருமான மீனாட்சிசுந்தரம் அம்மா.''

கொஞ்ச நேரம் செல்லம்மா திக்பிரமையால் வாயடைத்திருந்தாள். ''நீயும் எனக்காக என்ன பாடெல்லாமோ பட்டு, என்னென்னவோ செய்கிறாய்! எனக்காக நீ யாரிடமெல்லாமோ கைநீட்டிக் கடன் பட நேருவதை நினைத்தாலே...''

''நினைப்பதை நிறுத்து. அப்பொழுதுதான் உடம்பு சீக்கிரம் குணமாகும்!''

இதற்குமேல் செல்லம்மாள் பேச்சை வளர்த்தவில்லை. வசந்தனின் உருவத்தைத் தன் இமைகளில் மூடிக் கொண்டவள் அப்படியே கண் அயர்ந்து விட்டாள்.

நர்ஸ் மேஜையின் மீது தலையைக் கவிழ்த்துக் கொண்டு, கைகளால் தாங்கியவாறே தூங்கிக் கொண்டிருந்தாள். அந்தப் பிராந்தியம் முழுவதுமே மோன அமைதி.

வசந்தன் வரவேற்பு அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டான். வெளியே மணி பன்னிரண்டு அடித்தது. அங்கு கிடந்த சோபா அவனைப் படுக்கையாக ஏந்திக் கொண்டது. ஆனால் தூக்கம் வந்தால்தானே?

கருணையே வடிவான தன் பெற்ற தாய்க்காகக் கருணையின் கைகளே வந்து உதவுவது போல் சற்றும் எதிர் பாராமல் ஒரு நூலிழை நம்பிக்கைக்கு முழு ஆதாரமாக நின்ற மீனாட்சி சுந்தரத்தின் கம்பீர முகம் அவன் கண்ணெதிரே நின்றது.

'என்ன அதிசயமான மனிதர் அவர்! அவன் கேட்டு அவர் தாராளமாகத் தருவது போன்ற மிடுக்கிலா அந்தச் 'செக்'கை அவனிடம் கொடுத்தார்? ஏதோ அவனுக்குத் தர வேண்டியதை அவன் கேட்கும்போது தரும் பணிவிலல்லவா தந்தார்! சில பரம்பரைப் பெரிய மனிதர்களுக்குத்தான் இத்தகைய அடக்கம் உண்டு. பணத்தைக் கையாண்டு, கையாண்டு, அவர்களுக்கு மமதை அழிந்திருக்கும். ஏழையை அவர்கள் எள்ளுவதில்லை. பிறருக்கு உதவி புரிய நேரும் சந்தர்ப்பத்தையும் தமக்குரிய கடமையாக ஏற்று, மனப்பூர்வமாக, ஒப்புதலுடன் தருகின்றனர். அவர்களின் உள்ளம் அப்படிப் பண்பட்டுக் கிடக்கிறது!'


அவன் உள்ளத்தில் இவ்வளவு யோசனைகளைப் பரவ விட்ட பின்னரே விதியின் கைகள் அவனை உறக்கத்தில் ஆழ்த்தின!


(தொடரும்)

'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைன்ட் செய்யப்படுகிறது

அதி வேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்





ஒரு மாத்திரையில் உள்ள அணுக்கூறு எவ்வளவுக் கெவ்வளவு பெரியதாக உள்ளதோ அது உங்கள் உடலில் கலப்பதற்கு அவ்வளவுக் கவ்வளவு நேரமாகிறது. நீங்கள் வலியிலிருந்து நிவாரணம் பெறவும் அவ்வளவுக்கவ்வளவு காக்க வேண்டியிருக்கிறது.

மைக்ரோஃபைன்ட் ஆக இருப்பதனுல் புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' வின் ஒவ்வொரு மாத்திரையிலும் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக்கூறுகள் அடங்கியுள்ளன —எனவே, அது மேலும் துரிதமாக இரண்டறக் கலந்து விரைவில் நிவாரணம் அளிக்கிறது.

கீழ்க் கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: நோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளு • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதி நவீனமான வலி நிவாரணியாகும்.

சாப்பிடும் அளவு:

வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானுல் மீண்டும் சாப்பிடவும்.

குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொல்படி

A.G.38-48TM





புதிய

மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்து விடுகிறது.

நிகோலஸ் தயாரிப்பு

பொன்னிவனத்துப் பூங்குயில்

கொத்தமங்கலம் சுப்பு

அத்தியாயம் 24


"உருகாத வெண்ணெயும் ஓரடையும்"

நீரைக் கண்டவுடன் தாகம் வருவதும், பாலைக் கண்டவுடன் பசி வருவதும் சிலருக்குப் பழக்கம். ஆனால் குயிலிக்குப் பாலைக் கண்டவுடன் தன் பசி தெரியவில்லை. மற்றொரு பையனின் பசிதான் அவள் நினைவுக்கு வந்தது.

''வேண்டாம்! என்னை விட்டுடுங்க. அந்தப் பய பசியாலே துடிக்கிறான். அவனுக்குப் பாலு வாங்கிக் குடுக்கணும். நான் என் அழகையே பார்த்துக்கிட்டு அவனை மறந்துட்டேனே. அவங்க அக்காவா இருந்தால் மறப்பாங்களா?'' என்று பதறி அழுதாள் அந்தப் பேதை குயிலி.

''எனக்கு இந்த முகபாவம்தான் வேணும். இப்படியே இரு'' என்று அவளை இழுத்துக் கொண்டு போய்ச் சித்திரசாலையில் நிறுத்தினார் ரங்கமன்னார்.

அவர் கைத்தூரிகை பரபரவென்று வேலை செய்தது. எதிரில் இருந்த மெழுகுச் சீலையில் குயிலியின் முகபாவம் வேகமாக ஏறியது. அவளைப் பேசும் பொற் சித்திரமாக, சிறந்த வண்ணச்



சிலையாக, அழியாத ஓவியமாக ஆக்குவதில் முனைந்தார்.

ஆம்! அதுதான் பாரத நாட்டுப் பதிவிரதா ரத்தினத்தின் சித்திரம்.

அதன் பெருமையைக் கூற ஆணாகிய என்னால் இயலுமா? அது பெண் குலத்தின் பெருந் தெய்வம். கற்பின் கருவூலம்.

நமது அன்னைமார்கள் நம் நாட்டில் பல நோன்புகளை நோற்கிறார்கள். அவற்றில் முக்கியமானவை சில. வரலட்சுமி நோன்பன்று கையில் சரடு கட்டிக் கொள்கிறார்கள். கேதாரி நோன்பிலும் கையில்தான் கங்கணம். ஆதிரை நோன்பில் கன்னிப் பெண்கள் தக்க கணவனை அடைய வேண்டிக் கையில் மஞ்சள் கயிறு கட்டிக் கொள்கிறார்கள். பெண்களின் கழுத்து கணவனுக்கு மட்டுமே உரியது என்பதால் தெய்வச் சரடுகளைக்கூட அவர்கள் திருக் கழுத்தில் இடுவதில்லை. ஆனால் மாசியும் பங்குனியும் கூடுகின்ற நன்னாளில் காட்டுப் பயிராகிய காராமணியையும் அரிசி மாவையும் கலந்து அடை தட்டி மஞ்சள் கயிற்றில் மலரும் மஞ்சளும் புனைந்து. ''அம்மா! உருகாத வெண்ணெயும் ஓரடையும் வைத்தேன். ஒருகாலும் என் கணவன் பிரியாதிருக்க வேண்டும்'' என்று வணங்கி, ஆண்டுக்கொரு முறை அன்னையர் திருக்கழுத்தில் சரடுகளைப் பூட்டிக் கொள்ளும் நோன்பு காரடையார்



நோன்பு ஒன்றுதான். அந்த நோன்புக்கே காரணமாகிய சாவித்திரியின் திருவுருவம்தான் அது.

கோமகன் வீட்டில் பிறந்து, குருடனாகிய அரசன் மகனை மணந்து, காலனையும் வென்று கணவனைக் காப்பாற்றிய குலமகள் சாவித்திரியின் சித்திரத்தைத்தான் குயிலியின் முகத்தை மாதிரியாகக் கொண்டு அவர் தீட்டினார்.

தனியே அழைத்தாள், அவர் தரும பத்தினி. ''உங்களுக்குப் பைத்தியமா? யார் படத்தை யாரை வைத்து எழுதுகிறீர்கள்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

''நான் என்ன செய்வது? அந்த முகம் சொல்லுகிறதே'' என்றார்.

''என்ன சொல்லுகிறது? நான் சின்ன மேளம் என்று சொல்லுகிறதா? இல்லை, நான்தான் பதிவிரதா ரத்தினம் சாவித்திரின்னு சொல்லுகிறதா?''

''ஆம். அதுவும் சொல்லுகிறது. நான் படித்த சாமுத்திரிகா லட்சணமும் சொல்லுகிறது.''

''சொல்லும் சுரைக்காய்க்கு உப்பில்லை என்று.''

''அது உன் சமையலைப் பற்றியது. படைப்பவன் அவ்வாறு சமைப்பதில்லை. தெரிந்துதான் சமைக்கிறான். இன்ன லட்சணங்கள் உடையவர்கள் இன்ன குணங்கள் உடையவர்களாக இருப்பார்கள் என்று அவனே விதிக்கிறான்.''

''நல்லா விதிச்சான்.''

''ஏன் குதிக்கிறாய்? இந்தப் பெண் சாவித்திரி தேவியின் குணத்துக்கு மாறுபட்டவளாக நடந்தாள் என்று என்றேனும் வருமானால் அன்றைக்கே சாமுத்திரிகா லட்சண ஏடுகள் அனைத்தையும் கிழித்து நெருப்பிலிட்டு, அதில் நானும் குதித்து விடுகிறேன். இது உறுதி'' என்றார் ஓவிய மேதை ரங்கமன்னார். அவர் கண்கள் சிவந்திருந்தன. வாய் ஒரு மந்திரத்தை ஜபித்தது.

மனித உடலை ஒளி மயமாக்கி உள்ளத்தில் ஒளி வீசச் செய்து, உடலையே கதிரவனாக ஆக்கும் ஒப்பற்ற காயத்ரி மந்திரத்தைத்தான் அவர் ஜபித்தார். அந்த மந்திரத்தின் ஒளி வடிவமாகிய சாவித்திரி தேவியே அவர் கண்கள் முன் நின்றாள்.

வியப்புடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்த அவர் மனைவி அவர் காலில் விழுந்தாள். ''மன்னியுங்கள்! தாங்கள் எல்லாம் தெரிந்தவர்கள்''- என்று வணக்கத்துடன் கூறிவிட்டு வண்ணங்களைக் கலந்தாள்.

பெருமரங்கள் சூழ்ந்த ஒரு வனம். அன்று மாசியும் பங்குனியும் கூடும் நாள். அன்றுதான் நாரத முனிவர் உரைத்தபடி அவளது கணவன் சத்தியவானின் ஆருயிரைக் காலன் கவரப் போகும் நாள். இதை உணர்ந்த சாவித்திரி கௌரி நோன்பிருந்து கண்ணீரும் கம்பலையுமாகப் பிரார்த்தித்து மஞ்சளும் மலரும் தொடுத்த மஞ்சள் கயிற்றைத் தன் திருக்கழுத்தில் கட்டிக் கொண்டு, மலங்க மலங்க விழித்துக் கொண்டிருக்கிறாள். காட்டில் விறகு வெட்டிக் கொண்டிருந்த சத்தியவான், 'மயக்கம் வருகிறது' என்கிறான். அவன் துணைவி அவனைத் தாங்கிப் பிடித்துக் கொள்ளுகிறாள். அப்போது, அவள் கமல நயனங்களின் முன் காலதேவன் வந்து நிற்பது தெரிகிறது. கையில் பாசமும் சூலமும், தண்டமும் ஏந்தி, கிரீடம் அணிந்து, அழகே உருவாய், தரும ராஜன் நிற்கிறான். அவள் நடுங்குகிறாள். அவள் ஹிருதயத்தில் ஜகஜ்ஜோதியாக சவித்திர மண்டல மத்தியில் வீற்றிருக்கும் காயத்திரி மந்திரத்தின் சொரூபிணியான சாவித்திரி அம்மன், ''அஞ்சேல்! அஞ்சேல்! அபயம் தந்தேன்!'' என்று அபய ஹஸ்தத்துடன் காட்சி தருகிறாள்.

இந்தக் காட்சியைத்தான் சித்திரத்தில் தீட்ட முனைந்தார் ஓவிய மேதை.

ஃ ஃ ஃ

“சுக்குமி, லகுதி, பிலி'' என்று படித்தானாம் ஒருவன். இதைக் கேட்டு மற்றவர்கள் சிரித்தார்களாம். இது ஒரு பழங்கால வேடிக்கைக் கதை. இப்போது நம் நாட்டில் யாரும் தவறுதலாகப் படிக்கவே மாட்டார்கள். ஏனெனில், நாட்டு மருந்துகளைப் பொறுத்தவரையில் நாம் நாட்டையே மறந்தவர்களாகி விட்டோம்.

'சுக்கு', 'மிளகு', 'திப்பிலி' என்ற மூவகை மருந்துகளைப் போல் மூன்று நீதிகளைக் கொண்டது ''திரிகடுகம்''. அம்மூன்றோடு ஏலம், இலவங்கம், நாககேசரம் ஆகிய மூன்றையும் சேர்த்தது போல் ஆறு நீதிகளைச் சொல்வது 'ஏலாதி'.

கண்டங்கத்திரி, சிறு நெருஞ்சி, சிறு மல்லி, பெரு மல்லி, சிறு வழுதுணை ஆகிய ஐந்து சிறு மூலிகைகளின் வேர்களைக் கொண்டு வடிக்கப்பட்ட கஷாயத்தைப் போல் ஐந்து நீதிகளைச் சொல்வது 'சிறுபஞ்ச மூலம்'.

நெறியுடன் வாழ நீதியும் நெடு நாள் வாழ மருந்தும் தேவை.

பட்டுக்கோட்டை சுபாவில் உள்ள மருங்கப்பள்ளம் ஆரூரன் தோட்டத்தை நோக்கி மூன்று புரவிகள் வெகுவேகமாக வந்து கொண்டிருந்தன.

நெஸ்கா∴பேயின் ருசியிலிருந்தே தெரியும்:

1 அது தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னிந்திய பீபெரி காபிக்கொட்டையிலிருந்து தயாரிக்கப்படும் 100% தூய காபி

2 அது இன்ஸ்டன்ட் காபி தயாரிப்பதில் உலகிலேயே அதிக அனுபவம் உடையவர்களால் தயாரிக்கப்படுகிறது.

3 உங்கள் ருசிக்கேற்றபடி 'ஸ்ட்ராங் காகவோ' 'லைட்டாகவோ' போட்டுக் கொள்ளக்கூடியது.



குறைந்த அளவு: ஸ்பூன் நிரம்ப: குவித்து:

நெஸ்கா∴பேயின் ருசியிலிருந்து தெரியவராத விஷயம்:

4 அது சிக்கனமானது. நேரடியாக கப்பிலேயே தயாரித்துக் கொள்ளக் கூடியதால் அதை தேவையான அளவு மட்டுமே போட்டுக் கொண்டால் போதும்.

NESTLÉ

-ஒரு நெஸ்லே தயாரிப்பு



NESCAFÉ* நெஸ்காஃபே—தனிச்சிறப்புள்ள தரமான காபி!

*நெஸ்கா∴பே என்பது நெஸ்லேயின் இன்ஸ்டன்ட் காபியைக் குறிக்கும் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும்

NCE 6248 A


பிரிட்டானியா
க்ளாக்ஸோ
தேநீர் அருந்தும் வேளையில் உங்கள் குடும்பத்தினருக்கு இனிய சுவையுள்ள கிளாக்ஸோ பிஸ்கெட்டுகளை வழங்கி மகிழ்ச்சி அடையுங்கள்! பிரிட்டானியாவின் கிளாக்ஸோ பிஸ்கெட்டுகள் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் புஷ்டி தருகின்ற சிற்றுணவாகும். தேநீர், காபி, குளிர்ந்த பானம் ஆகியவை அருந்துகையில் கிளாக்ஸோ பிஸ்கெட்டுகளை வழங்குங்கள்.
GLAXO BISCUITS
THE BRITANNIA BISCUIT CO. LTD.
Britannia Glaxo Biscuits
BRITANNIA GLAXO BISCUITS
பிரிட்டானியா
பிஸ்கெட்டுகள்
© பிரிட்டானியா பிஸ்கெட் கம்பெனி லிமிடெட்
FBMI

தோட்டத்தின் உள்ளே பாத்தி பாத்திகளாக ஆயிரக்கணக்கான மூலிகைச் செடிகளும், கொடிகளும் அக்கறையாக வளர்க்கப்பட்டு வந்தமையால் அவர்கள் தங்கள் புரவிகளை உள்ளே கொண்டு செல்லாமல் தோட்டத்தின் வாயிலிலேயே பரிகளை விட்டு இறங்கி உள்ளே விரைந்தனர்.

வைத்தியசாலை பைத்தியசாலையாக விளங்கியது. சித்த வைத்தியரும், ஆயுர்வேத வைத்தியரும் ஒருவர் மேல் ஒருவர் சீறிக் கொண்டார்கள்.

''என்ன ஐயா, பிதற்றுகிறீர்? உங்கள் சித்த வைத்தியம் எல்லாம் இனிமேல் செல்லாது. அத்தனையும் பச்சை வெட்டு. பவழமல்லிகைப் பூ உதிர்வதைப் போலப் பற்கள் விழுந்து விடுகின்றன'' என்றார் ஆயுர்வேத வைத்தியர்.

''எங்கள் பச்சைவெட்டு பல்லோடு போகுது. உங்க ஆயுர்வேதம் அடிமரத்தையே சாய்ச்சிடுதே. உடம்பிலே மருந்து பிடிக்கிறதுக்குள்ளே உயிரே போயிடும்!'' என்றார் சித்த வைத்திய சிகாமணி.

''ஏன்? உங்க சித்தர்கள் செத்தவனைக் கூடப் பிழைக்க வைப்பார்களாமே! இவன் பித்தத்தைத் தலையிலேயிருந்து இறக்குகிறதுதானே?''

''பித்தத்தை இறக்கித்தான் விட்டோம். இன்னும் பிடிவாதம்தான் இறங்கவில்லை. நீங்கள்தான் ஆயுர்வேத சிகாமணி இருக்கிறீர்களே? அதற்கு ஒரு பிடிவாத மடக்கியைச் சாறு பிழிந்து கொடுத்து அவன் பிடிவாதத்தை இறக்குகிறது?''

''வயிற்றிலே இடமிருந்தா கொடுத்திருப்போம். அதற்குள்ளே நீர் சித்த மருந்தைக் கொடுத்துப் பித்தத்தை ஏற்றி விட்டீர். பித்தனைப் போல் பேசாதீர். உங்க சித்தர்கள் எல்லாமே பித்தர்கள்தான்'' என்று ஆயுர்வேத வைத்தியர் சித்த வைத்தியர் மீது சீறிப் பாய்ந்து அவர் சிண்டில் கைபோட்டார்.

இதைக் கண்ட யூனானி வைத்தியர் தமக்குச் சிண்டு இல்லையே என்று சந்தோஷப்பட்டுக் கொண்டார். இந்தக் கலகத்துக்குக் காரணம் சிறிய பூசாரிதான். ஒரு பிழிச்சல் தொட்டிக்குள் எலுமிச்சைச் சாறை நிரப்பி அதில் அவனை ஊறுகாய் போல் ஊறப் போட்டிருந்தார்கள். அவன் ஊறினானேயன்றி உண்மையை உளறக்கூட இல்லை. அவனுடைய நோய் மூளை சம்பந்தப்பட்ட நோய் ஆதலால் மூலைக்கு மூலை கணப்புகளை வைத்து அவற்றில் நெடி மருந்துப் பொடிகளைத் தூவினார்கள். புகை மண்டையில் ஏறிப் பைத்தியம் தும்மவில்லை. வைத்தியர்கள் தும்மினார்கள். இவை ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, மற்றொரு பகுதியில், ''இளவரசே! அவனுக்கு ஊமைத்த விதையும், கஞ்சாவும் உள்ளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. விஷத்தை வெளியேற்றி விட்டோம். ஆனால் விஷயத்தை வெளியே கொண்டு வர முடியவில்லை'' என்றார் தலைமை வைத்தியர் தியாகராசர் மழவராயர்.

இதைக் கேட்ட பிரதாபசிம்மர் திடுக்கிட்டுச் சிறிது நேரம் சிலைபோல் அமர்ந்து விட்டார். 'முல்லைவேந்தனைப் பற்றிய உண்மையை இவன் ஒருவனால்தான் நாம் அறிந்து கொள்ள முடியும். இவனுக்கோ இன்னும் சித்தம் சுவாதீனத்துக்கு வரவில்லை. இப்படியே நெடுநாள் கிடந்தால்.... நாம் எப்போது உண்மையைத் தெரிந்து கொள்வது?' என்று அவர் மனம் வேதனைப்பட்டது. மிக்க மனச் சோர்வுடன் தலைமை வைத்தியரிடம், ''மனோதத்துவ முறையில் மருத்துவம் செய்தீர்களா?'' என்று கேட்டார்.

''அதுவும் பார்த்து விட்டோம். கண்ணைக் கவரும் பொற்காசுகளை அவனருகில் அள்ளி இறைத்தோம். அந்த ஓசையில் கண் திறந்து பார்த்தான். ஆனால் கையால் தொடவில்லை'' என்று அவர் கூறிய உடனே இளவரசரின் கண்களில் ஒளி வீசியது. ''கண்ணைத் திறந்து பார்த்தான் அல்லவா?'' என்று ஆவலுடன் கேட்டு விட்டு, ''பகலுக்கும் இரவுக்கும் இடையே 'அந்தி மயக்கம்' என்று ஒரு பொழுது இருக்கிறது. அதைப் போலவே நோயாளியின் மன நிலை உணர்ந்தும் உணராமலும் உள்ள நிலையில் இருக்கிறது. உண்மையை இப்போதே இவன் வாயிலிருந்து பெற வேண்டும். இல்லாவிட்டால் அவன் உண்மையை மறக்கவும் கூடும். அல்லது மறைக்கவும் கூடும்'' என்ற முடிவுக்கு வந்தார். தலைமை வைத்தியரின் காதில் எதையோ இரகசியமாகக் கூறினார். வைத்தியர் மரியாதையுடன் சிரித்துக்கொண்டே ''உத்த

ரவு'' என்றார். தம் அருகிலிருந்த சர்க்கரையிடமும், அவ்வாறே இரகசியமாய் ஏதோ உத்தரவிட்டார். சர்க்கரையும், சியாமாவும் இரண்டு செப்புக் குடங்களுடன் ஓடினார்கள்.

வைத்தியசாலைக்குள் தலைமை வைத்தியர் உள்ளே நுழைந்ததும் சந்தடை தீர்ந்து நிசப்தம் நிலவியது. அங்கு பணிபுரிபவர்கள் எல்லாரும் அடக்க ஒடுக்கமாக நின்றனர். இந்த அமைதியில் பூசாரி அஞ்சினான். தலைமை வைத்தியர் பூசாரியின் அருகில் வந்து நோயாளியின் நாடியைப் பிடித்துப் பார்த்தார். வைத்தியர் வாயிலிருந்து, ''பாவம், த்சுசு.... த்சுசுசு... இனி இவன் பிழைக்க மாட்டான். சரி, இவனைத் தூக்கிக் கொண்டு போய்ப் போட்டு விட்டு, மற்ற ஏற்பாடுகளைச் செய்யுங்கள்'' என்ற உத்தரவு பிறந்தது.

இந்த வார்த்தையால் ஜில்லென்றிருந்த எலுமிச்சைப் பழச் சாறு கொதிப்பதுபோல் ஓர் உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. வைத்தியர் அதைக் கவனிக்காதவர்போல் போய்விட்டார்.

ஓடைக் கரையில் அங்குமிங்குமாகப் பல வறட்டிக் குவியல்களிலிருந்து புகை வந்து கொண்டிருந்தது. சற்றுத் தூரத்தில் அவன் மணலின் மீது மல்லாந்து கிடந்தான். மரணத்திற்குமுன் ஏற்படும் தெளிவுதானோ? அல்லது அவன் மனமே தெளிவாக இருந்ததோ? 'இனி பிழைக்க மாட்டேனா?' என்று மனத்துக்குள் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தான். இந்தச் சமயம் பார்த்துத்தானா நரியும் ஊளையிட வேண்டும்? பக்கத்தில் இருந்த புதருக்குள்ளிருந்து இரண்டு நரிகள் மாறிமாறி ஊளையிடுவது அவன் காதில் கேட்டது. அவன் நரிகள் தன்னைத் தின்றுவிடுமோ என்று நடுங்கினான். அப்பொழுது கலகல வென்று ஒரு பெண் சிரிப்பதைக் கேட்டான். அவனுடைய அஞ்சிய உள்ளத்துக்கு அந்த வஞ்சியின் நகை அமுதம் போல் இருந்தது. மெல்லத் தலையைத் திருப்பினான். மேனகையையும், ரம்பையையும் போல் இரண்டு அழகிய பெண்கள் தங்கள் இடுப்பில் குடத்தோடு ஓடையிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு, பக்கத்திலிருந்த ஒற்றையடிப் பாதை வழியே சிரித்துக் கொண்டு வந்தார்கள். 'ஐயோ, நடக்கிறார்களே! நிற்கமாட்டார்களா?' என்று அவன் எண்ணினான். அப்போது, ''அக்கா, அக்கா! கொஞ்சம் நில்லு'' என்றாள். இடுப்பில் குடமும் வலது கைநிறைய அல்லிப் பூக்களும் வைத்துக் கொண்டு ஆடிஅசைந்து வந்த இளம் பெண், ''என்ன சித்ராங்கி?'' என்றாள் தமக்கை. ''அக்கா! அதோ பார், மன்மதனாட்டம் ஒரு வாலிபர் மணலிலே படுத்திருக்கிறாரு'' என்றாள்.

''எவன் எக்கேடு கெட்டால் உனக்கென்ன? வா, சித்ராங்கி! இருட்டுது. வீட்டுக்குப் போகலாம். பேய்பிசாசுங்க நடமாடுற நேரம் இது!'' என்றாள் தமக்கை.

'இங்கே அவை வேறு நடமாடுமா?' என்று எண்ணினான் அவன்.

''ஆம்புளை, பக்கத்திலே இருக்கிறபோது அதுக்கு ஏனக்கா பயப்படணும்?'' என்று சொல்லிக் கொண்டே அல்லி மலர் வல்லி அவன் அருகில் மெல்ல நடந்து வந்தாள்.

''அக்கா! இந்தக் காளை ஏதோ மயங்கிக் கிடக்குது!'' என்று சொல்லித் தன் கையிலிருந்த அல்லிப் பூவால் அவன் உடலில் இலேசாக வருடினாள் அவள். அவன் உடலின் அசைவுகளைக் கவனிக்காதவள் போல், ''என்ன அக்கா! பூவாலே தடவுகிறேன். பிணம் போல் கிடக்கிறாரே'' என்று சொல்லிவிட்டு, இடுப்பிலிருந்த குடத்தைத் தரையில் வைத்தமர்ந்தாள் அப்பெண்.

''அக்கா! இவர் மிகவும் களைப்பாக இருப்பது போல் தெரிகிறது. கொஞ்சம் தண்ணீர் கொடுக்கலாமா?'' என்று கேட்டாள்.

''சித்ராங்கி! அந்த ஆள் என்ன சாதியோ! என்ன குலமோ? உனக்கு ஏண்டி இந்த வம்பு?''

''அக்கா! சாதியும் குலமும் காதலுக்கில்லை. நான் கொடுக்கத்தான் போகிறேன்'' என்று தங்கைக்காரி கூறியதைக் கேட்டவுடன் பூசாரியின் மனம் புதுப் பலம் அடைந்தது. காதல் என்றவுடனே வாயை 'ஆ'வெனப் பிளந்தான். அவள் அதைக் கவனிக்காதவள் போல் நீரைக் கையால் அள்ளி அள்ளி அவன் வாயில் வார்த்தாள்.

''ஐயையோ!'' என்றாள் தமக்கை.


''என்னடி? ஒரு சொட்டுத் தண்ணீர்கூட உள்ளே போகமாட்டேங்குது. அப்படியே நீ கொடுத்த தண்ணியெல்லாம் மேலே வழிஞ்சிருக்கே! என்ன என்று பாரு?'' என்றாள்.

பூசாரிக்குத் 'திக்' என்றது. இளையவள் பரபரப்புடன், ''ஆமாக்கா! என்ன மாயமோ தெரியல்லியே!'' என்று தன் கையால் அவன் மார்பிலும் முகத்திலும் தடவினாள்.

''ஐயோ! சில்லிட்டுக் கிடக்குதே! அட அக்கா, மோசம் போயிட்டேண்டி. இவரு செத்தே போயிட்டாரு. ஐயோ! மாரியாத்தா!'' என்று அழுதாள்.

'என்ன ஆச்சரியம்! நான் இறந்துவிட்டேனா. அங்கே வைத்தியர் இவன்

இந்த ப்ரிஸில் முனைகளை
பூதக் கண்ணாடியின் கீழ்
ஒப்பிட்டுப் பாருங்கள்



பினாகா

டூத் பிரஷ்

'வட்டவடிவுள்ள நுனிகளை' உடையதால்
ஈறுகளைக் கிழிக்காது

சுத்தமாக பல் துலக்குங்கள்
அபாயமின்றி பல் துலக்குங்கள்
பினாகா கொண்டு பல் துலக்குங்கள்

பிழைக்க மாட்டான்' என்றார். ஆட்கள் இடுகாட்டில் கொண்டு வந்து போட்டார்கள். இப்போது இவன் 'இறந்து விட்டேன்' என்று அலறுகிறானே..... உண்மைதான் என்ன? நான் பிணமா? மனிதனா? 'அட.., தெய்வமே! காதலி ஒருத்தி கிடைக்கும் போதுதானா காலன் இப்படி மோசம் செய்ய வேண்டும்? செத்த பிறகு மனுசன் எப்படி இருப்பான் என்று நமக்குத் தெரியவில்லையே! முன்னே பின்னே செத்திருந்தா அல்லவா தெரியும்!' என்று பல சந்தேகங்கள் அவனுக்கு வந்தன.

''இல்லை. நான் உயிரோடுதான் இருக்கிறேன்'' என்று சொல்லப் பாடு பட்டான். நாவைப் புரட்டவே முடியவில்லை. இது அவன் சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்தியது. உடனே காலை பட்பட் என்று ஆட்டிப் பார்த்தான். ''அக்கா, உயிர் இருக்குது. காலை ஆட்டுறாரு பாரு!'' என்று குதித்தாள்.

''இல்லே, அது பிணம்தான். அது காலைமட்டும் ஆட்டும். அதுக்காகத்தான் யாராவது இறந்து போனா அவங்க கால் கட்டை விரலை உடனே கட்டிடுவாங்க''. என்று அழுதாள் தமக்கை.

''அக்கா, நீ கவலைப்படாதே! நான் கொடுத்து வைச்சது அவ்வளவுதான்.

ஓடைக் கரை மேலே
ஒளிஞ்சிருந்த மம்முதனே
வாடைப் பொடி அழகா
வருவேண்டா உன்பிறகே
கண்டதும் காதல் கொண்டேன்
கட்டழகா கண்மணியே.
பெண்டாட்டி யாகிவிட்டேன்
பிரிஞ்சிருந்து வாழ்வேனோ?''

என்று ஒப்பாரிக் கண்ணிகளை ஒப்பித்து விக்கி விக்கி அழுதாள் தங்கை.

''அக்கா! அவர் யாரோ? எந்த ஊரோ? என்ன பேரோ? நான் கண்டேன். காதல் கொண்டேன். என் கன்னிப் பருவம் நீங்கியது. அவர் என் கணவர். நான் அவர் மனைவி. இந்தப் பூவை அவருக்கு நீ அறிய இந்த நீரோடை அறிய மாலையிடுகிறேன்'' என்று தன் கையில் இருந்த அல்லி மலர்களை அவன் மேல் கொட்டினாள்.

அவன் தன் சக்தி முழுவதையும் ஒன்றாகக் கூட்டி, ''கண்ணே! காதலியே! கதறாதே! நான் உயிரோடு தான் இருக்கிறேன்'' என்று உரைத்தான். அவன் குரல் கிணற்றிலிருந்து தவளை கத்துவதுபோல் மெதுவாகக் கேட்டது.

பாவம், அவள் இருந்த மனப் போக்கில்தான் அவன் குரல் காதில் விழவில்லையோ அல்லது கேட்டும் கேளாதது போல் இருந்தாளோ என்னவோ?

''அக்கா! நீ வீட்டுக்குப் போ. அம்மாவிடம் உன் மகள் உன் உத்தரவைப் பெற்றுக்கிட்டு உடன்கட்டை ஏறப் போகுதுன்னு சொல்லி உன் கையில் கொஞ்சம் மல்லிகைப் பூவும், மஞ்சளையும் கொண்டா'' என்றாள்.

உடன்கட்டை என்றவுடன் அவள் காதலின் உறுதியைக் கண்டு உள்ளம் பொங்கினான் அவன். இவள் அவசரப் பட்டுக் கொளுத்தி விட்டால்? இந்தக் கட்டை மட்டும் போனால் பாதகமில்லை. அவள் காதலும் விறகாகிவிடுமே என்று கவலைப்பட்டான். தன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உரக்கக் கூவினான்.

''சித்ராங்கி! நான் உயிரோடுதான் இருக்கிறேன்! உடையார்பாளையம் பக்கத்தில் காட்டுக் குடியிருப்பு என் ஊரு. கருப்பையா என் பேரு. கலி முத்திப் போனதினாலே அங்கே பரமசிவம் அவதாரம் செஞ்சிருக்காரு. அவருக்குக் காட்டு ராசான்னு பேரு. அவர்தான் இந்த நாட்டை ஆளப் போறாரு. அவர் கட்டளைப்படிதான் நான் தஞ்சாவூருக்கு வந்தேன்.

''கண்ணே! உடன்கட்டை ஏறாதே. நீயும் உன் அக்காளும் என்னைத் தூக்கிட்டுப் போய் அந்தக் காட்டு ராசா முன்னாலே போட்டுடுங்க. அவரு மனசு வைச்சா செத்தவனையும் பிழைக்க வைச்சிடுவாரு. நான் பிழைச்சு வந்து உங்க ரெண்டு பேரையுமே கட்டிக்கிறேன்'' என்று நிறுத்தி நிறுத்திக் கூறி விட்டுக் கண்ணைப்போடு அவர்களையே பார்த்தான் அவன்.

''அக்கா! பேசி விட்டார் பேசி விட்டார். நாம் பெண்கள் ஆயிற்றே. இவரை நம்மால் தூக்கிச் செல்ல முடியுமா? இரண்டு ஆண் பிள்ளைங்க இருந்தா இப்ப நல்லா இருக்கும்!''

''நினையுங்க. நல்லா பக்தியோட நினையுங்க!'' என்றான் அவன்.

''முல்லைவேந்தன் என்கிற காட்டு ராசாவே! கலியுக அவதாரமே! இந்தக் கன்னியரை ஆணாக்கிவிடு'' என்று கைகளைக் கூப்பினாள் தங்கை.

என்ன ஆச்சரியம்! இரு பெண்களும் ஆண்களாக மாறினர். சர்க்கரையும் சியாமாவுமாக அவன் முன் காட்சி அளித்தனர். காட்டுக் குடியிருப்பு கருப்பையா ''அடபாவி, நீயா?'' என்று சர்க்கரையின் மீது பாய்ந்தான். உடனே பக்கத்துப் புதரிலிருந்து பிரதாபசிம்மரும் அவருடைய வீரர்களும் அங்கு பிரசன்னமானார்கள். **(தொடரும்)**







இது நாள் வரை நீங்கள்
கனவிலே கண்டு
நெஞ்சத்தைப்
பறிகொடுத்து வந்த
நறுமணப் பவுடரை
நனவாக்குகிறது,
புதுமுறையில் அமைந்த
கோயா. பனித்துளிக்கு
நிகரான இந்த பவுடர்
இந்த நாள் வரை
கண்டிராதபடி மைய
அரைக்கப்பட்டதும்
மிருதுவானதும் ஆகும்.
அது மட்டுமா? கோயா
நிபுணர்கள் இதில் புகுத்தி
யுள்ள பரிமளம் நாள் முழு
தும் நிலைத்து, புத்தம்புதிய
சுகந்தத்தைப் பரப்பிக்
கொண்டே இருக்கும்.
புதுமை மணம்
பொருந்திய 'பிளாக்
ரோஸ்' பூத்த புது
மலரின் வாசனை
வீசும் 'கார்டீனியா',
உள்ளத்தை அள்ளும்
'பாஸ்போர்ட்'—
நீங்கள் தேர்ந்தெடுக்க
இத்தனை நல்ல வாசனை
ரகங்களில் கோயா
கிடைக்கிறது. நெடு
நாள் நீடிக்கும் உயர
மான புதிய டின்னில்
மூன்றுமே வருகின்றன
என்பதை மறவாதீர்.




புதிய முறையில்
அமைத்த உயரமான
புதிய டின்னில் கிடைக்கும்
அருமையான பவுடர்

இந்த நறுமண
பவுடரைத்
தயாரிப்போர்

கோயா

பாரிஸ்
லண்டன்
நியூயார்க்



அட்லாண்டிஸ் (ஈஸ்ட்)
லிமிடெட்
(இங்கிலாந்தில்
இணைக்கப்பட்டது)

AGC-5 TM

பூஞ்சாளமும் உதவும்

விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் நாட்டுக்கு உருப்படியான சேவை செய்தவர்களின் கணக்கெடுத்தால் டாக்டர் ஜகந்நாதன் அவர்களின் பெயரை முக்கியமாகக் குறிப்பிட்டாக வேண்டும். உயிர் வர்க்கங்களின் பரிவர்த்தனையைப்பற்றி ஆராயும் பயோகெமிஸ்டிரிதான் அவரது ஆராய்ச்சித் துறை. இதில் அவரது ஆராய்ச்சி மூலம் இந்தியத் தொழில்துறைக்கும், அந்நியச் செலாவணி மிச்சம் பிடித்தலிலும் செய்துள்ள சேவை மிகப் பெரிது.

முக்கியமாக இந்திய நெசவாலைகள் மேனாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வந்த சில ரசாயனப் பொருட்களை, இந்தியாவில், உள்நாட்டில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டே தயாரித்துக் காட்டினார். அதிலிருந்து வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்வது நின்றது. அது எத்தனை லாபகரமானது என்பது மேற்படி தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நன்கு தெரியும்.

மற்றொரு துறையிலும் டாக்டர் ஜகந்நாதன் அவர்களின் ஆராய்ச்சி மகத்தான சேவை புரிந்துள்ளது. இந்தியாவுக்கு அந்நியச் செலாவணி சம்பாதித்துத் தரும் முக்கியமான பொருள் தோல். ஆனால் இந்தத் தோலைப் பதனிடச் சில மேனாட்டு ரசாயனப் பொருள்களை இறக்குமதி செய்து வந்தார்கள். ஆனால் டாக்டர் ஜகந்நாதன் தமது ஆராய்ச்சிகளின் மூலம், தோல் பதனிடும் தொழிலில் ஒரு புது முறை கண்டு பிடித்துக் கூறினார். அந்த முறையின் காரணமாக உண்டாகும் பாக்டீரியாக் கிருமிகள், தோலிலுள்ள புரதச் சத்தை உண்டு ஜரித்து தோலை நல்ல மிருதுவான தன்மை கொண்டதாகச் செய்து விடுகின்றனவாம்!

இப்பொழுதெல்லாம் வைத்தியர்களிடம் ஏதாகிலும் குறையுடன் போனால், ''வைட்டமின் மாத்திரைகள் சாப்பிடுங்கள்'' என்று யோசனை சொல்லி, மாத்திரையும் எழுதிக் கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். மேலும், பல மருந்து தயாரிக்கும் கம்பெனிகள், தங்கள் மருந்துகளில் வைட்டமின் பி. சேர்க்க வேண்டியிருக்கிறது. இந்தியாவில், ஒரே ஒருகம்பெனியில் வைட்டமின் பி தயாரிக்கும் சாதனம் உள்ளது. ஆகவே, மற்ற மருந்து தயாரிப்பாளர்கள் தங்களுக்குத் தேவையான 'வைட்டமின் பி'யை இந்தக் கம்பெனியிட மிருந்தோ, வெளிநாட்டி லிருந்தோ வாங்க வேண்டி யிருந்தது. ஜகந்நாதன், 'பி' வைட்டமின் தயாரிக்க ஒரு புது வகை சாதனம் கண்டு பிடித்தார். அது திருப்திகரமாக இருக்கவே, பொதுத் துறையில் பிம்பிரியில் இருக்கும் பெனிஸிலின் தயாரிக்கும் மருந்துச் சாலையில், ஒரு கோடி இருபது லட்சம் ரூபாயில் ஒரு வைட்டமின் பி. தயாரிப்புச் சாலை நிர்மாணிக்க முடிவெடுத்திருக்கிறார்கள்.

அவரது ஆராய்ச்சியில் முக்கியமாக உள்ள மற்றொரு விஷயம் என்ஸைம்களைப் பற்றியதாகும். அதிலும் மூளையில் இருக்கும் என்ஸைம்கள் எப்படிப் பணி புரிகின்றன என்று ஆராய்ந்து வருகிறார்.

மற்றொரு விஷயம், தாவர உயிர் அணுக்களை — செல்களை ஆராய்ச்சிக்கூடத்தில் உள்ள கண்ணாடிக் குழாய்களில் வளர்க்க முடியுமா? அதற்கு எவ்வளவு ஊட்டச் சத்து தேவைப்படும்? வேகமாக வளர எந்த அளவுக்கு என்ன சத்து தேவைப்படுகிறது என்பன போன்றவற்றை ஆராய்ந்து வருகிறார்.

ஊசிப் போன வடையில் இருப்பதும் ஒரு வகை உயிர்ச் சக்திதான், நாய்க் குடையிலிருப்பதும் ஒரு வகை உயிரணுதான். — இப்படிச் சுமார் 1200 உயிரணுப் பண்ணைகளை வகைப்படுத்தி டாக்டர் ஜகந்நாதன் பேணிப் போஷித்து வருகிறார். எதற்கு ?

இப்படிப்பட்ட உயிரணுக்களைப் பற்றிய ஆராய்ச்சி தேசத்தில் பல ரசாயன ஆராய்ச்சிக் கூடங்களிலும் நடைபெறுகின்றன. இந்த ஆராய்ச்சிக்கூடங்களிலிருந்து தங்களுக்குக் குறித்த உயிரணுக் கிருமிகள் தேவை என்றால் டாக்டர் ஜகந்நாதன் அனுப்பி வைக்கிறார். இப்படி ஆண்டுதோறும் சுமார் நானூறு பாக்டீரியாப் பண்ணைகளைத் தேசத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள ஆராய்ச்சிக் கூடங்களுக்கு அனுப்பி வைக்கிறார் — இலவசமாக. இப்படி இந்தத் துறையில் ஆராய்ச்சி ஆர்வத்தையும் மனப்பான்மையையும் வளர்க்க டாக்டர் ஜகந்நாதன் தம்மாலான உதவி செய்துவருகிறார்.

டாக்டர் ஜகந்நாதன் புனவில் உள்ள தேசிய ரசாயன ஆராய்ச்சிக் கூடத்தில் (National Chemical Laboratory) பயோ கெமிஸ்டிரி பகுதிக்குத் தலைவராக அது ஆரம்பிக்கப்பட்ட 1960ம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருகிறார்.



டாக்டர் ஜகந்நாதன்

டாக்டர் வி. ஜகந்நாதன் தஞ்சை ஜில்லாவில் பிறந்தவர். சென்னை ராஜதானிக் கல்லூரியில் கெமிஸ்டிரி ஆனர்ஸும், பெங்களூர் இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஸயன்ஸில் எம். எஸ்ஸி. பட்டமும் வாங்கினார். வெளிநாட்டுச் சர்வகலாசாலையில் ஆராய்ச்சி புரிந்து டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார். தற்சமயம் அவருக்கு நாற்பத்தேழு வயதிருக்கும். அவர் ஒரு பிரம்மச்சாரி என்று அறிகிறோம்.

— ஆதாரம்: ''ஹிந்து''

நெஞ்சு தோய்ந்த நெருப்பு



சூளையிலிருந்து வெந்த கற்களைப் பிரித்துக் கொண்டிருந்தான் ஷேக். நொண்டி என்றால்தான் ஜனங்களுக்கு அவனைப் புரியும். அவனுடைய உண்மைப் பெயர் யாருக்குமே தெரியாது. ஏன், அவனுக்கேகூடத் தெரியுமோ, தெரியாதோ? பிள்ளைப் பிராயத்திலேயே அவனது இடது கால் முடமாகி விட்டது. எனவே, மக்கள் அவனுக்கு 'நொண்டி' என்றே பெயர் சூட்டிவிட்டனர். 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பது போலக் காளைப் பருவத்திலும் அவன் துரதிர்ஷ்டம் அவனை விடவில்லை. என்ன தப்புத்தண்டா காரியத்தில் ஈடுபட்டானோ, முகத்தில் இருந்த மூக்கை மறைத்து விட்டது. மூக்கு இருக்க வேண்டிய இடத்தில் ஒரு விகாரமான ஓட்டை மட்டுமே இருந்தது. பிறகு வைசூரி வேறு விளையாடி முகம் முழுவதிலும் ஆணியால் பொளிந்ததுபோலாக்கி விட்டது. எனவே, முன்னைக் காட்டிலும் குரூபமாகவும் பயங்கரமாகவும் காட்சி அளித்தான் அவன்.

கல் எடுக்கும் வேலையில் அவன் கன ஜோராக ஈடுபட்டிருந்த பொழுது, அதாயி சற்றுத் தொலைவில், தன் மாட்டு வண்டியை ஓட்டிப் போய்க் கொண்டிருந்தான். வண்டி மாடுகளின் வாலைத் திருகி அவன் தன் அபகரத்தில் ஒரு தெம்மாங்கைத் தொடங்கிய பொழுது, திடுமென ஒரு தடை தோன்றியது. வண்டி மாடுகள் சட்டெனத் துணுக்குற்று நின்றன. அதாயி கோபம் கொண்டநாக மெனச் சீறினான்:

''அட, சண்டி மாடுங்களா? சவுக்கடி கேட்குதா?''

சொன்னதைச் செயலாக்குவதற்காக அவன் சாட்டையை ஓங்கினான். இரைக்க இரைக்க நிற்கும் மாடுகளை அடிக்க அவன் கையைத் தாழ்த்துவதற்கு முன்னே அவன் பார்வை பாதையில் பதிந்தது. ஓங்கிய கை ஓங்கியபடியே நின்றது. அச்சத்தால் உளறியடித்துக் கொண்டு, 'பாம்பு, பாம்பு' என்று கத்தினான்.

வண்டி மாடுகளுக்கு எதிர்த்தாற்போல் பாதையில் ஒரு பாம்பு உயர்ந்து நிமிர்ந்துநின்று படமெடுத்து ஆடிக் கொண்டிருந்தது.

தமது நாவல் ஒன்றுக்காக பாரதீய வித்யா பீடத்தின் ஒரு லட்ச ரூபாய் இலக்கியப் பரிசைப் பெற்றவர் ஸ்ரீ தாரா சங்கர் பானர்ஜி. அவர் எழுதிய சிறுகதை இது. ஸ்ரீ பங்கிம் சந்திரர் பெண்ணின் பொறுமைக் குணத்தை '' நஞ்சில் தோய்ந்த நெருப்பு '' என்று வர்ணித்திருக்கிறார். இச் சிறுகதை அதற்கு விளக்கமாக அமைந்திருக்கிறது.

★

பாம்பு பிடிக்கிறதுதான் நொண்டிக்குத் தொழில். பிடித்த பாம்பை ஆட்டிக் காட்டிக் கொஞ்சம் வருவாய்க்கு வழி தேடிக் கொள்வதும்கூட அவன் தொழில்தான்! அவன் குடிசையிலே பெரிய பெரிய சட்டிகள் உரி போலக் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். அவற்றில் அவன் பிடித்த பாம்புகள் அடைக்கப்பட்டிருக்கும். சட்டிகளின் வாயை அவன் இறுக மூடி வைத்திருப்பான்:

அவனிடம் வேண்டிய பாம்புகள் சேர்ந்து விட்டால், அவன் கூலி வேலைக்குச் செல்வதில்லை. குடுகுடுப்பையையும் மகுடியையும் எடுத்துக் கொண்டு பாம்புகளை வேடிக்கை காட்ட எடுத்துச்சென்று விடுவான். இந்த வித்தையினாலே அவனுக்கு வருமானம் ஒன்றும் குறைந்து விடாது. சொல்லப் போனால் அதிகமாகவேகூட வரும். கையிலே நாலு காசு துள்ளினால் கேட்க வேணுமா? போதைப் பொருள்களை நாடிப் புறப்பட்டு விடுவான்.

அதாயி சட்டென்று வண்டியிலிருந்து கீழே குதித்தான். பக்கத்திலிருந்த செங்கல் ஒன்றைத் தூக்கிக் கொண்டான். அவன் குறி பார்த்து அடிக்க முயலும் முன்பே நொண்டி கூச்சலிட்டான்: ''டேய்! அதை அடிக்காதே! அதைக் கொஞ்சம் நான் பார்க்கிறேன்!''

நொண்டிக் காலை இழுத்துக் கொண்டே அதாயியை நோக்கி வந்தான். அதாயி செங்கல்லைத் தூர விட்டெறிந்துவிட்டு, ''ஆகா! எத்தனை அழகான பாம்பு! முகத்துச் சிவப்பு குங்குமம் மாதிரியில்லே இருக்குது! படமும்தான் எப்படி....? அட, ஓடிப் போயிடும் போலிருக்குதே! அண்ணே, ஓடியா! சீக்கிரம் ஓடியா!'' என்று துரிதக் குரல் கொடுத்தான்.

பாம்பு வேகமாக ஊர்ந்து நொண்டியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

''கொஞ்சம் உன் சாட்டையை இப்படி விட்டெறி, அதாயி!'' என்று உரக்கக் குரல் கொடுத்தான் நொண்டி. அதற்குள் பாம்பு குழிக்குள் புகுந்துவிட்டது.

''பார்த்தால் உதயநாகம் மாதிரித் தோணுது! இந்த மாதிரிப் பாம்பு கிடைக்கிறது அபூர்வம்! இந்தப் பாம்புமட்டும் என் கையிலே கிடைச்சிருந்தது, எனக்குக் கொஞ்சம் வரும்படி கிடைச்சிருக்கும்!''-நொண்டி வருத்தப்பட்டுக் கொண்டான்.



அந்த மயக்கத்திலே அவன் சிரித்தால் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கும். திரிபுரம் எரித்த சிவனார் சிரிப்புப் போல. ஆனால் அவனிடம் ஒரு குணம் என்ன, தெரியுமா? வேலைவெட்டி என்று வந்து விட்டால், டிமிக்கி கொடுக்கிற பழக்கம் கிடையாது. எந்த வேலை கொடுத்தாலும் பொறுப்பாக, நாணயமாகச் செய்து முடிப்பான். வேலை வெட்டி கிடைக்காத நாளானால், அவன் பிச்சை வாங்கப் புறப்படுவதும் உண்டுதான். எந்த நேரம் பார்த்தாலும் அவன் தோளிலே ஒரு கூடை மட்டும் தொங்கிக் கொண்டே இருக்கும். பிச்சையிலே கிடைக்கிறதைப் போதையிலே செலவழித்துவிட்டு வீட்டுக்கு வருவான். வந்ததும் ஜுபேதாவின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, ''என்னைக் கண்ணாலம் கட்டிக்கிட்டியே, நீ என்ன சுகத்தைக் கண்டே? எப்போ பார்த்தாலும் என் காரணமா நீ கஷ்டம்தானே அநுபவிச்சுக்கிட்டிருக்கே? உன்னைத் தினம் பட்டினி போட்டுச் சாவின் வாயிலே கொண்டு போய்த் தள்ளறேனே, பாவி!'' என்று உருகுவான்.

ஜுபேதா அவன் தலை முடியைக் கோதியவாறே, ''போதும், போதும்! எழுந்திரு! இதென்ன பைத்தியக்காரங்க வேலை செய்யறே? எங்கேயாவது போய் அரிசி வாங்கி வந்து நான் உனக்கு ஆக்கிப் போடறேன். கவலையை விடு!'' என்பாள். அப்பொழுது அவன் சிரிக்கிற சிரிப்பு நிஜமாகவே கவலையைப் போக்கிவிடும் ஆற்றல் பெற்றதுதான்.

ஆனால் அவன் விசித்தவாறே அவளைத் தன் அரவணைப்பில் ஏந்திக் கொள்ளுவான். மிகவும் உருக்கமான குரலில், ''நான் ஒரு நாளும் உனக்காகச் சிறு துரும்பைக்கூட எடுத்துப் போட்டதில்லை. உடுத்த ஒரு நல்ல துணி வாங்கித் தந்திருப்பேனா இத்தனை நாளும்? எப்ப பார்த்தாலும் நீ கந்தல் துணியைக் கட்டிக்கிட்டு மானத்தை மூடி மறைச்சுக்கிறே. நான் என்னடான்னா...!'' என்பான்.

அதற்கு மேல் அவன் கடைப்பிடிப்பது அமைதிதான்; மௌனம்தான்.

மறுநாள் பொழுது விடிந்ததும் நொண்டி அதே செங்கல் குவியலுக்கு அருகே போய் நின்றான். அவன் தோள்பட்டையில் ஒரு கூடையும் கையில் ஒரு தடியும் காட்சி அளித்தன. கீழ்வானத்தில் செக்கர் படரத் தொடங்கிய நேரம். ஊர்க் கோயிலின் கண்டாமணியும் சங்கும் கலந்து ஒலித்தன. சற்று மேடான இடத்தில் ஏறி நின்று கொண்டு நொண்டி நாற்புறமும் வெகு ஜாக்கிரதையாகப் பார்வையை ஓட்டினான்.

கீழ் வானத்துச் சிவப்பு சிறுகச் சிறுக ரத்தச் சிவப்பாக மாறியது. அதோடு அது பரவி ஆகாயத்தையே நிறைக்கத் தொடங்கியது. வெந்த செங்கல்லின் நிறமும் அந்தச் சிவப்போடு போட்டியிடுவது போலக் காட்சி அளித்தது. நொண்டியின் அழுக்குத் துணிகள் கூட இலேசாகச் சிவந்தாற்போலத் தோற்றமளித்தன.

சற்றுத் தொலைவில் ஒரு பாம்பு — நேற்றைய அதே பழைய பாம்புதானோ, என்னவோ? கிழக்குப்புறமாகப் படத்தை விரித்துத் தனியாகவே ஆடிக் கொண்டிருந்தது. காலை இளஞ்சூரியனின் செந்நிறக் கிரணங்களைப் பருகி அதுவும் சிவந்து காட்சியளித்தது. சிறிது நேரம் வரை நொண்டி மந்திரத்தால் கட்டுண்டவன் போல், அதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு ஓசைப்படாமல் அதை நோக்கி முன்னேறினான். பாம்பு காலைக் கதிரவனுக்கு வணக்கம் செலுத்துவதில் தன்னையே மறந்து விட்டிருந்தது. நொண்டியின் காலடி ஓசையினால்கூட அதன் தியானத்தைக் கலைக்க முடியவில்லை. ஆனால் நொண்டி அதை நெருங்கியது தான் தாமதம், சட்டென்று பெருஞ் சீற்றத்துடன் திரும்பியது. நொண்டியின் பழக்கப்பட்ட கை, அது தீண்டுவதற்கு முன்பாகவே, தடியினால் அதன் தலையை அழுத்திவிட்டது. அடுத்தகணமே வலது கையினால் அதன் வாலைப் பிடித்து இரண்டொரு முறை உதறினான். தன் வசமிழந்த அதை உற்றுப் பார்த்த அவன், ''அட, இது பெண் பாம்பு அல்லவா?'' என்று கூறிக் கொண்டான்.

ஆறு மாதங்களுக்குப் பின் ஒரு நாள் வெளியே போய்விட்டுத் திரும்பிய நொண்டி ஜுபேதாவைப் பார்த்து, ''பார்த்தாயா, என்ன கொண்டு வந்திருக்கிறேன் என்று!'' என்று மகிழ்ச்சியுடன் கேட்டான்.

''என்ன கொண்டாந்திருக்கியாம்?'' முற்றத்தைக் கூட்டியவாறே அவள் கேட்டாள்.

இடுப்பு முடிச்சை அவிழ்த்து நொண்டி ஒரு சிறிய ஒளிரும் பொருளை எடுத்தான். அதைத் தன் உள்ளங்கையில் ஏந்தி ஜுபேதாவுக்குக் காட்டினான். அது சின்னஞ்சிறு மூக்குத்தி.

''இத்தனை சின்ன மூக்குத்தியை என்ன செய்யிறதாம்?'' என்று கேட்டாள் ஜுபேதா.

''என் பெண்டாட்டிக்குப் போடுவேன்!'' பல் தெரியச் சிரித்தான் நொண்டி.

ஜுபேதா வியப்பினால் அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். நொண்டி சிரித்த முகத்தோடு அறைக்குள் நுழைந்தான். அவன் அறையிலிருந்து திரும்பி வந்த பொழுது, பெண் நாகம் அவன் கழுத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது. அதோடு தன் முகத்தைச் சிறிது உயர்த்தி அவன் தோளில் ஊர்ந்து கொண்டிருந்தது.

''நான் சொல்வதைக் கேளு. இப்படியெல்லாம் செய்யாதே!'' ஜுபேதா அவனை எச்சரித்தாள்: ''என்னதான் வளர்ப்புப் பிராணியா யிருந்தாலும், இந்தச் சாதியை நம்பக் கூடாது!''

''இல்லை, ஜுபேதா! இதற்கும் அன்பு செலுத்தத் தெரியும்!'' நொண்டி முறுவல் நெளியப் பதில் அளித்தான்: ''அதோடு இதற்கு இன்னும் நச்சுப் பல்லும் முளைக்கவில்லை. பார்த்தியா, என் பெண்டாட்டி எப்படி நல்ல பெண்ணுட்டமா வளைய வளைய வருகிறாள்!''

இப்படிக் கூறிய நொண்டி பாம்பின் இரு உதடுகளையும் அமுக்கி மூடினான். பிறகு அன்போடு அதற்கு முத்தம் கொடுத்தான்.

ஜுபேதா வெறி பிடித்தாற்போலக் கூவினாள்: ''உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன? நல்லது — கெட்டது எது என்கிற அறிவே மழுங்கிப் போய் விட்டதே!

கலாக்ஷேத்ரா

(நுண்கலைக் கல்லூரி)

ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்களின்
நிர்வாகத்தின் கீழ்

பல சிறப்புவாய்ந்த கலைஞர்கள் வித்வான்கள் உதவியுடன் நடைபெறுகிறது

20 - 6 - 1968 முதல்
மாணவ, மாணவிகள்
சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்

சங்கீதம் : சென்னை, பல்கலைக் கழகத்தின் **சங்கீத சிரோமணி** மற்றும் **கலாக்ஷேத்ரா டிப்ளோமா** வகுப்புகளான வாய்ப்பாட்டு, வீணை, கோட்டு வாத்தியம், வயலின் மிருதங்கம் முதலியன.

நடனம் : கலாக்ஷேத்ரா டிப்ளோமா வருப்புகள்

பரதநாட்டியம் மற்றும் **கதகளி**

ஓவியம் மற்றும் **சித்திர வேலைகள்**

பொதுக் கல்வி : சென்னை, மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கும் அல்லது கலாக்ஷேத்ரா நுண்கலை போதனா முறைகளுடன் அடையாறு பெஸண்ட் தியாஸாபிகல் உயர் நிலைப்பள்ளி போதனா முறைகளும் இணைந்து அளிக்கப்படும்.

கற்பிக்கப்படும் மொழிகள் :

ஆங்கிலம், ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி தமிழ், தெலுங்கு, மலையாளம்

நுண்கலைகளில் விசேஷ
போஸ்ட் கிராஜுவேட் போதனா
முறைகளும் கற்பிக்கப்படும்

மாணவர்களுக்கும் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் தனித்தனி **ஹாஸ்டல்** வசதிகள் உண்டு

விதிமுறைகள் வேண்டுவோர் ரூ. 1-50
அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்

சூபரின்டென்டெண்ட் ஆப் ஸ்டடிஸ்
கலாக்ஷேத்ரா - சென்னை - 41

பலத்திற்கும்

ஆரோக்கியத்திற்கும்

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

69 வருடங்களாக
பிரசித்தி பெற்றது

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிமிடெட்
சென்னை - 17.

கால் அரிப்பு சரும அரிப்பு

அரிப்பு, எரிச்சல் முதலிய உபாதைகளை உங்களால் தாங்க முடியாமல் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதா? உங்கள் சருமத்தில் வெடிப்புகள் தோன்றி தோல் உரிந்து ரத்தம் கசிகிறதா? பாதங்களிலும் கால் விரல்களுக்கிடையிலும் புண்கள் தோன்றி உபத்திரவம் செய்கின்றனவா? இவைகள் வெடித்துக் கசிந்து மேலும் புண்களை உண்டாக்குகின்றனவா? இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் சிங்கப்பூர் சொறி, வண்ணாரப்படை, என்று பல பெயர்களில் வழங்கப்படும் ஒருவகைக் கிருமி. மூலகாரணமான இந்தக் கிருமிகளை ஒழிக்கும்வரை இவ்வுபாதைகளிலிருந்து நிவாரணமடைய முடியாது. விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நிக்ஸோடெர்ம் (Nixoderm) முதல் தடவை போட்டவுடனேயே அரிப்பை நிறுத்தி கிருமிகளைக் கொன்று சருமத்தின் புண்ணை ஆற்றி மிருதுவாக்கி சுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) அரிப்பை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. மேலும் பாதத்தின் மேலிருக்கும் புண்கள் மோசமாகப் பரவும் படை, முகப்பருக்கள் கட்டிகள் முகத்திலோ அல்லது தேகத்திலோ பரவிய படர் தாமரை முதலிய உபாதைகளைக் குணமாக்குகிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். பூரண திருப்தியை அது நிச்சயமாக அளிக்கும்.

வாழ்க்கைச் சித்திரம்-8

வள்ளல்



'வள்ளல் அவன்!' என வாழ்த்தினர்; - சிலர்
வணங்கியும் தம்முடி தாழ்த்தினர்!
கொள்ள அவன் செய் கொடை எது? - கண்டு
கொள்ள, ஓர் நாளுமங் கேகினேன்!

'வள்ளு வள்' ளென்றே முழுவதாய் - அங்கு
வருவோர்மீ தெல்லாம் விழுவதாய்
உள்ள பிராணியை நான் கண்டேன்; - உடன்
உண்மைப் பொருளும் புரிந்ததே!

— தமிழழகன்

எத்தனை தடவை நான் உனக்குச் சொல்லி யிருக்கிறேன்? என்ன சொன்னாலும் நீ புரிந்து கொள்ள மாட்டேங்கிறியே!''

நொண்டி அவள் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே, ''இதோ பாரேன்! இது என் கையை எப்படிச் சுத்திக்கிட்டிருக்குன்னு!— ஆமாம், உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? பாம்புங்க ஆணும் பெண்ணும் அன்போடு அணையும் பொழுது ஒன்றை ஒன்று இப்படித் தான் இறுகத் தழுவிக் கொள்ளும். நீ பார்த் திருக்கிறியா? எத்தனை அழகான காட்சி தெரியுமா அது?'' என்றான்.

''அந்தக் கண்ணராவிக் காட்சியை நான் வேறு பார்க்கணுமா? நீ பார்த்துட்டியே, அதுவே போதும்! ஒரு விஷயம் மட்டும் சொல்லி வைக்கிறேன். இந்தப் பாம்பு ஒரு நாள் உன் ஆட்டத்தையெல்லாம் ஒடுக்கிப் போட்டுவிடும்!'' என்றாள் ஜுபேதா.

அதற்குள் நொண்டி ஊசி தேடி வந்து தன் காரியத்தில் ஈடுபட்டு விட்டான். அவன் பாம்பின் வாலைக் காலால் அமுக்கிக் கொண் டான். வாயைக் கையால் அழுத்திப் பிடித் துக் கொண்டான். பிறகு நொடியில் அதன் மூக்கைக் குத்தித் தன் கையிலிருந்த மூக்குத் திலை அதற்கு அணிவித்தும் விட்டான்.

அவன் பிடியிலிருந்து விடுபட்டதும் வலி தாங்காமல் பாம்பு அவனைக் கடிக்கக் கடிக்கப் போயிற்று. அவனும் பாதுகாப்புக்குப் பெட்டி மூடியைக் கையில் எடுத்துக் கொண்டு அன்பு ததும்பும் குரலில், ''அடியே, என் பெண்டாட்டி! கோவிச்சுக்காதே. ஒரு தடவை கண்ணாடியிலே உன் அழகைப் பாரு. உன் கோபமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்துவிடும். நீ எத்தனை அழகா யிருக்கிறே, தெரியுமா? — ஜுபேதா! கொஞ் சம் கண்ணாடியைக் கொண்டு வந்து இவளுக் குக் காட்டேன்!'' என்றான்.

''முடியாது. நான் கொண்டு வர முடி யாது!'' என்று மறுத்தாள் ஜுபேதா.

''இதோ, பார்! என் மேலே ஆணை? நீ போய்க் கண்ணாடியை எடுத்து வந்துதான் ஆகணும். கண்ணாடியிலே தன் முகத்தைப் பார்த்துவிட்டு இது என்ன செய்கிறது, பாரேன்!'' என்றான் நொண்டி.

நாகமாகச் சீறியவாறே ஜுபேதா கண்ணாடி எடுத்து வரச் சென்றாள்.

''வரும் பொழுது கொஞ்சம் சிவப்புச் சாந் தும் எடுத்துக் கொண்டுவா!'' நொண்டி குரல் கொடுத்தான்.

''சிவப்புச் சாந்து எதற்கு?'' உள்ளிருந்த வண்ணமே கேட்டாள் ஜுபேதா.

''சொல்றதைக் கேளு. எடுத்து வா! அப்புறம் பாரு! நான் முன்கூட்டியே எதுவும் சொல்ல முடியாது!'' என்று கூறிக் கலகல வென்று நகைத்தான் நொண்டி.

ஜுபேதா கண்ணாடியும் சிவப்புச் சாந்தும் எடுத்து வந்து சற்றுத் தொலைவிலேயே வைத்தாள். நொண்டி படுவேகமாகப் பாம் பின் தலையைப் பிடித்துக் கொண்டான். ஒரு சிறு குச்சியால் கொஞ்சம் சாந்தை எடுத்து அதன் நெற்றியில் ஒரு கோடு இழுத்தான். பிறகு கடகடவென்று வாய்விட்டுச் சிரித்து, ''நான் இவளை மணந்து கொண்டுவிட் டேன், ஜுபேதா! இனி இவள் உனக்குச் சக்களத்தியாக்கும்!'' என்றான்.

கண்ணாடியிலே தன் அழகைக் கண்டு, அந்தப் பாம்பு ஆடிய ஆட்டம்...! அப்பப்பா! சொல்லி முடியாது!

சில நாட்களாக மழை பெய்து கொண் டிருந்தது. மழை பிடித்துக் கொள்வதற்கு முன்பாகவே அன்று நொண்டி எங்கோ வெளியே போய் விட்டான். வீடு திரும்பிய பொழுது தெப்பமாக நனைந்திருந்தான்.

அறைக்குள் நுழைந்ததும் நுழையாதது மாக, ''ஜுபேதா! எனக்குப் பசி உயிர் போகிறது! சீக்கிரம் சோறுபோடு!'' என்றான்.

ஜுபேதா இலை போட்டுப் பழையமுதைப் பிடித்து வைத்தாள். சேற்றுக் காலைக் கழுவுவதற்காகக் கொல்லைப்புறம் போய் வந்தவன் மூக்கை உறிஞ்சிக் கொண்டு ஒரு கணம் நின்றான். ''ஜுபேதா! இதென்ன வாசனை வருகிறது?'' என்று கேட்டான்.

''ஆண்டவனுக்குத்தான் தெரியும்! இந்த வாசனை பல நாட்களாகவே வந்து கொண் டிருக்கிறது!'' என்றாள் ஜுபேதா.

நொண்டி அதற்குப் பிறகு பேசவில்லை. மூக்கால் உறிஞ்சி உறிஞ்சி வாசனையை நுகர்ந்தவண்ணம், அந்த வாசனையைப் பற்றி ஊகிக்கலானான். உணவு அருந்திக் கொண் டிருந்தவன் சட்டென்று எழுந்தான். பாம்புப் பெட்டிக்கருகில் போய் நின்றான். பழகிய அடி ஓசை கேட்டுப் பாம்பும் சீறியது.

''அட! நம்ம பெண்டாட்டி உடலி லிருந்துதான் இந்த வாசனை வருகிறது!—ஏன் பிள்ளை, உனக்குத் தெரியுமா, ஏன் இந்த வாசனை வருகிறது என்று! இதற்கு ஓர் ஆண் துணை தேவை. இந்த வாசனை இருக்கே, இது ஆண் பாம்பைக் கவர்ந்து இழுத்து வரக் கூடியது!'' என்றான் நொண்டி.

ஜுபேதாவுக்கு நம்பிக்கை உண்டாக வில்லை. இருந்தாலும், ''இருக்கலாம். முதல்லே வந்து நீ சோத்தைத் தின்னுட்டுப் போ!'' என்றாள்.

''இதை வெளியிலே விட்டுடணும்!'' வாயில் சோற்றுக் கவளத்தைத் திணித்துக் கொண்டே சொன்னான் நொண்டி: ''இந்த மாதிரி நேரங்களிலே இதைத் தடுக்கக் கூடாது!'' இப்படிக் கூறியவன் ஒரு நீண்ட மூச்சு விட்டான்.

''அதுதான் நல்லது!'' ஜுபேதாவும் ஒத்துப் பாடினாள்; அதை விட்டுவிட வேண் டும் என்கிற பேச்சு அவளுக்குப் பிடித்திருந்த தனால். ''இதைக் கண்டாலே என் கண்ணை வலிக்கிறது. எத்தனையோ பாம்புகள் செத் திருக்கின்றன! அதிர்ஷ்டம் கெட்ட இது மட்டும் ஏன்தான் செத்தொழிய மாட்டேன் என்கிறதோ?'' என்றாள்.

உணவு அருந்தி முடிந்ததும் நொண்டி பெண் பாம்பை எடுத்துப் போய்ப் பக்கத்துக் காட்டில் விட்டு வந்தான். அதற்குப் பிறகு அவனுக்கு எந்த வேலையுமே ஓடவில்லை. எதையோ பறி கொடுத்து விட்டாற்போல் நாள் முழுவதும் வாட்டமாக உட்கார்ந்திருந் தான்.

''எதுக்காக இப்படிக் கப்பல் கவிழ்ந்தாற் போல் கன்னத்திலே கையை வைச்சுட்டே? மனம் கேட்கலேன்னு கொஞ்சம்....'' என்று இழுத்தாள் ஜுபேதா.

''ஒன்றுமில்லே. நம்ம பெண்டாட்டி நினை விலே வந்துக்கிட்டே இருக்கா!'' என்றான் நொண்டி.

''ஒருபாம்புக்காக என்ன இப்படி உருகிப் போறே? நீயும் ஓர் ஆண் பிள்ளையா?'' என்று கடிந்தாள் ஜுபேதா.

''இல்லே, ஜுபேதா! என் மனசை என் னவோ பண்ணுகிறது. அழுகை அழுகையாக வருகிறது!'' — நொண்டியின் குரல் கர கரத்து விட்டது.

ஜுபேதா சிறிது நேரம் அவனையே உன்னிப் பாகக் கவனித்தாள். பிறகு எழுந்து அவன் அருகில் வந்தாள். அவன் கழுத்தில் தன் மென்மையான கரங்களை வளைத்து, ''சொல் லேன், நான் உனக்கு நல்லா இல்லையா?'' என்று கேட்டாள்.

நொண்டி அவளை அன்புறத் தழுவிக் கொண்டான். ''என்ன பேச்சுப் பேசறே! நான் இந்த உயிரை வச்சிக்கிட்டிருக்கிறதே உன்னாலேதானே? நீ எனக்கு உயிருக்கும் ஒரு படி மேல் அல்லவா?'' என்றான்.

அவன் அரவணைப்பில் இருந்த ஜுபேதா சட்டென்று ஓலக்குரல் கொடுத்தாள்: ''அதோ, பாரு! உன் பெண்டாட்டி வந் துட்டா!''

உண்மையாகவே, அவன் அன்புக்கு பான பெண் நாகம் சாக்கடை வழியே படமெடுத்தவண்ணம் ஆடி ஆடி உள்ளே வந்து கொண்டிருந்தது.

''நகர்ந்துக்கோ! நான் அதைப் பிடிக் கிறேன்!'' என்று சொல்லி எழுந்திருக்க முயன்றான் நொண்டி. ஆனால் ஜுபேதா அவனோடு ஒட்டிக் கொண்டு விட்டாள். ''தொலே, இங்கு விட்டுத் தொலே!'' என்று உரக்கக் குரல் கொடுத்துப் பாம்பை விரட்ட வும் முயன்றாள்.

அது அசைந்து கொடுக்காமல் போகவே, இடது கையால் ஒரு தடியை எடுத்து அதன் மீது வீசினாள். அடிபட்டு அந்த வலி பொறுக்க மாட்டாமல், பாம்பு பல முறை படமெடுத் துப் பூமியை ஓங்கி ஓங்கி அடித்தது. பிறகு வந்த வழியே வெளியேறியது.

ஜுபேதா நிம்மதியாக மூச்சு விட்டாள். ஆனால் அன்று நள்ளிரவு திடுதிப்பென்று தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு உரக்கக் கூவினாள்: ''ஐயோ! செத்தேன்! சட்டென்று எழுந்து பாரேன்! என்னை ஏதோ கடித்து விட்டது!'' என்றாள்.

நொண்டி விரைவாக எழுந்து விளக்கைப் பொருத்தினான். ஜுபேதாவின் இடது கால் கட்டை விரலிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

''அதோ! உன் பெண்டாட்டி! அதுதான் என்னைக் கடிச்சிருக்கு!'' மீண்டும் கூவினாள் ஜுபேதா.

அந்தப் பெண் பாம்பு அலட்சியமாக ஒரு மண் குடத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது. நொண்டி விரைந்து சென்று ஒரு கூடையை எடுத்து அதை மூடினான். ''ஜுபேதா மட்டும் உயிர் பிழைக்கலே, நான் உன்னையும் உயிரோடு விட்டு வைக்க மாட்டேன்!'' என்று கடிந்து கொண்டான்.

ஆனால் ஜுபேதா உயிர் பிழைக்கவில்லை. பொழுது விடிவதற்கு முன்பாகவே, சாவுக்கு அறிகுறி தீர்மானமாகத் தெரிந்து விட்டது. மாந்தரீகர்கள் கைவிட்டு விட்டார்கள்; மருத்துவர்கள் கையைப் பிசைந்தார்கள். நொண்டி மௌனமே உருவாக வருத்தமே வடிவாக உட்கார்ந்திருந்தான், அப்பொழுது அவனுடைய பயங்கரமான முகம் பார்ப்ப தற்குப் பரிதாபமாக இருந்தது. அவன் இமை கொட்டாமல் ஜுபேதாவையே பார்த் துக் கொண்டிருந்தான்!


''உன் அதிர்ஷ்டம் நல்லபடியாக இருந் ததோ, பிழைச்சியோ! உன்னையும் அது போட்டிருக்கும்!'' என்று சொல்லிக்கொண்டு மாந்திரீகர்கள் விடைபெற்றார்கள். நொண்டி எதுவுமே பேசவில்லை. மௌனமாக, கண்ணீர் மல்கிய விழிகளை உயரத் தூக்கி மறுப்புக்கு அடையாளமாக அவன் தலையை அசைத்தான். எல்லோரும் போன பிறகு அவன் எழுந் தான். கூடை போட்டுக் கவிழ்த்திருந்த பாம்பை விடுவித்தவண்ணம் கூறினான்:

''உன் மேலே குற்றமில்லே. இது பெண் ணாய்ப் பிறந்தவர்களின் பிறவிக் குணம்!''

அவன் கண்களில் இரு சொட்டு நீர் துளித்திட்டது. அடுத்த கணமே அது உருண்டு கன்னங்களின் வழியே ஓடித் தரையில் விழுந்து முத்தாகச் சிதறியது.

வங்காளம்: **தாரா சங்கர் பானர்ஜி.**

தமிழாக்கம்: **ரா. வீழிநாதன்.**



வலியா?

அனாஸின்

வலி நிவாரணத்திற்கு மேலானது
ஏனெனில் 4 வழிகளில்
வேலை செய்கிறது



டாக்டரின் பத்திரமான மருந்துக் குறிப்பைப் போல், பல மருந்துகள் இணைந்த ஒப்பற்ற கலவையாகிய அனாஸின் மூலம் 4-வழி நிவாரணம் அதி விரைவில் கிட்டும்:

1. வலியைத் தணிக்கிறது அனாஸின்—வேகமாக.
2. வலிக்குக் காரணமாக அமையும் படபடப்பை ஆற்றுகிறது அனாஸின்.
3. வலியுடன் இயல்பாக இணைந்துவரும் சோர்வை வெல்லுகிறது அனாஸின்.
4. வாட்டத்தைப் போக்கி, அகமும் முகமும் பழைய படி மலரச் செய்கிறது அனாஸின்.

தவிர, தலைவலி, சளியோடு கூடிய ஃப்ளூ, பல்வலி, உடல் வலி ஆகியவற்றையும் தணிக்கிறது அனாஸின்.

அதி வேகமாக நிவாரணம் பெற
2 அனாஸின் சாப்பிடுங்கள் ®

Regd. User: Geoffrey Manners & Co. Ltd.

A-30



கலைப் படையெடுப்பு



வாங்கோ! வாங்கோ!'' என்று வாய் நிறைய வரவேற்கிறார் நண்பர் என். வெங்கடேசன்.

''உங்களையெல்லாம் பார்த்துப் பேசவேண்டும் என்ற ஆவலில் நான் வெயிலைப் பார்க்காமல் கிளம்பி விட்டேன். ஏழு தினங்கள் ஏழுவித நாடகங்களை நடித்துக் காட்டிய உங்கள் அனைவரையும் ஏககாலத்தில் பார்க்க வேண்டும் என்றால் இந்த நேரத்தில் வந்தால்தானே முடியும்?'' என்கிறேன்.


''ஏய் பரசு! எழுந்திருந்து இப்படி வா!...சார்! இந்தப் பரசு டிபார்ட்மெண்ட் ஆஃப் டிபென்ஸ் புரொடக்‌ஷனிலே அலுவல் பார்க்கிறார். மெட்ராஸுக்குப் புறப்படறதும்கறபோது, அவருக்கு கிளாஸ் ஒன் போஸ்டிலே அபிஷியேட்டிங் சான்ஸ் வந்தது. பொதுவா சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இந்த மாதிரி வாய்ப்புக்களுக்குத் தவம் கிடக்கணும். ஆனால் இந்தப் பரசு 'எல்லாம் மெட்ராஸ் போயிட்டு வந்து பார்த்துக்கலாம்'னு கிளம்பிட்டார்!'' என்கிறார் வெங்கடேசன்.



உத்யோக உயர்வுக்கான வாய்ப்பைக்கூட உதறித் தள்ளிவிட்டு அவரைச் சென்னைக்கு வரவழைத்தது கலை ஆர்வம். புதுதில்லி ஸைவுத் இந்தியன் தியேட்டர்ஸில் உள்ள எல்லா நடிகர்களையுமே இப்படித்தான் கலை ஆர்வம் ஆட்டிப் படைக்கிறது.

எந்த நடிகரும் எந்த வேடமும் தாங்க முன் வருகிறார்கள். எல்லா நாடகங்களிலும் எல்லா நடிகர்களும் நடித்தாக வேண்டும் என்ற அவசியமில்லை. கதா நாயகன், கதாநாயகி உப பாத்திரங்கள் என்ற வர்க்க பேதத்திற்கு இடமே இல்லை. நாடகத்திலுள்ள பதினாறு காட்சிகளிலும் தோன்றி, தொண்ணூற்றி ஒன்பது பக்க டயலாக்குகளைப் பாடம் பண்ணி சகுனியாக (பகடையின் குரல்) தோன்றும் பரசு 'பட்டினத்தில் காதலில்' அநேகமாக டயலாக்கே இல்லாத பெட்டிக்கடை







நாயகராகவும் வருகிருர். 'ஸ்கோப்பே' இல்லாத அப்பாவிக் கதாநாயகன் நடராஜனுக 'மிஸ் ஜானகி'யில் தோன்றும் என். ஆர். ராஜகோபால் 'ராங் நம்பர்' என்ற நாடகத்தில் துணிச்சலான வில்லன் திவாகராகவும் வருகிருர். 'மூடு பனி'யில் ஜயராமாகத் தோன்றி அழுத்தத்துடன் அநாயாசமாக 'நடித்த குமார் 'பட்டினத்தில் காதலி'ல் சாதாரணமாகக் கோவிலுக்கு வரும் பக்த கோடிகளில் ஒருவராகச்



நடிகர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் அல்ல; நாடகங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நடிகர்கள்!

★

(புது தில்லி ஸவுத் இந்தியன் தியேட்டர்ஸ் நடிகர்களைச் சாமாவின் கோலிச் சித்திரங்களாகவும் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தினரின் நாடகக் காட்சி ஒன்றை புகைப்படமாகவும் இங்கே காண்கிறீர்கள்!)





சில நிமிடங்கள் வந்துவிட்டுப் போகிருர். சவுத் இந்தியன் தியேட்டர்ஸில் உள்ள எல்லோருமே வெவ்வேறு துறைகளில் பொறுப்பான பதவிகளில் இருந்து வாழ்க்கை நடத்துபவர்கள். இவர்களை யெல்லாம் இணைப்பது கலை ஆர்வமே. பழைய கால சமஸ்தானங்களில் ஆஸ்தான விதூஷகர்கள் இருப்பார்கள். சௌத் இந்தியன் தியேட்டர்ஸில் உள்ள ஆஸ்தான விதூஷகர்கள், கோபுவும், மாப்பிள்ளையும்! மாப்பிள்ளை ஜகதீசனுக 'மிஸ்





ஜானகி'யில் கோபு தோன்றும்போது மேடை கலகலக்கிறது. அசட்டுத்தனத்துக்கு அற்புதமான இலக்கணத்தை அவரால்தான் வகுத்துக் காட்ட முடிகிறது. தலைநடனி சுந்தரமாக அதே நாடகத்தில் தோன்றும் மாப்பிள்ளை 'என்னவோய்!' என்று ஆரம்பிக்கும்போதே ரசிகர்களைத் திருநெல்வேலி மாவட்டத்துக்கு அழைத்துச் சென்றுவிடுகிறார்.

இந்த நடிகர் குழாமில் ஆறு நடிகைகள் இடம் பெற்றிருக்கிறார்கள். திருமதி மாதுரி ஜயராமனைத் தவிர மற்றவர்கள் ஐவரும் வெவ்வேறு உத்தியோகங்களில் இருப்பவர்கள்தான். ஸ்ரீமதி மாதுரி ஜயராமன் தம் குடும்பத்தைக் கவனித்துக் கொள்வது போல நாடகக் கலையையும் கவனித்துக் கொள்கிறார். மாயவரத்துக் குடுமி மணி (சுந்தரராஜன்)க்கு மனைவியாக இவர் மிஸ் ஜானகியில் கொஞ்ச நேரம்தான் தோன்றினாலும் தம் திறமை முழுவதையும் காண்பித்துவிடுகிறார். அஸ்வமேத யாகம் பட்டாபிராமய்யரின் (எஸ். சீனிவாசன்) குமாரத்தி மங்களமாகத் தோன்றி அப்பாவிக் கணவனை விரட்டும் ஸ்ரீமதி ஜெயா ஸ்ரீனிவாசன் நிதி அமைச்சில் சட்டத் துறை ஆலோசகராகப் பணியாற்றுகிறார்.

'மூடு பனி'யில் 'ஷட் அப்! கெட் அவுட்!' என்ற இரண்டு வார்த்தைகளை வெவ்வேறு சுருதியிலும் லயத்திலும் கையாண்டு, தம் நடிப்புத் திறமையைக் காட்டிய குமாரி லட்சுமி அமெரிக்க கான்ஸலேட்டில் பணியாற்றுகிறார்.

'பணம் பேசுகிறது' நாடகத்தில் தாயாரம்மாவாகவும், 'பகடையின் குரலில்' காந்தாரியாகவும் வந்த ஸ்ரீமதி ஜெயலட்சுமி, விவசாய அமைச்சில் பணியாற்றுகிறார். 'மிஸ். ஜானகி'யாக நடிக்கும் அவர் மகள் குமாரி பிரேமாவும் சும்மா இருக்கவில்லை. ஒரு நடனப் பள்ளி நடத்துகிறார். 'ராங் நம்ப'ரில் தேவகியாகத் தோன்றும் ஸ்ரீ உஷா வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் பணியாற்றுகிறார்.

நண்பர் திரு பி. ஏ. கிருஷ்ணமூர்த்தி (பி.ஏ.கே.) டில்லி ஆல் இந்தியா ரேடியோவில் வெளிநாட்டு ஒலிபரப்புத் துறை உருதுப் பிரிவில் புரோகிராம் எக்ஸிக்யூட்டிவாக இருக்கிறார். ஆனால் இவருக்கு ஆர்வம் தமிழ் நாடகங்கள் எழுதுவது. 'ராங் நம்பர்', 'பகடையின் குரல்' 'மூடுபனி' ஆகிய மூன்றுமே இவருடைய சிருஷ்டிகள்தான். 'இம்பெர்பெக்ட் மர்டர்', 'மூடு பனி' என்ற இரண்டு நாடகங்களையும் டைரக்ட் செய்பவரும் இவர்தான். மற்ற நாடகங்களைத் தம் தோழர்களான சுப்புடுவிற்கும் ராஜிக்கும் விட்டுவைத்திருக்கிறார்.

டில்லி சுப்புடுவின் கலையார்வம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மேடைமீதுள்ள பாத்திரங்களை ஆர்மோனியக் கட்டைகள் மீது விரல் வைத்தவாறே ஆட்டி வைக்கிறார். நிதி அமைச்சில் இவர் செக்ஷன் ஆபீஸராகப் பணியாற்றுகிறார். 'மிஸ் ஜானகி' சுப்புடுவின் கைவண்ணம் பட்டது. சுப்புடு இசையைக் கவனித்துக் கொள்வது போல் இவர் நண்பர் ராஜி (எஸ். வி. ராமன், மத்திய உணவு இலாக்கா) ஒளி அமைப்புக்களைக் கவனித்துக் கொள்கிறார். சபை பொக்கிஷதார் கிருஷ்ணமாச்சாரி இருக்கிறாரே—மேடை நிர்வாகம் முழுவதும் அவர் பார்வையில்!

வடக்கேயிருந்து வந்த நம்மவர்களிடம் இருக்கும் கலைத் திறனை மனம் விட்டுப் பாராட்டி மகிழ்ந்தது சென்னை ரசிகர்கூட்டம். மிஸ் ஜானகி, மூடுபனி ஆகிய நாடகங்களுக்கு இடை இடையே கரகோஷம் செய்ததுடன் நாடகங்களின் இறுதியிலும் ஒரு நிமிஷம் கைதட்டித் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். இந்தப் பண்பு மெச்சத் தகுந்தது.

புதுதில்லி சௌத் இந்தியன் தியேட்டர்ஸ் குழுவினரிடம் திறமை இருக்கிறது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அதைவிட அவர்களிடம் பரஸ்பரம் அனுசரித்துப் போகும் தன்மையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும், தன்னைக் குறைத்துக் கொண்டு மற்றவர்களைச் சோபிக்க வைக்கும் பரந்த மனப்பான்மையும் இருக்கின்றன. ஆகையால் அவர்களுடைய நாடகங்கள், நாடகங்களாக இருக்கின்றன. அவர்கள் நடிகர்களுக்காக நாடகங்கள் தயாரிக்கவில்லை. நாடகங்களுக்காக நடிகர்களைத் தேர்ந்தெடுத்து வெற்றி காண்கிறார்கள்! அவர்கள் லட்சியவாதிகள்!

இத்தனை திறம்பட இவர்கள் நடிப்பதாலேயே நாலே நாலு யோசனைகளையும் இவர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறோம். நாடக உத்திகளுக்கு நல்லபடியாக ஒத்துவராத—கனமில்லாத கதைகளைத் தாட்சண்யமின்றி இவர்கள் ஒதுக்கிவிட வேண்டும். இரண்டாவதாக, ஒரே நாடகத்தில் ஒரே மாதிரியான குண இயல்புகளைக் கொண்ட இரு கதாபாத்திரங்கள் இடம் பெறுவதைத் தவிர்க்க வேண்டும். உதாரணமாக மிஸ் ஜானகியில் ஓர் அசட்டு நாட்டியக்காரியின் குணசித்திரத்தினால் அசட்டு மாப்பிள்ளை பாத்திரம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. மூன்று: கதாபாத்திரங்கள் தங்களுக்குத் தாங்களே பேசிக்கொள்வதும், எதிரே உள்ள ரசிகர்களைப் பார்த்துப் பேசுவதும் மிகப் பழமையான நாடக உத்தி. நான்கு: நாடகம் தடங்கலின்றி இயல்பாகச் சென்று முடிகிற மாதிரி அமைத்துக் கொள்ள வேண்டும். ''அதாவது நடந்த விஷயம் என்னன்னா....'' என்று தொடங்கி அம்சம் அம்சமாக விளக்கம் கொடுத்துக் கொண்டு போகிற வசனங்களை இல்லாத மாதிரி நாடகத்தைத் தயாரிக்க வேண்டும். இந்த விதத்தில் ''மூடுபனி'' மிகத் தரமானதாக இருந்தது பாராட்டுக்குரியது: ஆனால் மிஸ் ஜானகியில் இந்தக் குறையை நிரம்பவே கண்டோம்.

கிருஷ்ணகான சபா தலைவர் திரு வி. டி. ஸ்வாமி அவர்கள் இல்லத்தில் ஸவுத் இந்தியன் தியேட்டர்ஸாருக்கு விருந்துபசாரம் ஒன்று நடைபெற்றது. நாடகங்களைப் பார்க்கும் வாய்ப்புப் பெறாத சில பெரிய மனிதர்கள் விருந்துக்கு வந்திருந்தார்கள்.

அவர்களுக்காக வேண்டி நாடகக் குழுவினர் சிற்சில காட்சிகளை மட்டும் புல் தரையில் திறந்தவெளியில் உடை அலங்காரம், ஒப்பனை ஏதுமின்றி, விசேஷ ஒளிஅமைப்போ

ஒலிபெருக்கியோ இல்லாமல் நடித்துக் காண்பித்தார்கள். இவையெல்லாம் இல்லாத போனாலும் அந்த நடிப்பு சோபித்தது; நகைச்சுவை சிரிப்பு அலைகளை எழுப்பியது; வசனங்கள் அழுத்தமாகவும் அழகாகவும் விழுந்தன. விருந்தினரின் — பிரபலஸ்தர்களின் சபாஷ் ஒலிகளுக்கும் கரகோஷத்துக்கும் குறைவில்லை.

ஸவுத் இந்தியன் தியேட்டர்ஸாரின் வெற்றிக்கு இதைவிட வேறென்ன அத்தாட்சி வேண்டும்?


புதுதில்லி ஸவுத் இந்தியன் தியேட்டர்ஸாருடன் பம்பாய் தமிழ்ச் சங்கத்தாரும் கலைப் படையெடுப்பில் சேர்ந்து கொண்டார்கள். இவர்கள் நடத்திய நாடகம் ஒன்று; அதை இரண்டு இடங்களில் மொத்தம் மூன்று தடவைகள் நடத்தினார்கள். இதை யொட்டி நடந்த பிரெஸ் கான்ஃபரன்ஸ்- இரண்டு; டீபார்ட்டிகள் இரண்டு; டின்னர் ஒன்று! பூக்கடைக்கும் விளம்பரம் தேவைப் படும் காலம்தானே இது!

நாடகச் சிறப்பை விட முக்கியமாக பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தினரின் நாடகக் கலை ஆர்வச் சிறப்பினைக் குறிப்பிட வேண்டும். இவர்கள் நடித்தது குமாரி சூடாமணி அவர்களால் எழுதப்பட்ட 'அருணோதயம்' என்ற நாடகம். பம்பாய்த் தமிழ்ச் சங்கம், தமிழ் நாடகங்கள் வளர வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு பரிசுத் திட்டம் ஒன்றை அறிவித்து, அதன் விளைவாகக் கிடைத்தது தான் 'அருணோதயம்'; தமிழ் நாட்டிலிருந்து கடந்த பதினெட்டு வருடங்களில் அநேகமாக எல்லாத் தொழில் நடிகக் கோஷ்டியினரையும் அவ்வப்போது பம்பாய்க்கு வரவழைத்து நாடகங்கள் மூலம் நிதி சேர்த்து, தங்களுக்கு என்று ஓர் அற்புதமான மண்டபத்தை நிர்மாணித்து இப்போது தமிழ் நாட்டிலிருந்து வரும் அன்பர்களுக்கெல்லாம் தங்க வசதி செய்து கொடுத்து அவர்கள் அன்பிற்குப் பாத்திரமாகும் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள், தங்கள் சங்கத்தை வளர்த்த நாடகக் கலைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் முழு நேர மேடை நாடகத்தையும் தங்கள் சங்க உறுப்பினர்களைக் கொண்டு தயாரித்திருக்கிறார்கள். இந்த நாடகத்தில் பெண் பாத்திரமேற்கும் நால்வரும் சங்க உறுப்பினர்கள்.

'அருணோதயம்' படிப்பதற்கான நாடகம். அதை நடிப்பதற்காக மாற்றும்போது டைரக்டர் துணிந்து பல மாறுதல்களைச் செய்ய வேண்டும். அது ஒரு சிரமமான வித்தை. டைரக்டர் சாரங்கன் ஆசிரியையிடம் நல்ல பெயர் வாங்கிவிட்டார்! ஆனால்...!

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் பல சேவைகளில் நாடகம் ஒரு பகுதிதான். பம்பரம் போல் சுற்றி வரும் நண்பர் கந்தசாமியும் அவருடன் இணைந்து வேலை செய்யும் இளைஞர் குமாரும் இருக்கும்போது பம்பாய்த் தமிழ்ச் சங்கம் வருங்காலத்தில் நாடகத் துறையில் இன்னும் சிறந்த சேவை செய்யும் என்று தாராளமாய் நம்பலாம்.

-பட்டினத்தார்





பனாமா பிளேடுகள்

முகக்ஷவரத்தை இன்பகரமாக்குகின்றன!

நீங்கள் உயர்வாக மதிக்கும் சேவைக்கேற்ற
பனாமா மகிழ்ச்சிமிகு நல்ல
முகக்ஷவரத்திற்கு உறுதியளிக்கின்றன!

நினைவிருக்கிறதா?

முன்னறிவிப்பு இன்றித் திடீரென்று புயல் ஏற்படுவது போல் பயங்கரப் பஞ்சம் 1943ல் வங்காளத்தில் தலை காட்டியது. அந்நிய ஆட்சியின் யுத்தச் செலவு, மாகாண அரசின் நிர்வாக ஊழல், இவற்றுள் பதுக்கல்காரர்கள், கொள்ளை லாபம் அடிக்கும் வியாபாரிகள் இவர்களும் சேர்ந்து இந்தப் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டார்கள். கிராமங்களிலிருந்து ஏராளமான மக்கள் உண்ண உணவின்றி கல்கத்தாவிலும், மற்ற சில நகர்ப்புறங்களிலும் வந்து குவிந்தனர்.

இவர்களில் அநேகர் பசியாலும் பட்டினியாலும், குளிர் தாங்காமையாலும் நடைபாதைகளில் உயிர் விட்டனர். சவங்களை அப்புறப் படுத்துவதில் கூட அதிகாரிகள் அக்கறை காட்டவில்லை.

1943ம் ஆண்டு நவராத்திரியின் போது இக்கொடுமை நடைபெற்றது. மகிஷாசுரன் பஞ்ச ரூபத்தின் மூலம் தன் கொடுமையை வெளிப்படுத்தி வந்தான். எல்லா உணவுப் பொருள்களும் ராணுவத்தினருக்கு என்று கொண்டு செல்லப்பட்டதால் மிச்சமுள்ள உணவுப் பொருள்களின் விலை ஏகமாக ஏறியது. மக்கள் மாண்டு மடிந்து கொண்டிருக்கும்போதே அதிகாரிகள் அதிக விளைச்சல் என்று புள்ளி விவரங்களைக் காட்டி அறிக்கை விட்டுக் கொண்டிருந்தனர். மே மாதம் முதற்கொண்டே கிராமங்களிலிருந்து மக்கள் நகருக்கு வந்து கொண்டிருந்தனர். என்றாலும் ஜூலையில் நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. தினத்துக்கு நூற்றுக்கணக்கானவர்கள் மாண்ட வண்ணம் இருந்தனர்.

அப்போது இந்தியா மந்திரியாக இருந்த அமெரி காமன்ஸ் சபையில் இந்தப் பஞ்சத்துக்கும் பிரிட்டிஷ் நிர்வாகத்துக்கும் சம்பந்தமில்லை என்று ஓர் அறிக்கை விட்டார். நாட்டின் தலைவர்கள் எல்லோருமே சிறைப்பட்டிருந்ததால் மக்களுக்குப் பரிந்து பேச ஆளில்லாமல் போய்விட்டது.

இந்தப் பஞ்சத்தின் விளைவாக ஒன்று மட்டும் மிகத் தெளிவாயிற்று. அந்நியருக்கு நம் நிலையில் அக்கறை இல்லை. இனி இம்மாதிரிப் பஞ்சங்கள் ஏற்படாதிருக்க வேண்டும் என்றால் நம் நிர்வாகத்தை நாமே நடத்த வேண்டும் என்பதுதான்.

பயங்கரப் பஞ்சம்

நந்தலால்



இந்த வங்கப் பஞ்சம் விளைச்சல் இன்மையால் ஏற்பட்டதில்லை. நாட்டில் இம்மாதிரி மக்கள் அவதிப்பட நேரிடும் என்பதை மகாத்மா காந்தி தீர்க்க தரிசனத்துடன் 1942 ஜனவரியிலேயே குறிப்பிட்டு ஹரிஜன் பத்திரிகையில் எழுதியிருந்தார்.

வங்கப் பஞ்சத்தில் எவ்வளவு பேர் மாண்டனர் என்பது குறித்துத் தெளிவான புள்ளி விவரங்கள் வெளியிடப் படவேயில்லை. பல ஆயிரங்கள் இருக்கும் என்றே சொல்லலாம்.


இதுதான் டாடா-ஃபைஸன்-ராலீஸ்
நிறைவு தரும் கற்பகத் தரு!

இதன் அடிமரம் டாடா-ஃபைஸன்-ராலீஸ் நிறுவனத்தை அறிவுறுத்துகிறது... பாரத மண்ணிலே ஆழ வேர் பாய்ச்சி நிற்கின்றது. பாரதநாட்டு விவசாயிகளுக்குப் பல மருளும் பாதுகாப்புக் கோட்டையாக விளங்கும் அடிமரம். துயருற்றபோதெல்லாம் துணைதந்து வழிகாட்டி வளமை எய்த உதவுகிறது.

இதன் கிளைகள் பரவிப் பரந்துள்ள ராலீஸ் ஸ்டாக்கிஸ்டுகளையும் வியாபாரிகளையும் சுட்டுகின்றன. அன்னோர் மூலம் ராலீஸ் நம் நாட்டின் எந்தெந்த மூலையிலும் உள்ள எளிய உழவரையும் எட்டி, அவர் தம் பிரச்சினைகளைத் தீர்க்கவும் ஓங்கித் தழைக்கும் உயரிய விளைச்சல்களுக்கான உரங்கள், பூச்சிக்கொல்லிகளை அவர் கைக்கெட்டவும் உதவுகின்றன.

இதன் கனிகள் வளமையின் சின்னம், டாடா-ஃபைஸன் ராலீஸ் தயாரிப்புகள், பணிகள் ஆகியவற்றின் உதவியால் தம் விவசாயிகள் அடைந்திடும் செழிப்பான அறுவடையின் அறிகுறி.

ஆக மொத்தம்
அருட் பொழிவு...
நிறைவேற்றம்
கண்ட கற்பேறு...
இதன் உருவகமே
வரமருளும் இம்மரம்!



மொரார்ஜிபாய் வாழ்க!





நாடோடி

தபால் கட்டணங்களை உயர்த்தியதற்காக யார் வேண்டுமானாலும், நமது உதவிப் பிரதமமந்திரி திரு மொரார்ஜி தேசாய் அவர்களைக் குறை கூறட்டும். நான் என்னமோ அவரைவாழ்த்தத்தான்போகிறேன்.




டில்லியில் இருக்கும் என் பெண் அனு, முன்பெல்லாம் தினம் ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருப்பாள். ''தி. நகர், ராமநாதன் தெரு, 108ம் எண்ணிக்கையில் உள்ள கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பெண் லலிதா, இத்தனும்தேதி டில்லி புறப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அவளிடம் கொஞ்சம் சீயக்காய் கொடுத்து அனுப்புங்கள்'', ''பெரம்பூர் பாரதி தெரு, 208ம் எண்ணிக்கையில் உள்ள ஸ்ரீமதி அருள்தாஸ் இத்தனும் தேதி டில்லி புறப்பட்டுக் கொணடிருக்கிறார். அவரிடம் கொஞ்சம் அப்பளாம் கொடுத்தனுப்புங்கள்'', ''தாம்பரம், ஸ்டேஷன் தெரு 308ம் எண்ணிக்கையில் உள்ள மாணவன் சிதம்பரத்தின் மூலம் கொஞ்சம் வடாம் கொடுத்தனுப்புங்கள்'' என்றெல்லாம் அனு எழுதிக் கொண்டிருந்தது இப்போது நின்று விட்டது.

அனு இந்தமாதிரி என்னைச் சென்னை முழுதும் துரத்தியடித்ததால், சென்னையில் எந்தப் பேட்டையில் என்ன தெரு இருக்கிறது என்கிற விவரம் - எனக்குத் தெரிந்திருந்தது என்பது உண்மைதான். இந்த ஒரு யோக்கிய தாம்சத்தைக் கொண்டே நான் சென்னை மேயர் பதவிக்குப் போட்டியிட முடியும் என்பதும் உண்மைதான். ஆனால் சுண்டைக் காய் கால் பணம், சுமைகூலி முக்கால் பணம் என்பதுபோல் அது என்னை இப்படித் துரத்தியடித்தது எனக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

ஆனால் இப்பொழுதோ, தபால் கட்டணங்கள் உயர்ந்து விட்டதால், தமக்கு வேண்டிய வடாம், அப்பளாம், ஊறுகாய் முதலியவற்றை அனு டில்லியிலேயே வாங்கிக் கொள்ள நினைத்து விட்டாள் என்று நம்புகிறேன். (இதுவரையில் அப்படி நினைக்காவிட்டாலும், இந்தக் கட்டுரையைப் பார்த்த பிறகாவது நினைக்க ஆரம்பிக்க வேண்டும் என்று பகவானை வேண்டிக் கொண்டிருக்கிறேன்!)

முன்னெல்லாம், ''இந்தக் கார்டைக் கண்ட ஏழு நாட்களுக்குள் அதை அப்படியே காப்பி பண்ணி, உங்கள் நண்பர்கள் பெயருக்கு உங்கள் பெயரை அறிவிக்காமல் அனுப்பி வையுங்கள். இல்லையேல், ரத்தம் கக்கிச் சாவீர்கள். இதுவரை அப்படிச் செத்தவர்களின் எண்ணிக்கை 1237'' என்று அனுமதேயப்பயமுறுத்தல் கடிதங்கள் வருமே, அவைகூட இப்பொழுது நின்று விட்டன.

முன்னெல்லாம் நான் பயந்து கொண்டு, என் நண்பர்களுக்கு இக்கடிதங்களை எழுதி அனுப்புவேன். பெயர் போடாமல் எழுதி அனுப்ப வேண்டும் என்று விதி இருப்பதால் ஒன்பது பேரும் நான்தான் அனுப்பினேன் என்று தெரியாமல், எனக்கே ஆளுக்கொரு



கடிதம் எழுதி அனுப்புவார்கள். அவர்கள் தான் இதை அனுப்பியவர்கள் என்று தெரியாமல், நான் மீண்டும் அவர்களுக்குக் கடிதங்கள் எழுதி அனுப்புவேன். இப்படி இந்தக் கடிதங்கள் எங்களுக்குள் மீண்டும் மீண்டும் சுற்றி வந்து கொண்டு, எங்களுக்கு வீண் செலவு வைத்துக் கொண்டிருக்கும்.

இப்பொழுது தபால் கட்டணங்கள் உயர்ந்து விட்டதால், இந்த அநாமதேயக் கடிதங்கள் வருவது நின்று விட்டது.

முன்னெல்லாம் மாதம் முதல் தேதியானல் வீட்டுக்காரரிடமிருந்து வாடகைப் பணத்துக்காகக் கடிதம் வரும். இப்பொழுதோ, மே 15ந் தேதிக்கு முன்னரே, ஆறு பைசா செலவில் எனக்கு ஒரு கார்டு எழுதிப் போட்டு விட்டார். ''தபால் கட்டணங்கள் மே 15ந் தேதியிலிருந்து உயரப் போவதால், இனி மாதா மாதம் கடிதங்கள் வரும் என்று எதிர் பார்க்க வேண்டாம். நீங்கள்தான் வாடகையை அனுப்ப வேண்டும். அனுப்பா விட்டாலும் கடிதமே போட மாட்டேன். உங்களை நீங்களே ஞாபகப்படுத்திக் கொண்டு பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.''

இதற்கு மேலும் வாடகைப் பணத்தை அனுப்பி வைப்பதற்கு எனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? ஆகவே ஆறு மாத வாடகைப் பாக்கியை வைத்துவிட்டு, அதற்குப் பிறகு ஒழுங்காக, மாதா மாதம் வாடகை அனுப்புவது என்று நிர்மானித்திருக்கிறேன். ஆறு மாத வாடகைப் பாக்கி இருந்தால்தான் வீட்டுக்காரர் நம்மை வீட்டை விட்டுத் துரத்துவதற்குப் பயப்படுவார்.

கலியாண அழைப்புக்கள் கூட இனி குறைந்துவிடும் என்று தோன்றுகிறது. ஒரு விதத்தில் அதுவும் நல்லதுக்குத்தான்! டாக்ஸி வைத்துக் கொண்டு கலியாணத்துக்குச் செல்லும் செலவோடு (பஸ்ஸில் போகக்கூடாதா என்று கேட்பீர்களா? புதுப் புடவை கட்டிக் கொண்டு பஸ்ஸில் போவது அகௌரவம் என்று சரசு நினைக்கிறள்!) கலியாணப் பரிசாக ஏதாவது கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது இரண்டு செலவும் லாபம்.

''தங்களால்இயன்ற திரவிய சகாயம் செய்து உதவும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்'' என்று வரும் கும்பாபிஷேகக் கடிதங்கள், லட்சார்ச்சனைக் கடிதங்கள், ராமாயண சீரீஸ் கடிதங்கள் எல்லாம் கூட நின்றுவிட்டன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! ஆள் நிச்சயமாக ஏதாவது கொடுப்பார் என்ற நம்பிக்கை இருந்தால்தான் அவர்கள் புத்தக அஞ்சலுக்குப் பதினைந்து பைசா செலவழிக்க முடியுமே யன்றி, சும்மா நாடக நோட்டீஸ் போல் எல்லோருக்குமே ஒன்று அனுப்பிக் கொண்டிருக்க முடியுமா?

இத்தனை லாபம் கிடைக்கப் போகிறது என்று தைரியமாக வெளியே சொல்லிக் கொள்ளக்கூடப் பயமாக இருக்கிறது! இது திரு மொரார்ஜி தேசாயின் காதில் பட்டால் உடனே அவர், ''தபால் கட்டண உயர்வினல் ஏற்பட்ட அதிக லாப வரி'' என்று ஏதாவது ஒரு புது வரி போட்டுவிட்டால் என்ன பண்ணுவது என்று பயமாக இருக்கிறது!

தண்ணீர்ப் பொடி !

நீரை ஆவியாக மாற்றலாம், பனிக் கட்டியாக மாற்றலாம். ஆனால் பொடியாக மாற்ற முடியுமா? முடியும் என்கிறார்கள் ஜெர்மன் விஞ்ஞானிகள். பான் நகரத்துக்கு அருகிலுள்ள ரீன்க்பெல்டன் தொழிற்சாலையைச் சேர்ந்த விஞ்ஞானிகள் நீரைப் பொடியாக்கும் முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். மாவுபோல் இருக்கும் இந்தப் பொடி தொட்டால் ஜில்லென்றிருக்கிறது. ஊதினல் புகைபோல் போகிறது. இதில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு நீரும் பத்து விழுக்காடு ஸிலிஸிக் ஆஸிட்டும் கலந்து இருக்கின்றன.

ஸிலிஸிக் ஆஸிட் கலவையில் இருவகை உண்டு. ஒன்று நீரை ஈர்ப்பது, மற்றது நீரை எதிர்ப்பது.

ரீன்க்பெல்டன் விஞ்ஞானிகள், ஒரு சமயம் நீரை எதிர்க்கும் ஸிலிஸிக் ஆஸிட்டை நீருடன் கலக்க முடியுமா என்பதைச் சோதித்துப் பார்த்தார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடி, ஸிலிஸிக் ஆஸிட்டும் நீரும் கலக்காமல் தனித் தனியாக இருந்தன. அவற்றின் அளவை மாற்றி மாற்றிச் சோதனைகளை நடத்தினர்கள். நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு நீருடன் பத்து விழுக்காடு ஸிலிஸிக் ஆஸிட்டைக் கலந்து நன்றாகக் குலுக்கியபோது நீர் மறைந்து வெள்ளை மாவு ஒன்று மிஞ்சியதைக் கண்டார்கள். வியப்புத் தாங்காமல் சோதித்தபோது, அது நெடுங்காலம் இருக்கக்கூடிய நிலையான கலவை என்பது உறுதிப்பட்டது.

நீரையும் ஸிலிஸிக் ஆஸிட்டையும் கலந்து நன்றாகக் குலுக்கும்போது, ஏற்படும் நீர்த் திவலைகளுடன் ஸிலிஸிக் ஆஸிடின் நுண்துகள்கள் ஒட்டிக்கொள்கின்றன. இவை நீர் எதிர்ப்புத் தன்மையுடையவை, ஆகையால் நீர்த் துளிகள் சேர்ந்து ஓடுவதைத் தடுத்துவிடுகின்றன. 'நீர்ப் பொடியை' மருந்துகள் தயாரிக்கவும் வாசனைப் பொடிகள் தயாரிப்பதற்கும் பயன்படுத்த முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

ஆதாரம்: ''ஸயன்ஸ் ஜர்னல்'' தகவல்: மணிவாசகன்


வலியின்
கொடும் பிடியிலிருந்து
அவனுக்கு விடுதலையளியுங்கள்

தசை வலி
சுளுக்கு
மூட்டுக்களில் பிடிப்பு
வீக்கம் இவற்றிற்கு

மெதில் ஸாலிஸிலேட் சேர்ந்த

அயொடெக்ஸ்*

சாலச் சிறந்தது



அயொடெக்ஸ் சருமத்துக்குள் ஊடுருவிச் சென்று தசைகள் மீதும் நரம்புகள் மீதும் வேலை செய்து வலியை விரைவில் வெளியேற்றுகிறது.

உங்கள் குழந்தை சுளுக்கினால் அவதிப்படும்போது, விரைவில் வலியைப் போக்க அயொடெக்ஸை அழுத்தித் தடவுங்கள். அயொடெக்ஸில் சேர்ந்துள்ள பிரத்தியேகக் கலவை வலியை துரிதமாக, நிச்சயமாகப் போக்குகிறது.

வெட்டுக் காயங்களுக்கும், புண்களுக்கும் **அயொடெக்ஸ் ப்ளெயின்** உபயோகியுங்கள். அயொடெக்ஸ் கறை ஏற்படுத்துவதில்லை.

வலிக்கு நீங்கள்
நினைவில் வைக்க வேண்டிய பெயர்—
அயொடெக்ஸ்




SKF-692J

ஸ்மித் க்ளைன் அண்ட் ஃப்ரெஞ்ச் தயாரிப்பு

* ரெஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்


ASP/LT-2D/67 TAM
யார்சொன்னது
லக்மே
டால்கம்
விலையுயர்ந்-
தது
என்று?
தூவித் தூவி
மகிழுங்கள்
மேனிமுழுதும்!
Lakmé
TALC
Lakmé
தூவித் தூவி
மகிழுங்கள் ஆசை
தீர. மகரந்த மாரி
பொழியட்டும்
மெய்குளிர.
நாளெல்லாம் நேசக்
கதை சொல்லும் நறு
மணம். விரும்பிய
மாத்திரத்தில் கைக்
கெட்டும் விலைநயம்.
லக்மே டால்கம்- உரிமை
கொள்வீர்கள் உடலார.
உபயோகித்து மகிழ்ச்சிச்
சுழலிலே திளைக்க 'லக்மே
கரமான' நறுமணவகை
கள் நான்கு: லேவெண்
டர், நிர்வாண், வெட்டி
வேர், சந்தனம்.
லக்மே
டால்கம்



பார்த்துப் பல மாதங்களாகி விட்டனவே என்று நினைத்துக் கொண்டு தாம்பரத்திலுள்ள என் ஷட்டகர் வீட்டுக்கு ஒரு நாள் சென்றிருந்தேன். நான் சென்ற சமயம் சாப்பாட்டு நேரம் அல்ல. பிற்பகல் இரண்டு மணிக்கு மேல் ஆகியிருக்கும். சந்தேகமில்லை: அப்போதுதான் ஷட்டகர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார் ! சாதாரணமாகக் காலை பத்து மணிக்குச் சாப்பிட்டுவிடும் அவர் இன்று இவ்வளவு நேரம் கழித்துச் சாப்பிட நேர்ந்ததுகூட ஆச்சரியமில்லை. ஏதாவது நேரமில்லாது வேலை குறுக்கிட்டிருக்கலாம். ஆனால், இலை ஓரிடத்திலும், தான் ஓரிடத்திலுமாக அவர் ஒழுங்காக அமராமல் ஒவ்வொரு பருக்கையாக எடுத்துக் கொரித்துக் கொண்டிருந்தார். இந்தக் காட்சியைப் பார்த்தபோதுதான் எனக்குச் சற்று வியப்பாக இருந்தது.

இது மட்டுமா ?

மைத்துனியும், கையில் ஒரு கரண்டியில் பச்சடியோ கூட்டோ என்னத்தையோ கொண்டு வந்து, ''உம் கண்ணை மூடிக் கொள்ளுங்க ! சூ! மந்திரக்காளி! இதோ தச்சு ! போட்டாச்சு !'' என்று சொல்லி அவருடன் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன். நான் ஒருவன் அங்கு வந்திருப்பதைக்கூட அவர்கள் கவனிக்கவில்லை என்று தோன்றிற்று.

''இன்னும் கொஞ்சம் மம்மு! ஊஹூம் ! நேக்கு தச்சு மம்முதான் வேணும். ஊஹூம்!'' என்று ஒரு குழந்தை மழலை மொழியில் அடம் பிடிப்பது போல் ஷட்டகர் கொஞ்சும் மொழியில் பிடிவாதம் பிடித்தார்.

'' ஊஹூம்.... வெறும் மம்மு தச்சு ஒன்னே பலகாரம் பண்ணினா ஒடம்புக்கு ஆகாது. டாக்டர் மாமா வந்து ஊசி குத்துவார்! ஊம் பிடிவாதம், வேறும், கன்னேல் வியோ ராஜா....!'' இவ்வாறு ஷட்டகர் பாப்பாவை, மைத்துனிப் பாப்பா கடிந்து கொண்ட அழகைப் பார்த்ததும், எனக்கு மனம் தாளவில்லை !

''என்ன! வந்தவனைக்கூடக் கவனிக்காமல் ஏதோ பாப்பா விளையாட்டில் மூழ்கிக் கிடக்கிறீர்களாக்கும் ! சீக்கிரமே இன்னும் நாலைந்து பாப்பாக்களுக்குப் பெற்றோர்களாக வேண்டும் என்று ஆசீர்வதிக்கிறேன். இப்போது நான்குதானே இருக்கின்றன ?... இந்த நான்கும் கல்யாணமாகி அங்கங்கே பறந்தோடி விட்டன!'' என்றேன்.

இதன் பிறகுதான் அந்த இருவருக்கும் சுயநினைவு வந்தது போல் இருக்கிறது. ஷட்டகர் சரியாக உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினார்.

''நீயும் சாப்பிடுகிறாயா?'' என்று அவர் கேட்டதுதான் தாமதம், எனக்குக் கோபம் பொத்துக் கொண்டே வந்து விட்டது.

''என்ன சமாசாரம், என்ன இதெல்லாம்? மழலை பேசுகிறீர். மம்மு சாப்பிடுவதாகக் கூறினீர். மம்முவாவது, கொம்முவாவது ? இவ்வளவு நேரம் கழித்துச் சாப்பிடக் காரணம் என்ன?'' என்று கேட்டேன்.

''ஒன்றுமில்லை. நாலைந்து மாதங்களாக வீட்டில் கல்கத்தாவிலிருந்து வந்திருந்த பேரக் குழந்தை, ஒரு கலகலப்பை உண்டாக்கி வந்தது. அதனோடு பேசி, விளையாடி மகிழ்ந்ததில் நாங்களும் குழந்தைகளாகவே மாறிவிட்டோம். எங்களை அறியாமலே பேரக் குழந்தை போல் பேசுகிறோம். அவன் ஊருக்குப் போய் இரண்டு நாளாகிறது. வீடு வெறிச்சோடி ஒரேயடியாக அவன் பிரமையாகவே இருக்கிறது.''

''அப்படியா? குழந்தை ஊருக்குப் போய் விட்டானா?''

'' ஆமாம். ஆசைப்பட்டு எடுத்துக் கொண்டு வந்திருந்தோம். பிளேனில் அவன் அப்பாவே வந்திருந்து அவனை அழைத்துக் கொண்டு போய் விட்டார் ! இந்த நேரத்துக்கெல்லாம் அவனை நான் தூக்கிக் கொண்டு டிப்போவுக்குப் பால் வாங்கப் போவேன். வழியில் ஏதாவது மாடுகளைக் கண்டு விட்டால் அவன் குதிகுதி என்று குதிப்பான். 'ம்மா! ம்மா!' என்று சொல்லுவான்!'' என்று சொல்லி வந்த மைத்துனி திடீரென்று மழலையில் திரும்பி விட்டாள்.

''உங்களுக்கு அப்பிச்சி, நானும்?.... தோச்சே, கக்கு அப்பிச்சி, முட்டாயி அப்பிச்சி....?''

'வேதாளம்' மறுபடியும் முருங்கை மரம் ஏறின கதைதான். சரியாப் போச்சு போ' என்று நினைத்துக் கொண்டு, ''என்ன டிபனோ? அப்பிச்சி இப்பிச்சி என்றும் நான் பதில் சொல்ல மாட்டேன்!'' என்று கூறினேன்.

''தோசை!'' என்றார் ஷட்டகர்.

''சரி, சாப்பிடுகிறேன்'' என்றேன் நான்.

'' 'ஆச்சை ஆச்சை, தோசை! அம்மா வீட்டுத் தோசை!' என்று குழந்தை கூறுவான்....!'' ஆரம்பித்து விட்டார் ஷட்டகர் மறுபடியும் குழந்தை மொழியில்: சரி சரி: இதற்கு ஏதாவது ஒரு வழி பண்ண வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு, டிபன் சாப்பிட்டுவிட்டுப் புரசைவாக்கத்தில் உள்ள என் வீட்டுக்குத் திரும்பி விட்டேன்.

வீட்டில், கோடை லீவுக்காக வந்திருந்த மருமகன், மருமகள் இருவரும் தொட்டியில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை எழுப்பி உட்கார வைத்துக் கொண்டு ஒரே இரைச்சலும் ஆரவாரமும் செய்து கொண்டிருந்தார்கள் !

என்னைக் கண்டதும், ''ஹலோ ! வாங்க சார் ! வாங்க. வாங்க அண்ணாச்சி! ஏ மாமா அண்ணாச்சி ! வணக்கம் வாங்க!'' என்றான் மருமகன்.

''நாங்கள் இப்போ மைக் டெஸ்டு பண்ணுகிறோம். ஹலோ! தொட்டில்தான் எங்களுக்கு மீட்டிங் நடத்துகிற மேடை. ஹலோ மைக் டெஸ்டிங்.... ஒன்...டு.... த்ரீ......! நண்பர்களே! தாய்மார்களே ! தம்பிமார்களே! நன்றி வணக்கம்....!'' என்று ஆரம்பித்து விட்டான் மருமகன்.

அன்று மாலையே இருவரையும் அழைத்துக் கொண்டு தாம்பரம் வந்தேன். ஷட்டகர் முன் அவர்களை விட்டதும், மருமகனை அவர் அப்படியே வாரித் தூக்கிக் கொண்டார். ''என்ன சார் ! அப்படி என்னை மேலே தூக்கிட்டீங்களே ! ஜாக்கிரதை! என்னைக் கீழே போட்டியோ, டுமீல்....டுமீல்....டுப்... துப்பாக்கியாலே.... டபார்....!'' என்று அதட்டினான் மருமகன்.

மைத்துனியைப் பார்த்து மருமகள், ''அட, என்ன மாமி! சீக்கிரம் டிரஸ் பண்ணிக் கொண்டு வாங்க மாமி! எங்கேயாவது வாக் போய்ட்டு வரலாம்.... என்னமோ குழந்தை போல தத்தித் தத்தி நடக்கிறீங்களே.... செல்லப் பாப்பாவா நீங்க?'' என்று கேட்டு ஒரு போடு போட்டான்.

''என்னடா இது ? பெரியவங்களைப் போல் பேசுகிறதே, இந்தச் சிறுவாண்டுகள்?'' என்று கேட்டார் ஷட்டகர்.

''இவர்களுடைய சகவாசம் அப்படி. இந்த இரண்டு பேரும் வீட்டிலே எங்கே தங்குகிறார்கள்? பக்கத்து வீட்டுக்காரர்கள் அழைத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். மேடைப் பிரசங்கமெல்லாம் அவர்கள்தான் இவர்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். பொதுக்கூட்டங்களுக்கு ஒலிபெருக்கி அமைத்துக் கொடுக்கும் கம்பெனி ஒன்று நடத்துவதால், அவர்களுடைய மேடைப் பேச்சுக்குக் கேட்பானேன்? இந்த இரண்டு குழந்தைகளும் அவர்களோடு பழகிப் பழகி, பெரிய பேச்சாளர்களாகியிருப்பதால், இவர்கள் முன் உங்கள் மழலை மொழியெல்லாம் பறந்து போய்விடும்! நான்கு தினங்கள் இவர்கள் இங்கேயே இருக்கட்டும். இவர்களுடன் பழகிப் பயனடையுங்கள்!'' என்று கூறிவிட்டு இருவரையும் ஷட்டகர் வீட்டில் அவர்களுடன் அரட்டையடிக்க விட்டு வைத்தேன்!

பூவுடன் சேர்ந்து நார் மணம் பெறுவதும் உண்டு. அதே சமயத்தில் நாருடன் சேர்ந்த பயனாகப் பூவுக்கு நாரின் மணம் ஏற்பட்டு விடுவதும் உண்டு அல்லவா ?

வட்டமேஜை

- மறக்கலாமா?
- நிறைகுடம்
- அபலையின் கண்ணீர்

மூன்றெழுத்து பற்றித் தங்கள் விமரிசனம் கண்டேன். படத்தின் குறை நிறைகளை உள்ளது உள்ளபடியே எழுதியிருந்தீர்கள்.. விமரிசனம் செய்திருந்த முறை புதுமையாக இருந்தது என்று கூறுவதோடு தங்களது விமரிசனத்துக்கு 'சபாஷ்', 'நன்று' என்று மூன்றெழுத்துக்களால் பாடுவதைத் தவிர வேறு தோன்றவில்லை எனக்கு.

மதுரை—13
23—5—68 அ. ஐயப்பன்

''மூன்றெழுத்துப் பட விமரிசனத்தில் 'எம். கே. டி. படங்களுக்குப் பிறகு 25 வாரங்கள் ஓடி ரிகார்டு ஏற்படுத்திய ''நான்'' படம் என்று விமரிசகர் எழுதியிருக்கிறார். ''எங்கள் வீட்டுப் பிள்ளை''யை மறக்கலாமா?

சென்னை—5
23—5—68 பி. ஆர். ராஜசேகரன்

10—5—68 அன்று பிற்பகல் 2—30மணிக்குத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஜப்பானிலிருந்து விமானம் மூலம் ஹாங்காங் விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தபோது ''அண்ணா வாழ்க!'' என்ற கோஷம் விண்ணை முட்ட ஹாங்காங் தமிழ் கலாசாரக் கழகத்தின் அங்கத்தினர்களும், தமிழ் அன்பர்களும் வரவேற்றனர். மறு நாள் பிற்பகல் 12—30 மணிக்கு அண்ணாவை வரவேற்றுப் பிரபல மாண்டரின் ஹோட்டலில் விருந்து நடந்தபோது அறிஞர் அண்ணா சொற்பொழிவாற்றினார்கள். அண்ணாவின் ஹாங்காங் விஜயம் முழு வெற்றி அடைந்ததற்குக் காரணம் இந்திய தூதரக முதல் அதிகாரி திரு சீனிவாசன் அவர்களே. அண்ணா அவர்கள் இங்கு தங்கியிருந்த இருபத்துநாலு மணி நேரத்தில் பல நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டார்.

ஹாங்காங், செயலாளர்,
15—5—68 தமிழ் கலாசார சங்கம்

விஞ்ஞானிகள் வரிசையில் டாக்டர் சுவாமிநாதன் அவர்களைப் பற்றி எழுதியுள்ளதைப் பார்த்தேன்.

1967 நவம்பர் மூன்றாவது வாரம் ஒரு நாள் (டில்லியில்) விஞ்ஞானி டாக்டர் சுவாமிநாதன் அவர்களை நேரில் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. நான் கேட்ட பல கேள்விகளுக்கும் ரொம்ப நிதானமாகவும் பொறுமையாகவும் பதில் தந்தார். அவர்தான் சுவாமிநாதன் என்பது முதலில் எனக்குத் தெரியாது. கேள்விக் கணைகள், பதில்கள் முடிந்த பிறகு யோக க்ஷேமம் விசாரித்த போதுதான் திரு சுவாமிநாதன் அவர்கள் தம்முடைய ஊர் கும்பகோணம் பக்கம் என்று சொன்னார்.

இவ்வளவு பட்டங்களும் பெற்றுப் பலப் பல ஆராய்ச்சிகளில் வெற்றி கண்ட ஒரு மேதை நிறைகுடம் ததும்பாது என்பதற்கு உதாரணமாக விளங்கினார்.

மாயவரம்,
20—5—68 ஏ. எஸ். கணேசன்

என் கணவர் ஆரம்பப் பள்ளியில் ஆசிரியராய் இருந்து கடந்த 1963 செப்டம்பரில் திடீரெனக் காலமானார். நான் மூன்று குழந்தைகளுடன் வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறேன்.

மேன்மை தங்கிய ஜனாதிபதி இராதா கிருஷ்ணன் அவர்கள் ஆதரவில் திக்கற்ற ஆசிரியர் குடும்ப நல நிதிக்காக நிறுவப்பட்ட நிதியிலிருந்து எனக்கு உதவி கோரி 19—2—66ல் விண்ணப்பித்தேன். தில்லியிலிருந்து சென்னை அரசாங்கக் கல்வி இலாகா காரியதரிசி அலுவலகத்துக்கு என் விண்ணப்பம் அனுப்பப்பட்டதாகவும் விரைவில் உதவி அளிக்கப்படும் எனவும் பதில் வந்தது. அதன் பிறகு இது வரை எனக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை. விலைவாசிகள் இருக்கும் நிலையில் நான் குழந்தைகளைப் பராமரிக்க இயலாத நிலையில் தவிக்கிறேன். என் நிலையை எடுத்துக் கூறி வழி செய்வாரும் இல்லை.

ஆனால் சென்னை நிதி இலாகா பிரதம காரியதரிசி என்பவருக்கு எழுதிக் கேட்கச் சொல்லியிருந்தார்கள். நான் அதன்படி எழுதிக் கேட்டதில் அவர்கள் மூன்று பக்கங்கள் பல கேள்விகளைக் கேட்டும், கணவருடைய சர்வீஸையும் உதவித் தொகை மாதா மாதமா, அல்லது மொத்தமாகவா எவ்வளவு தேவை என்றும் கேட்டிருந்தார்கள். என் கணவரின் கடைசிச் சம்பள விகிதமும் அதற்கு உள்ளூர் எம். எல். ஏ. வின் கையெழுத்தும், அவர் வேலை செய்த பள்ளித் தலைமை ஆசிரியரின் விண்ணப்பமும் சேர்த்து அனுப்பச் சொன்னார்கள். ஆனால் இது வரையில் மூன்று கடிதங்கள் அதைப் பற்றி ஞாபகப் படுத்திப் போட்டும் இந்த ஏழை அபலையின் கஷ்ட நிலைமையைக் கவனிக்கவில்லை. சுருங்கக் கூறினால் என் உயிர் ஏன் இன்னமும் இருக்கிறது என்று நினைக்கத்தான் தோன்றுகிறது.

தாடாளன் கோயில்
வடக்கு மடவிளாகம் கௌசல்யா

ரூபாயின் மதிப்பு குறைவாயிருந்தாலும் ''ஒரு ரூபாயின்'' கருத்து உயர்வாயிருந்தது.

சென்னை—5
24—5—68 நா. ராஜாராமன்


Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி

ADDISON

ENGINEERS' CUTTING TOOLS



At the Tool works of Addison & Company we have just one object—to be precise and to build tools which are highest in accuracy, in quality and in length of effective service.

• TWIST DRILLS • MILLING CUTTERS • REAMERS • INVOLUTE GEAR CUTTERS • SLITTING SAWS • GROUND THREAD TAPS • CARBIDE TIPPED TOOLS • TOOL HOLDER BITS.

ESTABLISHED
1873

ADDISON & COMPANY LIMITED, MADRAS-2.

(A Member of the Gauge and Tool Makers' Association, U. K.)

*DISTRIBUTORS IN INDIA: J. N. Marshall & Co., Bombay - for Western India
William Jacks & Co., Ltd., Calcutta, Delhi & Branches - for North & Eastern India
Batliboi & Co.; Private Limited, Madras - for Madras, Andhra & Kerala States
Addison & Co., Limited, Bangalore - for Mysore State*

OVERSEAS DISTRIBUTORS in U. S. A.; Canada, Brazil; U. K., Holland, Belgium Denmark, Germany, Italy, Greece, Turkey; Iran, Singapore, Malaysia, Thailand Hongkong, Philippines, Australia & New Zealand.